விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 தை 25 புதன்கிழமை (08.02.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 051

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO 100
SLS 107 தரம் கொண்டதும்
வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இலங்கை வரும் அமெரிக்க இராஜதந்திரிகள் போர்க்குற்றம் பற்றி அரசாங்கத்துடன் பேசுவர்

### ஏ.எப்.பி.செய்தி நிறுவனம் தகவல்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள அமெரிக்க உயர்மட்ட இராஜதந்திரிகள் இருவர் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல ஹோட்டலில் விழுந்து படுகாயம்

### அவுஸ்திரேலியாவில் சம்பவம்



(சிட்னி)

ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஹோட்டல் பெல்கனியிலிருந்து வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மெல்பர்னில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த அமைச்சர் பெல்கனி (24ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் இரகசிய தடுப்பு முகாமில் பாலகுமாரன், யோகி ஆகியோர் உள்ளனர்

### சிறிலங்கா கார்டியன் பரபரப்புத் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தலைவர்களான வே.பாலகுமாரன் மற்றும் யோகரட்ணம் யோகி ஆகியோர் படைத்தரப்பின் இரகசிய தடுப்பு முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா கார்டியன் எனும் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.




வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இவர்கள் இருவரும் கொல்லப்பட்டு விட்டதாக அமைச்சர் டீ.யூ.குணசேகர முன்னர் கூறியிருந்த நிலையில் இலங்கை படைத்தரப்பின் மூத்த அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி இச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் உள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்ட இரகசியத்தடுப்பு முகாம் ஒன்றில் இவர்கள் இருவரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஏனைய மூத்த தலைவர்களுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அதிகாரி கூறியதாக சிறிலங்கா கார்டியன் குறிப்பிட்டுள்ளது.

இது (24ஆம் பக்கம் பார்க்க)

## 2012ஆம் ஆண்டின் இறுதிக்குள் யாழ்ப்பாணத்தில் சீரான மின்சாரம்

### அடிக்கல் நாட்டு விழாவில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க உறுதி



(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் யாழ்ப்பாணத்திற்கு சீரான மின் விநியோகம் வழங்கப்படும் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் வட பிராந்திய பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று யாழ். பழைய பூங்க வளாகத்தில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 2009 ஆம் ஆண்டு வடக்கின் வசந்தம் திட்டம் வந்த போது யாழ். மாவட்டத்தில் நூற்றுக்கு 50 வீதமே மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது.

இன்று நூற்றுக்கு 80 வீதம்மின்சாரம் இருக்கிறது நகரத்தில் நூற்றுக்கு 95 வீதம் மின்சாரம் வழங்கப்படுகிறது.

வன்னிப்பிரதேசத்தில் மன்னார் கிளிநொச்சி தவிர்ந்த ஏனைய இடங்களில் மின்சாரம் இருக்கவில்லை. மன்னாரில் தற்போது நூற்றுக்கு 55 வீதம் மின்சாரம் வழங்கப்படுகிறது. வவுனியாவில் நூற்றுக்கு 70 வீதம் (24ஆம் பக்கம் பார்க்க)



திருநெல்வேலிச் சந்தையில் புதிதாக அமைக்கப்பட்ட மாடிக் கட்டிடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, அ.விநாயகமூர்த்தி உள்ளிட்டோர் காணப்படுகின்றனர்.

## வடக்கில் இருந்து இராணுவம் அகற்றப்படல் வேண்டும்

### நாம் இலங்கையர் அமைப்பு கருத்து

(கொழும்பு)

வடக்கிலிருந்து இராணுவத்தினர் அகற்றப்பட வேண்டுமென நாம் இலங்கையர் அமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் உந்துல் பிரேமரட்ன தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆறு படுகொலைச் சம்பவங்களும் இரண்டு தற்கொலைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர்,

அதிகளவில் இராணுவ பிரசன்னம் காணப்படும் நிலையில் குற்றச் செயல்கள் இடம்பெற்று வருகின்றன. அதிகளவு இராணுவத்தினர் வடக்கில் குவிக்கப்பட்டுள்ளமை பிரதேசமக்களின் இயல்பு வாழ்க்கையை பாதிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே வடக்கில் குவிக்கப் பட்டுள்ள இராணுவத்தினர் வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியது (24ஆம் பக்கம் பார்க்க)

## அமெ.நீதிமன்ற தூதருடன் கூட்டமைப்பு சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் ஆகியோர் அமெரிக்க இராஜங்கதிணைக்கள, உலக குற்றவியல் நீதிமன்ற தூதுவர் ஸ்டெப்பன் ரெப்பை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பு நேற்று பகல் கொழும்பில் இடம் பெற்றதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின் போது தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் பல பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-8,11)

## உண்மைகளை கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையானது அல்ல

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் சில கேள்விகளுக்கு பதில் இல்லை என பிரித்தானியா அறிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் சில விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை என இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீன் தெரிவித்துள்ளார்.

பல கேள்விகளுக்கு பதிலளிக்காமையிலேயே ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் பிரித்தானிய அமைச்சர் அலிஸ்டயர்பர்ட் (24ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மாலைதீவு ஜனாதிபதி இராஜினாமா
# ஆர்ப்பாட்டங்களால் ஏற்பட்ட முடிவு



மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நஷீட் அப்பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார். சிரேஷ்ட நீதிபதியொருவரை கைது செய்வதற்கு ஜனாதிபதி மொஹமட் நஷீட் உத்தரவிட்டதையடுத்து அவருக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்று வந்தன.

இந்நிலையிலேயே ஜனாதிபதி மொஹமட் நஷீட் நேற்று இராஜினாமா செய்துள்ளதாக அந்நாட்டு இராணுவம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி நஷீட் இராஜினாமா செய்து உப ஜனாதிபதி மொஹமட் வாஹிட் ஹசனிடம் அதிகாரத்தை கையளிக்க இணங்கியதாக பிரிகேடியர் அஹமட் ஷியாம் தெரிவித்துள்ளார்.

முன்னதாக அதிகாரிகள் சட்டவிரோத உத்தரவுகளை விடுப்பதாக கூறி மாலைதீவு பொலிஸார் மேற்கொண்டுவந்த ஆர்ப்பாட்டத்தை நிறுத்துமாறு ஜனாதிபதியினால் விடுக்கப்பட்ட உத்தரவை பொலிஸார் ஏற்க மறுத்தனர். இதையடுத்து இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

தலைநகர் மாலேயில் அரசாங்கத்துக்கு ஆதரவாகவும் எதிராகவும் அருகருகே இடம் பெற்று வந்த ஆர்ப்பாட்டங்களுக்கான பொலிஸ் பாதுகாப்பை வாபஸ் பெறும்படி உத்தரவிடப்பட்டது. பொலிஸ் பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டதையடுத்து இரு தரப்பினருக்குமிடையில் மோதல் ஏற்பட்டதால் சிலர் காயமடைந்தனர்.

ஜனாதிபதி நஷீட்டுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்துக்கு ஜனாதிபதி நஷீட் சென்று ஆர்ப்பாட்டத்தை கைவிடக் கோரினார். எனினும் அதற்கு மறுப்புத் தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி நஷீட்டுக்கு எதிராக கோஷம் எழுப்பினர்.

மாலைதீவு அரசாங்கத்தை விமர்சித்த ஒருவரை கைது செய்தமை சட்டவிரோதமானது என அந்நாட்டின் குற்றவியல் நீதிமன்றத்தின் பிரதம நீதிபதி அப்துல்லா மொஹமட் தீர்ப்பளித்ததையடுத்து நீதிபதி அப்துல்லா மொஹமட் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதன் பின் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வந்தன. மாலைதீவு உப ஜனாதிபதி, உயர்நீதிமன்றம், மனித உரிமைகள் ஆணைக்குழு, நீதிச் சேவைகள் ஆணைக்குழு, மனித உரிமைகளுக்கான ஐ.நா அலுவலகம் என்பன நீதிபதி அப்துல்லா மொஹமட்டை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி வந்தன.

30 வருடங்கள் ஜனாதிபதியாக பதவி வகித்த முன்னாள் ஜனாதிபதி மௌமூன் அப்துல் கயூமை 44 வயதான மொஹமட் நஷீட் 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர் தலில் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இதுவரை ஜனாதிபதியாக பதவி வகித்த மொஹமட் நஷீட் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக நேற்று தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து வாஹிட் ஹசன் ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

## தகவல் கொடுக்காததால் 18 மாத சிறைத்தண்டனை

தமிழீழ விடுதலைப்புலிகளின் தற்கொலை குண்டுதாரிகள் பற்றிய தகவல்களை மறைத்த பெண் ஒருவருக்கு நீதிமன்றம் 18 மாத சிறைத்தண்டனை விதித்துள்ளது.

புலி உறுப்பினர்கள் பற்றிய தகவல்கள் தெரிந்தும் அவற்றை பாதுகாப்புத் தரப்பினருக்கு தெரிவிக்கவில்லை என குற்றம் சுமத்தப்பட்டதை அடுத்து கொழும்பு உயர் நீதிமன்ற நீதவான் சுனில் ராஜபக்ஷவினால் அந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குறித்த பெண் குற்றம் இழைத்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்திருந்தது. (ந-8,11)

## மீசாலை விக்னேஸ்வராவில் முறைசாராக் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் கற்கை நெறிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும்

பாடசாலை அதிபர் ரி.அம்பலவாணர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் கற்கை நெறி விண்ணப்பித்த மாணவர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந-29)

## திருநெல்வேலி சந்தையின் புதிய மாடி கட்டிடம் திறப்பு

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திருநெல்வேலிச் சந்தையின் மாடிக்கட்டிடம் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கப்பட்டது.

நேற்று நண்பகல் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப. வசந்தகுமார் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ந)

## பொன்சேகாவை விடுதலை செய்யாவிட்டால் மக்கள் ஆத்திரமடைவர் - கரு ஜயசூரிய



பொதுமக்களின் கருத்துக்களுக்கு அரசாங்கம் செவிமடுக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு நாட்டு மக்கள் ஏற்கெனவே அரசாங்கத்திடம் கோரியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சரத் பொன் சேகா கைது செய்யப்பட்டு இரண்டாண்டுகள் பூர்த்தியாகும் இன்று பாரியளவிலான போராட்டமொன்று நடத்தப்படவுள் ளது. கொழும்பு ஹல்ஸ்ட்ரொப் நீதிமன்ற வளாகத்திற்கு அருகாமையில் நடைபெறவுள்ள இந்த போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அவர் நாட்டு மக்களை கேட் டுள்ளார்.

வெலிக்கடைச் சிறையில் தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவை பார்வையிட்டு திரும்பியதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து வெளியிட்ட கரு ஜயசூரிய,

நாட்டில் பாரிய குற்றச் செயல்களில் ஈடு பட்ட குற்றவாளிகள் எந்தவிதமான கோரிக் கையும் விடுக்காது விடுதலை செய்யப்படும் நிலையில், சரத்பொன்சேகாவை ஏன் விடுதலை செய்ய முடியாது என கேள்வி எழுப்பினார்.

அரசியல் கட்சிகளும், சமூக அமைப்புக்க ளும் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு அரசாங்கத்திடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளன.

அவரை விடுதலை செய்ய இன்னமும் கோரிக்கை விடுக்கப்பட வேண்டுமென எதிர்பார்ப்பது அநாவசியமானது. சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படாவிட்டால் மக்கள் ஆத்திரமடையக் கூடும் என கரு ஜயசூரிய, அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத் துள்ளார். (ந-8,11)

## இலங்கை அகதிகளுக்கு கனடாவில் நெருக்கடி

கனடாவில் தஞ்சம் புகுந்துள்ள 568 அகதிகள், அவர்களுக்கு முன்னர் அகதிகளாக அங்கு சென்ற இலங்கையர்களை விட கடினமான சூழ்நிலையை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

த நெசனல் போஸ்ட் இணையத்தளம் இதனை தெரிவித்துள்ளது.

ஓசியானிக் லேடி கப்பலில் சென்ற 76 பேரில் ஒருவர் மாத்திரமே அகதி அந்தஸ்து பெற்றுள்ளார்.

மற்றொருவரை நாடு கடத்த உத்தரவிடப்பட் டுள்ளது.

சிலரது கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் கனடிய குடிவரவு சபை தெரிவித்துள்ளது.

இதேபோன்று சன் சீ கப்பலில் சென்ற 400க்கும் அதிகமான அகதிகளில் மூவர் மாத்தி ரமே அகதி அந்தஸ்து பெற்றுள்ளனர்.

ஏனையவர்கள் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே கனடாவிற்கு தங்களை அழைத்துச் செல்லவென சுமார் 600 இலங்கையர்கள் ஆட்கடத்தல்காரர்களுக்கு பணம் வழங்கியுள்ளீதாக கனேடிய குடிவரவு சபை தகவல் வெளியிட்டுள்ளது. (ந-8,11)

## எரிந்த நிலையில் வயோதிப மாதின் சடலம்

வடமராட்சி துன்னாலை பகுதியில் வயோதிபப் பெண்மணி யொருவரின் சடலம் எரிந்த நிலையில் நேற்று முன்தினம் 11.30 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட் டுள்ளது.

மனோன்மணி (வயது85) என்ற வயோதிபப் பெண்மணியின் சடலமே இவ்வாறு எரிந்த நிலையில் மீட்கப்பட்டது.

மரண விசாரணையின் பின் சடலம் நேற்று உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ந-11,24)


வர்த்தகப் பெருமக்களே
வியாபாரத்தை பதிவு செய்தல்
BUSINESS REGISTRATION
பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
VTL Management Services (Pvt) Ltd
No. 01, Deanston House,
Deanston Place, Colombo 03.
T.P. 072-9994777/011-7902938/
011-4343339



EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)


## தப்பிச்சென்ற கைதியை பொலிஸார் மடக்கிப்பிடித்தனர்

(யாழ்ப்பாணம்)

தனது மனைவியைக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் கரணவாய் சோளங்கன் பகுதியில் வைத்து நெல்லியடிப் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

சில வருடங்களுக்கு முன் கொற்றவத்தை பகுதியில் தனது மனைவியை கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரஸ்தாப நபர் பிணையில் விடுவிக்கப்பட்டு நேற்று முன்தினம் மீண்டும் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இந் நிலையில் கைது செய்யப்பட்ட குறித்த நபர் நேற்று முன்தினம் தப்பிச்சென்று சோளங்கன் பகுதியில் பதுங்கியிருந்தவேளை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று நெல்லியடிப் பொலிஸார் அவரை சுற்றி வளைத்து மடக்கிப் பிடித்தனர். (ந-11,24)

## சட்டசபை விவாதத்தின் போது ஆபாசபடம் பார்த்த அமைச்சர்கள்!

இந்தியாவின் கர்நாடக மாநில சட்டசபையில் அமைச்சர்கள இருவர் ஆபாசபடம் பார்த்ததாக செய்திகள் வெளியானதையடுத்து பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் லஷ்மன் சவாதி மற்றும் சி.சி. பாட்டீல் ஆகிய இருவரும் நேற்று செவ்வாய்க்கிழமை சட்டசபை விவாதம் நடந்து கொண்டிருந்த போது கையடக்க தொலைபேசியில் ஆபாசப்படம் பார்த்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சபை விவாதத்தை ஒளிப்பதிவு செய்து கொண்டிருந்த உள்ளூர் தொலைக்காட்சி அலைவரிசை யொன்று இவர்கள் கையடக்க தொலைபேசியில் படம் பார்க்கும் காட்சியையும் ஒளிபரப்பியது. அவ்வமைச்சர்கள் ஆபாச படம் பார்த்ததாக அத் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

இச் செய்தியையடுத்து அமைச்சர் சவாதியின் வீட்டை சூழ்ந்த ஆர்பாட்டக்காரர்கள் கல் வீச் சில் ஈடுபட்டனர். இச் சர்ச்சை குறித்து பாரதிய ஜனதா கட்சி உத்தியோக பூர்வமாக கருத்து வெளியிடப்படவில்லை. அமைச்சர் வி.சதானந்த கௌடா உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு பெங்களூருக்கு வெளியே சென்றுள்ளார். இதே வேளை அவ்வமைச்சர்கள் பாலியல் வல்லுறவு தொடர்பான செய்தியொன்றை பார்த்துக் கொண்டிருந்ததாக பி.ஜே.பியை சேர்ந்த சிலர் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர்கள் மேற்படி படத்தை பார்த்துக் கொண்டிருந்த போது பிஜாபூர் மாவட்டத்தில் பாகிஸ்தான் கொடி ஏற்றப்பட்டமை மற்றும் மாநிலத்தில் நிலவும் பதற்ற நிலை குறித்த விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவ் அமைச்சர்கள் நடத்ததை சட்ட சபை வரலாற்றில் ஒரு கரும்புள்ளி என கர்நாடக மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் எச்.டி குமாரசுவாமி கூறியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்கு கர்நாடக சட்டசபை சபாநாயகர் கே.ஜி. போப்பையா உத்தரவிட்டுள்ளார். (ந-11,8)

# இன்று ஒரு தகவல்

## பேராசை

அள்ள அள்ளக் குறையாதது அட்சயபாத்திரம். அது நமக்குத் தெரியும். கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஆனால், போடப்போட நிரம்பாத ஒரு பாத்திரம் உண்டு. அது என்ன தெரியுமா?

எம்மில் பலபேரிடம் அந்தப் பாத்திரம் உண்டு. அது தான் 'பேராசை' என்ற பாத்திரம். அதை நிறைவு செய்யவே முடியாது.

பேராசை பற்றி சூஃபி இலக்கியத்திலே ஒரு பிரபல மர்ன கதை இருக்கிறது. அதை சுவாமி சுகபோ தானந்தா எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

ஒரு மன்னர் நகர்வலம் வந்து கொண்டிருந்தார்.

அவ்வேளையில் ஒரு பிச்சைக்காரன் மன்னர் எதிரிலே வந்தான்.

"ஐயா! பிச்சை கொடுங்கள்" என்றான்.

என்னுடைய அமைதியைக் கெடுக்காதே... போ! என்றார் மன்னன்.

அவன் சிரித்தான்.

"அரசே உங்களின் அமைதி கெடக்கூடிய நிலையிலே இருந்தால், அதற்குப் பெயர் அமைதியே கிடையாது" என்றான்.

தனக்கு எதிரிலே நிற்பது வெறும் பிச்சைக்காரன் இல்லை... யோகி! என்பதை மன்னர் புரிந்து கொண்டார்.

"துறவியே! உங்களுக்கு என்ன வேண்டுமென்றாலும் கேளுங்கள் கொடுக்கிறேன்!" என்றார்.

அந்தத்துறவி மறுபடியும் சிரித்தார்.

"அரசே! உங்களாலே முடியாததை எல்லாம் கொடுக்க முடியும் என்று சத்தியம் செய்யாதீர்கள்" என்றார்.

மன்னருக்கு கோபம் வந்துவிட்டது. என்ன இவர் இப்படி சொல்கிறார் என்று நினைத்தார்.

நகர்வலம் வருவதைப் பாதியிலே நிறுத்தினார்.

"வாருங்கள் அரண்மனைக்கு!" என்றார். துறவியை அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்தார்.

துறவி தன்னிடமிருந்த பிச்சைப் பாத்திரத்தை நீட்டினார். "இது நிறைய எனக்குப் பொற்காசுகள் வேண்டும்" என்றார்.

"இவ்வளவுதானா?" என்று சொல்லிக்கொண்டு கையைத்தட்டினார் மன்னர். ஒரு பெரிய தாம்பாளம் நிறைய, பொற்காசுகள் வந்து சேர்ந்தது. அதை அள்ளிப் போட்டார். போடப்போட அந்தப் பிச்சைப் பாத்திரம், பொற்காசுகள் அத்தனையையும் உள்ளே வாங்கிக் கொண்டே இருக்கிறது.

மூட்டை மூட்டையாகப் பொற்காசுகள் கொட்டி முடிந்தது. அது விழுங்கிக் கொண்டே இருக்கிறது. கடைசி வரை அந்தப் பிச்சைப்பாத்திரம் நிரம்பவேயில்லை. அரசனிடம் இருந்த கர்வம் போய்விட்டது.

அப்படியே 'பொத்' என்று துறவி காலிலே விழுந்தார்.

அப்போது அந்தத்துறவி சொன்னார்; "மன்னா! இந்தப் பிச்சைப் பாத்திரத்தை உங்களாலே மட்டுமல்ல... வேறு யாராலேயும் நிரப்ப முடியாது. அதற்கு என்ன காரணம் என்றால்... இது சாதாரண பிச்சைப் பாத்திரம் அல்ல...

"பேராசைகளுடன் வாழ்ந்து செத்துப்போன ஒரு மனிதனின் மண்டையோடு இது!" என்றார்.

இறந்த பின்னரும் நிறைவு இல்லையென்றால், அது எப்படிப்பட்ட பேராசையாக இருக்குமென்று யோசித்துப் பாருங்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நாம் இன,மத,மொழி பேதம் கடந்து எமது பகுதியை விருத்தி செய்வோம்

## யாழ்.மாநகர முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

30 வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாத யாழ்.நகரத்தை விமர்சனங்களால் மட்டும் அபிவிருத்தி செய்து விட முடியாது என யாழ். மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

யாழ்.முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பான ஒன்றுகூடல் யாழ்.முஹம்மதியா பள்ளி வாசல் முன்றலில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், நகரம் சுருங்கிவிட்டது. தேவைகள் அதிகரித்து விட்டன என்று அண்மையில் நடைபெற்ற நகர அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் கூறப்பட்டது. இதற்கமைய நாம் மக்களின் தேவைகளை நிறைவேற்ற நகரத்தினை அபிவிருத்தி செய்து வருகிறோம். இதனையும் சிலர் விமர்சித்து வருகின்றனர். இவ்வாறான விமர்சனங்கள் நகரின் அபிவிருத்திக்கு ஒருபோதும் பயன்பெறப் போவதில்லை.

முஸ்லிம் மக்களை யாழில் மீள் குடியேற்றுவதற்கான வசதிகளை யாழ்.மாநகரசபை வழங்கி வருகின்றது.

இதற்கும் மேலாக யாழ்.மாவட்ட செயலகமும் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்திற்கு நடவடிக்கை எடுக்கும்.

நகரினை அழகுபடுத்துவதில் எமக்கு பெரும் பிரச்சினையாக நடைபாதை வியாபாரம் இருக்கின்றது. பாராளுமன்ற சட்டத்தின்படி இட நெருக்கடி, போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்படுத்தும் கடைகளை அகற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

இந் நடைபாதை வியாபாரிகளுக்கு மாற்றுத்தீர்வாக பொருளா தார அமைச்சினூடாக கட்டடம் ஒன்றை அமைத்துத் தருவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

எமது மக்கள் இடப்பெயர்வில் வறியவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குரிய உதவிகள் எமது மதிப்பீட்டுப் பணிகள் முடிவடைந்த பின் வழங்கப்படும்.

மேலும் எமது பிரதேசத்தினை நாட்டில் ஒரு சிறந்த பிரதேசமாக மாற்றியமைப்பதற்கு எல்லோரும் ஒரு இனமாக ஒற்றுமையாக இன, மத, மொழி பேதமின்றி வாழ்தல் வேண்டும். எங்களுடைய பகுதியை நாமே முன்னேற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# மணல் அகழ்வில் ஈடுபட்டோர் கைது

மாங்குளம் கனகராயன்குளம் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட 23 நபர்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாங்குளம் முகாமின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப் பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 20 | 20 | 40 |
| உருளைக்கிழங்கு | 65 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 70 |
| தக்காளி | 30 | 35 | 40 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 20 | 25 |
| கோவா | 40 | 30 | 30 |
| கரட் | 60 | 40 | 40 |
| பூசணி | 35 | 30 | 20 |
| புடோல் | 25 | 60 | 30 |
| வாழைக்காய் | 50 | 40 | 25 |
| சின்ன வெங்காயம் | 35-60 | 50 | 40 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 50 |
| பாகற்காய் | 70 | 40 | 50 |
| வெண்டிக்காய் | 40 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 40 | 60 |
| பயற்றங்காய் | 170 | 100 | 50 |
| லீக்ஸ் | 70 | 80 | 50 |
| பீற்றூட் | 60 | 40 | 40 |
| கறிமிளகாய் | 110 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 280 |
| போஞ்சி | 30 | 30 | 20 |
| கத்தரிதம்புள்ள | 20 | 10 | 20 |
| கீரை - 1 பிடி | 05 | 15 | 10 |
| தேசிக்காய் | 30 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 25 | 25 |
| வெங்காயப்பூ | 100 | 80 | -- |

# இராசி பலன்

08.02.2012

(தை 25, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.35 மணிக்கு
பிரதமை பின்னிரவு 3.08 மணிவரை
ஆயிலியம் பிற்பகல் 1.58 மணிவரை
இராகுகாலம் 12.35-2.05 மணிவரை
சுபநேரம் 5.05-6.35 மணிவரை

**மேடம்**



பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள், அழகு சாதனப் பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள், விருந்துபசாரங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**இடபம்**



சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் மேலோங்கும்,தொலைபேசி மூலம் கனிந்த தகவல்கள் வந்து சேரலாம், பிரச்சினைகள் சாதகமாக முடியும், உறவினர் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**மிதுனம்**



நாவன்மையால் நல்ல பெயரெடுக்கும் நாள்,கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், வெளியூர் பயணங்களால் ஆதாயம் கிடைக்கும்,போசன சுகமுண்டு.

**கடகம்**



பயணங்களின் மூலம் நல்ல செய்திகள் கிடைக்கும், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**சிங்கம்**



மாற்றங்களால் ஏற்றம் பெறும் நாள்,விருந்தினர் வருகையால் கூடுதல் செலவுகள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும்,காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை அமையலாம்.

**கன்னி**



ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணை புரியும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**துலாம்**



சொல்லை செயலாக்கி காட்டும் நாள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் மேலோங்கும், போசன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்**



வருமானம் திருப்தி தரும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும்,வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்,சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு**



எதையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது,வெளியூர் தொடர்புகளில் விழிப்புணர்ச்சி தேவை, கடவுளை வழிபட்டு காரியங்களை தொடங்க வேண்டிய நாள்.

**மகரம்**



மறக்க முடியாத சம்பவங்கள் இடம் பெறலாம்,அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள்,பிரிந்து சென்ற நண்பர்கள் பிரியமுடன் வந்திணைவர்.

**கும்பம்**



ஆரோக்கியத்தில் கவனமெடுக்க வேண்டிய நாள்,கூட்டுத் தொழிலில் உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும்,போசன சுகமுண்டு.

**மீனம்**




பிள்ளைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், பாராட்டும் புகழும் கூடும், தொழில் விருத்தியுண்டு, உடல் நலம் சீராகும்.

வளவன்

# ஜனநாயகம் தழுவி தர்மம் தவறாமல் அரசியல் பாதை நோக்கி செல்கிறோம்

## மாவை எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

ஒரு தேசிய இனத்திற்கு சிறப்பைத் தருகின்ற ஒழுக்கம் என்பது அத்தேசிய இனத்தின் பண்பாட்டை அச்சமூகத்தினுடைய மதனிதர்களின் நடத்தையையும் அறமும் நேர்மையும் தவறானது. வளைந்து கொடாத வாழ்க்கை முறைமை கொண்டிருக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையால் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத நிகழ்வின் இறுதி நிகழ்வுகள் நேற்று முன்தினம் கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஒழுக்கத்தை எமது இனம் சரிவரக் கடைப்பிடித்து வருகின்ற காரணத்தினாலேதான் ஜனநாயகம் தழுவி தர்மம் தவறாமல் எமது அரசியல் பாதையை செதுக்கி செல்கின்றோம். வாசித்தல், கற்றறிதல், தேடல் என்பவை தனிமனித ஒழுக்கத்தை மட்டும் மேம்படுத்துபவை அல்ல.

அது ஒரு சமூகம் தழுவிய செயற்பாடு. வாசித்தல், தேடல் ஊடாக ஒரு சமூகம் எய்துகின்ற பெறுபேறுகள் அச்சமூகத்தின் நாகரிகத்தை முதிர்ச்சியை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இதைத் தான் வள்ளுவன் அன்று ஒழுக்கம் ஒரு சமுதாயத்திற்கு விழுப்பம் தருமாக இருந்தால் அதை உயிருக்கும் மேலானதாக கருதுங்கள்.

அந்த வள்ளுவன் சொன்ன வார்த்தையை உயர்வாக எண்ணியதாலே தான் எங்களுடைய இளவல்கள் ஆயிரமாயிரம் இந்த மண்ணிற்கு தமது உயிர்களை தந்தார்கள். ஆகவே எம் சமூகத்தில் தனிமனித ஒழுக்கம் மாத்திரமல்ல அரசியல் ஒழுக்கமும் கூடவே இருக்கின்றது.

ஒரு அரசன் அந்த குடிமக்களின் பிரதிநிதிகளை வேண்டத்தகாகவர்களாக இந்த ஒழுக்க முறையை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. மக்கள் வழங்கிய ஜனநாயக தீர்ப்புக்களை, மக்களின் ஆசைகளை, அரசியல் விருப்பங்களை ஏற்று அங்கீகரிக்கின்ற ஒழுக்கம் ஒன்று அரசாங்கத்திடம் ஏற்படாத வரை இலங்கைத் தீவில் பகை, முரண்கள் கூர்மையடையுமே தவிர குறைவடையப் போவதில்லை என தெரிவித்துள்ளார். இந்நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், முன்னாள் அதிபரும் கரைச்சி கிராம சபையின் தலைவருமான நாகலிங்கம், சேவாலங்கா நிறுவன திட்டப் பணிப்பாளர், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் ஆணையாளர் பொன் நித்தியானந்தன், கரைச்சி பிரதேச சபையின் உப தலைவர், உறுப்பினர்கள் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என கல்விப்புலம் சார்ந்த ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

(அ-2)

## தேநீர் கடையில் தீ விபத்து; 5 இலட்சம் ரூபா நட்டம்

பூநகரி 4 ஆம் கட்டை இராணுவ முகாமிற்கு அண்மையிலுள்ள தேநீர் கடையொன்றில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12..30 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இவ் விபத்து பூநகரி மன்னார் வீதியின் 4 ஆம் கட்டையைச் சேர்ந்த முருகானந்தம் கேதீஸ்வரன் என்பவரது கடையே இவ்வாறு தீ விபத்துக்குள்ளானது.

இதன்போது 5 இலட்சம் ரூபா பெறுமதிக்கும் மேற்பட்ட பொருட்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இவ் விபத்து சம்பந்தமாக பூநகரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-7-84)

## ஆவணங்கள் அழிந்தால் என்ன சட்ட நடவடிக்கை தொடரும்

### சிறைச்சாலைகள் அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையிலுள்ள ஆவணகள் அழிவடைந்த போதிலும் கைதிகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் எவ்வித தடங்களும் இல்லையென புனர்ாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவிக்கின்றது.

நீதிமன்ற கட்டடத்தொகுதியிலுள்ள பிரதிகளின் ஊடாக அனைத்து ஆவணங்களையும் மீளப் பெற்றுக் கொள்வதாக அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர அந்த ஆவணங்கள் கணனி மயப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

மகசின் சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட மோதலில் ஆவண களஞ்சியசாலையில் சிலரினால் தீ வைக்கப்பட்டுள்ளதுடன் அதிலிருந்து அனைத்து ஆவணங்களும் அழிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## வடக்குக்கிழக்கில் காணிகளை பலவந்தமாக கைப்பற்ற இடமளிக்க முடியாது

### அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணிகளை பலவந்தமான முறையில் கைப்பற்ற எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது என காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

சிங்கள, தமிழ் ,முஸ்லிம், மக்களுக்கு சொந்தமான காணிகளையோ அல்லது அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகளையோ சட்ட விரோதமான முறையில் கைப்பற்ற இடமளிக்க முடியாது.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் காணிகளை கைப்பற்றும் நபர்களுக்கு எதிராக தரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். பலவந்தமான முறையில் காணிகளை கைப்பற்ற எவருக்கும் இடமளிக்க முடியாது.

அரசாங்க காணிகளை பலவந்தமாக கைப்பற்றி வேலிகளை அமைப்பதன் மூலம் அந்தக் காணிகள் குறித்த நபர்களுக்கு சொந்தமா காது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தனியாருக்கு சொந்தமான மற்றும் அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகள் பலவந்தமாக கைப்பற்றப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் சட்டத்தை கையில் எடுத்துக் கொள்ள எவருக்கும் இடமளிக்க முடியாது என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

## சர்வதேச மன்னிப்புச்சபைக்கு புலிகள் நிதி வழங்குகின்றனர்

### அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சர்வதேச மன்னிப்புச்சபைக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் நிதி உதவிகளை வழங்கி வருவதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபை கனேடிய தமிழ் காங்கிரசிடமிருந்து 50 ஆயிரம் டொலர்களைப் பெற்றுக் கொண்டுள்ளதாக சுட் டிக்காட்டப்படுகிறது.

மனித உரிமை மீறல்கள், யுத்தக்குற்றச் செயல்கள் மற்றும் குற்றச்செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் குரல் கொடுத்து வரும் ஓர் அமைப்பு, புலி ஆதரவு அமைப்பிடம் எவ்வாறு பணம் பெற்றுக் கொள்ள முடியும் என அரசாங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரி மைப் பேரவையின் அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென கனேடிய தமிழ் காங்கிரஸ் கோரி வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

அண்மையில் கனடாவில் நடைபெற்ற தைப்பொங்கல் விழாவில் திரட்டப்பட்ட நிதி இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபைக்கு வழ ங்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபையின் தலைமைக் காரியாலயத்தில் முறைப்பாடு செய்ய இலங்கை அரசாங்கம் உத்தேசித்துள்ளது. (அ-

## பணிப்புறக்கணிப்பு

அரசாங்க தாதிமார் சங்கத்தினால் நாளை வியாழக்கிழமை ஒரு மணி நேர பணிப்புறக்கணிப்பு நடைபெறவுள்ளது என அரசாங்க தாதிமார் சங்க செயலாளர் பி.வி.சிவயோகம் அறிவித்துள்ளார்.

இப்பணிப்புறக்கணிப்பானது நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை சகல வைத்தியசாலைகளிலும் தாதிய உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படவிருக்கின்றது. கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட பணிப்புறக்கணிப்பின்போது 3 கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளபோதும் ஏனைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையிலேயே இப்பணிப்புறக்கணிப்பு இடம் பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ-7)


என்றும் நீங்காத நினைவலைகள்

19 ஆம் ஆண்டு நினைவு



1939.11.16 மண் மகிழ 1943.02.28
1993-05.08 மனம் நெகிழ 2011.01.20

1 ஆம் ஆண்டு நினைவு



அமரர்
திரு. இளையதம்பி சுந்தரலிங்கம்
திதி நாள்
சித்திரைமாத அபரபக்க துதியை (2012.05.07)

அமரர்
திருமதி. நீலாம்பிகை (புனிதம்) சுந்தரலிங்கம்
திதி நாள்
தைமாத அபரபக்க பிரதமை (2012.02.08)

அன்பிற்கும் பண்பிற்கும் அறிவுக்கும் பாசத்துக்கும் ஒளிவிளக்காய் நின்ற எங்கள் அன்புத் தெய்வங்களே! எமைத் தனிவழியே விட்டுவிட்டு நீங்கள் இருவரும் சென்றதன் மாயமென்ன? எங்கள் கண்நிறைந்த உங்கள் தோற்றம் கனவில் வந்து வருத்துகின்றது. எங்கள் சூரிய சந்திரரே! நிஜவுருவாய் பார்த்த உங்களை இன்று நிழற் படமாய் பார்க்கும் போது எம் நெஞ்சம் விம்மி அழுகின்றது. எம் அன்னையே! தந்தையே! தெய்வங்களும் திசை மறந்து மௌனத்தில் மூழ்கியதோ! நற்தாயாய் தந்தையாய் சகோதரியாய் மைத்துனராய் இருந்து எமைவிட்டுப் பிரிந்து ஈரேழு ஜென்மங்கள் ஆனாலும் நீங்கள் நிறைந்து வாழ்வீர்கள் எம் நெஞ்சினிலே.

"தாயிற் சிறந்த ஒரு கோயிலுமில்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

6 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

நீங்காத நினைவில் துயருறும்
பிள்ளைகள்,
சகோதரி (மைத்துனி).

# வாய்ப்பாடு மனனம் செய்யும் திட்டம் மீண்டும் அறிமுகம்-பந்துல

(கொழும்பு)

புதிதாக அறிமுகப்படுத்தப்பட வுள்ள பாடத்திட்டத்தின் கீழ் ஆரம் பப்பிரிவு மாணவர்கள் 12 ஆம் வாய் ப்பாடு வரை மனனம் செய்ய வேண் டுமென கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறினார்.

10 வருடங்களுக்குமுன்னர்வெளி நாட்டு நிறுவனமொன்றினால் அறி முகம் செய்யப்பட்ட கல்விச் சீர்தி ருத்தத்தின் படி வாய்ப்பாடு மனனம் செய்யத்தேவையில்லை என அதி காரிகளால் கூறப்பட்டது.

இதன் விளைவாக கணிதத்தில் முக்கியமான ஒரு விடயத்தை அறிந் திராத ஒரு பரம்பரை உருவாக்க ப்பட்டுள்ளது என அமைச்சர் கூறி னார்.

நாம் இந்த தவறை திருத்த வேண்டும்.இந்தியாவில் 3 ஆம் வகு ப்பு மாணவர்கள் 15 ஆவது பெருக் கல் வாய்ப்பாடு வரை மனனம் செய்ய வேண்டும்.நாம் பெருக்கல் வாய் பாட்டை மனனம் செய்யும் முறையை அறிமுகம் செய்யவுள்ளோம் என அவர் கூறினார்.

அதேவேளை புதிய கல்விச் சீர்தி ருத்தத்தின் கீழ் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்க ளுக்கு 5 துறைகளில் ஒன்றில் கல்வி கற்க வாய்ப்பு கிடைக்கும் என அவர் கூறினார்.

அடுத்த வருடத்திலிருந்து கணி தம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம், தொழில்நுட்பம் ஆகிய 5 பிரிவுக ளில் மாணவர்கள் கல்வி கற்பர். இவர்கள் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எழுத வுள்ளனர். (அ-2)

# நாட்டை ஆட்சி செய்யும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உண்டு

## பிரதமர் டி.எம்.ஜயரட்ண தெரிவிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவி னால் தனியாக தீர்மானங்களை எடுக்க முடியாது என பிரதமர் டி.எம். ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

நாட்டை ஆட்சி செய்யும் அதி காரம் பாராளுமன்றிற்கு காணப்படு கின்றது என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

தனிப்பட்ட ரீதியில் தீர்மானங் களை எடுக்கும் உரிமை ஜனாதிபதிக்கு கிடையாது எனவும் அந்த உரிமை பாரா ளுமன்றத்திற்கே காணப்படுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றமே அரசியல் சாச னத்தை உருவாக்கியது எனவும் அரசியல்சாசனத்தில் மாற்றங் களை ஏற்படுத்தும் முழு உரிமை யும் பாராளுமன்றத்திற்கே காணப் படுகின்றது என அவர் குறிப்பிட்டு ள்ளார்.

நாட்டை ஆட்சி செய்யும் அதி காரம் பாராளுமன்றிற்கு காணப் படுகின்றது என அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

இரத்தினபுரி பாடசாலை ஒன் றில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டபோது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஜனாதிபதியை நீதிமன்றில் நிறுத்த அமெரிக்கா முனைப்பு

## வீரவன்ச குற்றச்சாட்டு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச நீதிமன்றில் குற்றவாளி யாக நிறுத்துவதற்கு அமெரிக்கா முனைப்பு காட்டி வருவதாக வீடமை ப்பு அமைச்சர் விமல் வீரவன்ச குற் றம் சாட்டியுள்ளார்.

பிளெக் உள்ளிட்ட முக்கிய இரு இராஜதந்திரிகள் இலங்கைக்கு வருகை தரவுள்ள நிலையில் இவர் இக் குற்றத்தை வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஐக் கிய நாடுகள் மனித உரிமைப் பேர வையில் இலங்கைக்கு எதிராக தீர் மானம்நிறைவேற்றும்நோக்கி லேயே அமெரிக்கா செயற்பட்டு வருகின் றது. மேலும் இலங்கைக்கு எதிராக மனித உரிமைப் பேரவையில் அங் கம் வகிக்கும் நாடுகளிடம் கையொ ப்பங்களைத் திரட்டும் பணிகளை யும் அமெரிக்கா ஆரம்பித்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டுகளை சுமத்துவதே அமெரிக்காவின் பிரதான இலக்கு எனவும் ஹேக்கில் அமைந்துள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் ஜனாதிபதியை குற்றவாளியாக ஆஜர் செய்ய முயற்சி எடுக்கப் படுகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார். (அ-2)

# நாடாளுமன்ற தெரிவுக்குழு காலத்தை கடத்தும் முயற்சி

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட நாட்டின் சகல எதிர்க் கட்சி களுடனும் ஐக்கிய தேசியக் கட்சி பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கற்றுக்கொண்ண பாடங்கள் மற் றும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகள் அமுல்படுத்தப் ப டாமை, ஜனநாயகத்தை நிலை நாட் டாமை உள்ளிட்ட விடயங்கள் குறி த்துப் பேசப்படும்.

உத்தியோக பற்றற்ற ரீதியில் இந்த வாரம் முதல் பேச்சுவார்த் தைகள் நடத்தப்படும்.

வடக்கிற்கு அரசியல் தீர்வு வழ ங்குவதாகவும் நல்லிணக்க ஆணை க்குழு பரிந்துரைகளை அமுல்படுத் துவதாகவும் அரசாங்கம் வாக்குறுதி அளித்த போதிலும் இதுவரையில் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வில்லை.


நாடாளுமன்றதெரிவுக்குழு அமை த்து அதன் மூலம் அரசியல் தீர்வுத் திட்டத்தை காணும் முயற்சியானது காலத்தைகடத்தும் நடவடிக்கையாகும்.

காலத்தை கடத்தாது அரசாங் கத்தின் நிலைப்பாட்டை தெளிவாக நாட்டுமக்களுக்கு அறிவிக்கவேண்டும்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை தொடர்பில் எதிர்கட்சிகளின் நிலைப் பாட்டை அறிந்துகொள்ளும் நோக்கில் சகல கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த தீர்மானி த்துள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)



# நிகழ்வின் நிழல்கள்...




ஜனாதிபதியால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்ட நீச்சல் தடாகம்






இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று பழைய பூங்கா வளாகத்திற்குள் இடம்பெற்ற போது ....








கிளிநொச்சி செல்வா நகரில் மின் விநியோகத்தை அமைச்சர் சம்பிக்க ரணவக்க, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் ஆரம்பித்து வைத்த போது.....











யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் நேற்றைய தினம் இடம்பெற்ற தேவராசா இல்லத்திறப்பு விழாவின் போது....










முஹம்மது நபியின் பிறந்த நாளை முன்னிட்டு முஹம்மதியா பள்ளிவாசலில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற யாழ். முஸ்லிம் ஒன்றுகூடல் நிகழ்வின் போது.....

# மீண்டுமொரு இருண்டயுகத்திற்கு செல்ல நாம் அனுமதிக்கமாட்டோம்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

250 இலட்சம் ரூபா செலவில் செல்வாநகர் கிராமத்திற்கான மின் விநியோகம் இந்த மக்களின் நீண்ட நாள் கனவினை நனவாக்கியுள்ளது. இது மக்களின் நம்பிக்கைக்கு கிடைத்த வெற்றியாகும் என பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதி தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி செல்வாநகர் கிராமத்திற்கான மின்சார விநியோகம் நேற்று முன்தினம் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுடன் இணைந்து உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த பிரதேசத்திற்கான மின் விநியோகம் தொடர்பில் இம் மக்கள் என்னை சந்திக்கின்ற போதெல்லாம் தங்களுடைய கோரிக்கையினை முன்வைத்த போது நான் கூறுவது நம்பிக்கையொடு இருங்கள். விரைவில் உங்களுக்கான மின் விநியோகம் மேற்கொள்ளப்படும் என்றே கூறுவேன். அந்த வகையில் இன்று எம்மால் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுடன் இணைந்து இந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதேபோன்று வரும் காலத்திலும் மக்களின்தேவைகளைநிறைவு செய்வதில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்.

மின்சாரம் தற்போதைய வாழ்வில் முக்கியமானது. கடந்த முப்பது வருட யுத்தம் எம் மக்களை நவீன உலகிலிருந்து அப்புறப்படுத்தியிருக்கிறது. இருண்ட வாழ்க்கையும் புழுதி பயணமும் எம் மக்களின் வாழ்வியலாக மாற்றப்பட்டிருந்தது. இது மிகவும் கொடியது. உலகம் முன்னோக்கி பயணித்துக் கொண்டிருக்க எமது மக்கள் இருந்த இடத்திலேயே இருப்பது வேதனையான விடயமே. எனவேதான் இனிவரும் காலம் அவ்வாறு இருக்க முடியாது. அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க போவதில்லை.

கடந்த காலத்தில் செல்வாநகர் போன்ற பல்வேறு கிராமங்கள் அபிவிருத்தியிலும் ஏனைய செயற்பாடுகளிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளமையினை நாம் நன்கு அறிவோம். அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்ட பிரதேசங்களின் அபிவி ருத்தியிலேயே நாம் அதிக அக்கறை செலுத்தி வருகின்றோம்.

அதற்கு இந்நிகழ்வும் ஒரு எடுத்துக்காட்டு. இதேபோன்று புது முறிப்பு, ஊற்றுப்புலம், கோணாவில், கிருஷ்ணபுரம், மலையாளபுரம் உள்ளிட்ட மாவட்டத்தின் பெரும்பாலான கிராமங்களுக்கு இவ்வருட நடுப்பகுதிக்குள் மின் விநியோகம் மேற்கொள்ளப்படும். இதற்காக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் அதிக அக்கறை எடுத்துள்ளார்.

அத்தோடு மின்சார சபை ஊழியர்களும் முழுமையான பங்களிப்பினை செலுத்தி வருகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, இலங்கை மின்சாரசபையின் மேலதிக பொது முகாமையாளர் ரஞ்சித் குணவர்த்தன, இலங்கை மின்சாரசபையின் யாழ்.பிராந்திய பிரதி பொதுமுகாமையாளர் குணதிலக, வடக்கின் வசந்த திட்ட முகாமையாளர் குணசீலன், பிரதேச இராணுவ அதிகாரி கேணல் ஜெயதிஸ்ஸ, பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(அ-2)

## நீதிமன்றத்தால் அபராதம்

வவுனியாவை சேர்ந்த நபர் ஒருவர் கொட்டைக்காடு உரும்பிராயில் கசிப்பு வைத்திருந்தார் என்னும் குற்றச்சாட்டின் பேரில் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

வழக்கினை விசாரித்த யாழ். நீதவான் மா. கணேசராசா குறித்த நபர் மன்றில குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் 5 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தர விட்டார்.

* * * * * *

யாழ்.நகரில் வாகனத்தை வேகமாக செலுத்தினார் என்ற குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கோப்பாய் பொலிஸ்ாரால் கைது செய்து யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கிணை விசாரித்த யாழ். நீதவான் மா.கணேசராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் 5 ஆயிரம் ரூபா அபராதமாக செலுத்துமாறு உத்தரவிட்டார். (அ-4)

## பயிற்சி வகுப்புக்கள் நாளை

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் எதிர்வரும் குடிசனத்தொகை மதிப்புக் கணக்கொடுப்பாளராக கடமையாற்றுபவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள்நாளைவியாழக்கிழமை, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆகிய இருதினங்களிலும் ஜெயபுரத்திலுள்ளபிரதேச செயலக உப அலுவலகத்தில் நடத்தப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்கள் புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ளதாக பிரதேசசெயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதில் கடந்த 2ஆம்,3ஆம் திகதிகளில் முதலாம்கட்ட பயிற்சிகள் பூநகரி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இக்கடமையில் 19 கிராமசேவகர் பிரிவிலும் 106 பேர் கடமையாற்றுவதற்கு உள்ளனரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7-84)

## குளிர்பான போத்தலுக்குள் துகள்கள்; குளிர்பானம் பறிமுதலாகியது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வர்த்தக நிலையத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த புதியரக குளிர்பான போத்தலுக்குள் சுகாதார சீர்கேடு விளைவிக்கும் வகையில் தூசி துகள்கள் காணப்பட்டது.

இதனை பொதுமக்கள் பொது சுகாதார பரிசோதர்களுக்கு கொடுத்த தகவலையடுத்து குறித்த வர்த்தக நிலையத்திற்கு சென்ற பொது சுகாதார பரிசோதர் அவற்றை பார்வையிட்டு அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த குளிர்பானம் முழுவதையும் பெட்டிகளுடன் ஏற்றி சென்றுள்ளனர்.

மேற்படி குளிர்பான போத்தல்கள் யாழ்ப்பாணம் சுகாதார திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மூடியில் இருந்த தூசுகளே உட்சென்றிருக்கலாம் என கருதப்படுகிறது. (அ-3-24)

## பூநகரி பகுதி வீடுகளுக்கு மின்சாரம் தருவது எப்போது

(பூநகரி)

பூநகரி பகுதியில் வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவதில் காலதாமதமும் அசமந்த போக்கும் காணப்படுவதாக இப்ப குதி மக்கள் சம்பந்தப்பட்ட தரப்பி னரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதில் கடந்த சித்திரை புத்தாண்டு தினத்தன்று பூநகரி வாடியடி வரை மின்சாரம் வந்து சேர்ந்தது. ஆனால் ஏனைய பகுதிகளான பரந்தன் பூநகரி வீதியின் அருகாமையில் இருக்கும் மக்கள் மின்சாரசபையின் அனுமதியோடு மின்இணைப்பை செய்துள்ளனர். ஆயினும் மின்சாரம் வழங்கப்படவில்லை என கவலை தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு எப்போது மின்சாரம் கிடைக்கப்பெறும் என எதிர்பார்த்திருக்கிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-7-84)

## மணவாளகோல திருவிழா

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான மணவாளக்கோலத் திருவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு மகா சங்காபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து மாலை 5 மணிக்கு வசந்த மண்டபபூசை, திரு வூஞ்சல் என்பன நடைபெற்று மாலை 6 மணிக்கு அம்பாள் பூந்தண்டிகையில் எழுந்தருளி வெளிவீதி உலா வருவலும் இடம்பெறும் என நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (அ)


முதலாம் ஆண்டு நினைவுகள்

அமரர் திருமதி இரஞ்சிதமலர் அபிமன்னன்

(உத்தியோகத்தர், மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பளை)

மண் மகிழ 25 05 1954



கண் நெகிழ 19 02 2011

திதி: அமரபக்க பிரதமை


நீயிருந்த நாட்களில் துயரமேதும் வந்ததில்லை
தூணாக நீயிருந்து தோளிலெம்மை தாங்கி நின்றாய்
துணையின்றி தவிக்கின்றோம் நாம்
தூரதேசம் போனதென்ன?.....

(6243)

எம்மை விட்டுப் பிரிந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்கின் 1 ஆம் ஆண்டு ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும் தீவசக்கிரியைகளும் எமதில்லத்தில் 08.02.2012 புதன்கிழமை பகல் 11.00 மணியளவில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து மதிய போசன விருந்தும் இடம்பெறும். இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோயில் வீதி,
மல்லாகம்.
தொ.பே.இல:-
0213214925
0777824097


இப்படிக்கு
சி.அபிமன்னன் (கணவர்)
அ.விஸ்ணுஜன் (மகன்)

இருபாலை தெற்கு ஆனந்தபுரம் கலைவாணி சனசமூக நிலையத்தின் நூலகத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்ட கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் , பிரதேச செயலக உதவித் திட்டப்பணிப்பாளர், கணக்காளர், சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஆகியோர் இணைந்து நூலகக் கட்டடத்தை நாடா வெட்டி திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# சிரிக்கும் நாளே திருநாள்...

## கவிதைகளில் சிரிப்பு



க.கணேசலிங்கம்

"ஒரு நாளேனும் கவலை இல்லாமல்
சிரிக்க மறந்தாய் மானிடனே...?"
இது கவிஞனின் கேள்வி.

" சிரிப்பு, இதன் சிறப்பை சீர் தூக்கி பார்ப்பதே நமது பொறுப்பு. சிந்திக்கத் தெரிந்த மனிதகுலத்துகே சொந்தமான கையிருப்பு. மனக் கவலையைப் போக்கி மூளைக்கு தரும் சுறுசுறுப்பு..." என்றார் கலைவாணர் என். எஸ். கிருஸ்ணன்.

சிரிப்புக் கவிதைகள் இங்குமங்கும் உலாவந்து (Tottering around) நம்மை அவ்வப்போது உற்சாகப்படுத்திக்கொண்டிருக்கின்றன.

தனிப்பட்ட பாடல்கள், திரைப்படப் பாடல்கள் இவற்றில் சிரிப்பின் மகத்துவம் வெகுவாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. உணர்த்தப்படுகின்றன.

ஒவ்வொரு கவிஞனும் சிரிப்பை ஒவ்வொரு கோணத்தில் பார்க்கின்றான். நாம் இவற்றைப் பார்க்கும் போது, கேட்கும் போது மனதுக்கு ஒரு ஆறுதல் வரத்தான் செய்கின்றது.

"இசைப் பாடலில்
என் உயிர்த்துடிப்பு
நான் பார்ப்பதெல்லாம்
அழகின் சிரிப்பு..."

இப்படி எல்லா இடத்திலும் சிரிப்பைப் பார்க்கின்றார் கவிஞர். விதியைக்கூட இந்த சிரிப்பு விரட்ட உதவுவதாகத் கவிஞர் கூறுகின்றார்.

பார்ப்போம்.

"ஆண்டவனின் தோட்டத்திலே



அழகு சிரிக்குது
ஆகாயம் பூமி எங்கும்
இளமை சிரிக்குது
வேண்டு மட்டும்
குலுங்கி குலுங்கி
நானும் சிரிப்பேன்- அந்த
விதியைக்கூட
சிரிப்பினாலே
விரட்டி அடிப்பேன்."

(Humout always affords a leit of profection from fate-cheet Humourist karel capek)

" சிரிக்கத் தெரிந்தால் போதும்
துயர் நெருங்காது-நம்மை
ஒருபோதும்..."

"சிரிப்பதுதான் கவலைக்கு மருந்து"

" இடுக்கண் வருங்கால்நகுக;
அதனை அடுத்து ஊர்வது அஃது ஒப்பதில்"

இது வள்ளுவர் காட்டும் வழி.

" கோபத்திலே ஒரு சொல்லிலும்
சிரித்துக் குலுங்கிடச் செய்திடுவான்;
மனஸ்தாபத்திலே
யொன்று செய்து
மகிழ்ச்சி ததும்பிடச்
செய்திடுவான்"

என்றார் பாரதியார்.

(எங்கிருந்தோ வந்தான் கண்ணன் பாடலில்)

" பார்த்தேன் சிரித்தேன்
பக்கத்தில் அழைத்தேன்
உனைத்தேன் என நான்
நினைத்தேன்..."
(இது ஆண்)

"பார்த்தேன் சிரித்தேன்
பக்கம் வரத் துடித்தேன்
உனைத்தேன்
என நான் நினைத்தேன்
அந்த மலைத்தேன்
இவரென மலைத்தேன்"
(இது பெண்)

தேன்சுவை மேவும் திரைப்பாடல் இது. செந்தமிழ் கீதம் இது.

" செங்கதிரால்
தாமரைகள் சிரித்திருக்கும்
சேர்மதியால்
அல்லிமலர்
வாய் சிரிக்கும்
பொங்கிவரும் மழை வரவால்
பயிர் சிரிக்கும்
பொய்யாத மொழிக்
குறளால்
குலம் சிரிக்கும்..."

என்கிறார் முடியரசன் என்ற கவிஞர்.

" செந்தமிழ் தேன்மொழியாள் அவள்
சிரிக்கும் மலர்க்கொடியாள்"

" குங்குமம் பூப்போல்
சிரிக்கிறாள்...
காலையில் மலரும் தாமரைப்பூ
அந்திக் கருக்கலில்
மலரும் மல்லிகைப்பூ
இரவில் மலரும் அல்லிப்பூ-அவள்
என்றும் மலரும் முல்லைப்பூ"

"சிரித்தாள் தங்கப்பதுமை
அடடா அடடா
இது என்ன புதுமை...?
என்றெல்லாம் வியப்படைபவர்கள் ஒரு புறமிருக்க

" பார்த்தால் பசி தீரும்
பங்கஜவதன
செங்கனி வாய்ச்சிரிப்பை
பார்த்தால் பசி தீரும்..."

என்று சிரிப்பில் மெய்மறந்து பசி மறக்கின்றார். மற்றவர்

" ஒரு பூ மழை தான்
இங்கு பொழிகின்றது- நீ
புன்னகை புரிகையிலே"

"பூக்களெல்லாம் சிரிப்பைத் தந்தது."

என்றார் ஒருவர். இவர் " பூமழை பொழிகின்றது" என்கிறார்.

(Like a welcome summer rain humour may suddenly cleanse and cool the earth the air and you - Longston Huges

" சிரிப்பில் உண்டாகும்
இராகத்திலே
பிறக்கும் சங்கீதமே..."

"எனக்கொரு காதலி
இருக்கின்றாள்- அவள்
ஏழு ஸ்வரங்களில் சிரிக்கிறாள்"

சிரிப்பில் இனிய சங்கீதம் பிறக்கின்றது.

" ஏன் சிரித்தாய்
என்னைப் பார்த்து?-உன்
எழில் தனைப் பாடவா
தமிழைச் சேர்த்து..."

இது ஒரு கவிஞனின் கேள்வியும் விருப்பமும்.

" முகைமொக்குள் உள்ளது
நாற்றம் போல் பேதை
நகை மொக்குள் உள்ளது.
ஒன்று உண்டு" (-1274)

வள்ளுவர் தமது குறளில் சிரிப்பின் இரகசியத்தை இப்படி சொல்லாமல் சொல்கிறார்.

" நான் இரகசியங்களின் ரசிகன்
அதனால் தான்
புதிர்களை அவிழ்க்கப்
புன்னகை பூக்கின்றேன்."

கவிஞர் மு.மேத்தா புதிர்களை அவிழ்க்கத் தாம் கையாளும் முறை பற்றி இவ்வாறு தெரிவித்தார்.

" முத்திரை பசும் பொன்னே
ஏனிந்த சிரிப்பு?
முகமோ மலரோ இது என்ன ரசிப்பு?
மின் ஒளி வீசும்
உன் எழில் கண்டால்
வேறென்ன வேண்டுமடா...?

இது திரைக் கவிஞனின் ரசிப்பு!

புன்னகை பற்றி இந்த திரைக் கவிஞர்கள் எவ்வாறெல்லாம் பாடியிருக்கின்றார்கள் என்று பார்த்தால் நிச்சயம் நாம் புன்னகை பூக்கவே செய்வோம்.

"மோகனப் புன்னகையில்
ஓர் நாள்
மூன்று தமிழ் படித்தேன்"

" முத்துக்கரம் போலே மோகனப் புன்னகை மின்னு தடி"
மோகனப் புன்னகை ஏனோ?
அநுராகத்தின் இன்னிசைதானோ?"

" பூரண நிலவோ
புன்னகை மலரோ?"

"புத்தம் புது மலரோ
குறுநகை புரியும் வெண்ணிலவே"

" மோகனப் புன்னகை
வீசிடும் நிலவே
மேகத்திலே நீயும் மறையாதே
பாகுடன் தேனுமே
கலந்தது போலவே
சாகசமே நீயும்
புரியாதே..."

" பூரண நிலவின் தோரணம் ஏனோ
புன்னகை புரிகிறது?-அது
காரணம் பாதி
காரியம் பாதி
கதையாய் வருகின்றது"

" வெள்ளரிக்காய்
பிறந்தது போல்
வெண்ணிலாவே
சிரிக்காயோ?

புன்னகையுடன் திருப்திப்படாத கவிஞனின் விருப்பம் இது!

" பொங்கிவரும் புது நிலவு
போன்ற ஒளி முகமும்
புன்னகையின் புதுப்பொலிவும்
போர்த்த அருந்தோற்றம்..."

என புன்னகையில் புதுப் பொலிவு கண்ட பாரதியார்...

" சோலை மலரொளியோ
உனது சுந்தரப்
புன்னகைதான்?

எனக் கேட்கிறார், வியப்பாக கேட்கிறார்.

" பவளக்கொடியிற்
பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகையும்..."

என்று அம்மையின் புன்னகையை பற்றி அழகுறப்பாடுகிறார் அபிராமிப் பட்டர்.

" குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயில் குமிண் சிரிப்பும்..."

கண்டால் இந்த மனிதப் பிறவியும் வேண்டுவதே- எனப் பண்ணோடு இசைபாடிய திருநாவுக்கரசர் வேறொரு தேவாரத்தில்

" வெள்கினேன்
வெள்கிநானும்
விலாகிறச் சிரித்திட்டேனே"

என்று பாடுகிறார்.

விலா எலும்புகள் வலியெடுக்கும் அளவுக்கு குலுங்க குலுங்க அவர் சிரித்தாராம். இறைவன் எல்லாவற்றையும் அறிந்து கொண்டிருக்கின்றார் என்பதனை உணர்ந்த போதே தாம் வெட்கத்தால் இவ்வாறு சிரித்ததாக அவர் குறிப்பிடுகின்றார்.

பாடும் பணியே பணியாகக் கொண்டிருந்த அருணகிரிநாதர்

" முத்தைத்தரு பத்தித்திருநகை"

என்று முருகனைப் பற்றிய தமது திருப்புகழில் குறிப்பிட்டார்.

" கொடுப்பதற்கும் சிரிப்பதற்கும்
படிப்பு வேண்டுமா? "

இப்படி ஒரு கேள்வியை கவிஞர் கேட்கிறார்.

" நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகை என்ப வாய்மைக்குடிக்கு" (-953)

இது வள்ளுவர் வகைப்படுத்திய வழி.

"முத்து முத்தாய் சிரிப்பதற்கே பாடம் வேண்டுமா?
முத்தமிழே முழு நிலவே
மேக வண்ணமே முப்பொழுதும்
எப்பொழுதும் நமது சொந்தமே..."

என்று திரைக் கவிஞர் ஒருவர் பாடம் சொல்கிறார்.


" காதல் கார்த்திகை
திருநாள்
மனம் கலந்தால்
மார்கழித் திருநாள்
சேர்வது பங்குனித்
திருநாள்-நாம்
சிரிக்கும் நாளே
திருநாள்."

மனதுக்கு இதமான இசைவான திரைப்பாடல் இது.

சிரிக்காத வாயும் சிரிக்காதோ, அந்த திருநாளைக் கண்டு மகிழாதோ!

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 34



ஜேர்மனியின் மோட்டார் கவச வாகன அணி

இராணுவ உற்பத்தியை விரிவு படுத்தி சோவியத் இராணுவத்தின் ஆயுதத் தளவாடங்களை மேம்படுத்துவது சம்பந்தமாகத் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் எதிரி கயமைத் தனமாகத் தாக்குதலைத் தொடங்கும் முன் நிறைவேற்ற இயலவில்லை. இது பாசிச இராணுவத்துடனான முதல் சண்டைகளின் போக்கையும் முடிவையும் பாதிக்காமல் இருக்கவில்லை. அதேநேரத்தில் காப்புத் தொழிற்துறை செஞ்சேனைக்கு நவீன இராணுவத் தளவாடங்களை அளித்தது. இது செஞ்சேனையின் போர்த்திறமைக்கான பொருளாதார அடிப்படையாக விளங்கி, வரவிருந்த வெற்றிகளுக்கான நம்பகரமான அடித்தளமாகத் திகழ்ந்தது.

சர்வபொது கட்டாய இராணுவ சேவையைப் பற்றி 1939 செப்ரெம்பரில் நிறைவேற்றப்பட்ட சட்டமும் பிரதேச வாரியான திரட்டலில் இருந்து ஊழியர் முறைத் திரட்டலுக்கு மாறியதும் இராணுவத்தில் சேவைக் காலத்தை 3 ஆண்டுகள் வரையிலும், கப்பற்படையில் இதை 5 ஆண்டுகள் வரையிலும், உயர்த்தியதும் சோவியத் இராணுவத்தை பலப்படுத்துவதில் முக்கிய கட்டமாக அமைந்தன.


இந்த அடிப்படையில் முப்படைகளும் இவற்றின் படைவகைகளும் வளர்க்கப்பட்டன. இவற்றின் கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டது.

தரைப்படையில் புதிய துப்பாக்கிப்படை, இயந்திரப்படை மற்றும் கவச டாங்கிப்படை யூனிட்டுக்களும் விமான, பீரங்கி மற்றும் பொறியியல் படைப் பிரிவுகளும் தோற்றுவிக்கப்பட்டன. கடற்படையிலும் வான் பாதுகாப்புப்படையிலும் பெரும் நிறுவன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1941 நடுவில் சோவியத் இராணுவத்தின் மொத்த எண்ணிக்கை 5 மில்லிய னுக்கும் அதிகமானதாக இருந்தது. இது 1939-இல் இருந்ததை விட 2.8 மடங்கு அதிகமாகும். யுத்தத்திற்கு முந்தைய இரண்டு ஆண்டுகளில் சோவியத் இராணுவம் 7000 க்கும் அதிகமான டாங்கிகள், சுமார் 30ஆயிரம் போர்க் களப்பீரங்கிகள், 50ஆயிரதுக்கும் அதிகமான மார்டர் பீரங்கள், சுமாராக 18 ஆயிரம் போர் விமானங்கள் ஆகியவற்றைப் பெற்றது.


மேலும், எல்லைப்புற பிரதேசங்களை யுத்தத்திற்கு தயார்ப்படுத்தியது. அதாவது விமானத் தளங்களை ஏற்படுத்தியது, சாலைகளை விரிவு படுத்தியது போன்றவை நாட்டின் தற்காப்புத் தன்மையைப் பலப்படுத்தியதில் பெரும் பங்காற்றின.

1939 ஆம் ஆண்டு பழைய எல்லைப்புறப் பிரதேசங்களில் இருப்புப் பாதைகளின் போக்குவரத்துச் சக்தியில் சோவியத்யூனியனுக்கு இதன் மேற்கேயிருந்து அண்டை நாடுகளைவிட 2.5 மடங்கு மேம்பாடு இருந்தது. ஆனால், மேற்கு உக்ரேனும் மேற்கு பைலோருஷ்யாவும் விடுவிக்கப்பட்டபின் எல்லை 300-350 கி.மீ. தூரம் நகர்ந்தது. இப்பிரதேசங்களின் இருப்புப்பாதைகள் பாழடைந்திருந்தன. பல மார்க்கங்களில் இரண்டாவது பாதை அகற்றப்பட்டு இருந்தது. மேலும் இங்கே இருப்புப் பாதை குறுகியதாக மேற்கு ஐரோப்பியப் பாணியில் இருந்தது.

பிரதான படைத் தலைமையகம் குறிப்பாக ஜூக்கவ் தலைமை தாங்கிய போது இருப்புப்பாதைகளை உடனடியாக மாற்றியமைக்க வேண்டும் என வற்புறுத்தியது. இக்காரியத்திற்கு புனரமைப்பு வேலை முழுவதுக்கும் பெரும் முதலீடுகள் சுமாராக 10 பில்லியன் ரூபிள்கள் தேவைப்பட்டன. இவ்வளவு பெரிய தொகையை ஒதுக்கி அதைப் பயன்படுத்துவது எளிதாக இல்லை. எஸ்தோனியா லத்வியா லித்துவேனியாவிலும் இருப்புப் பாதைகள் விடயத்தில் இதேநிலை தான் நிலவியது.



# யுத்தத்தின் தொடக்கம். சோவியத் யூனியனுக்கு எதிரான பாசிச ஆக்கிரமிப்பிற்கான ஏற்பாடுகள்



சோவியத்யூனியனின் போர்விமான அணி

இவ்வாறாக, யுத்தம் ஆரம்பமான போது சிக்கலான சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டது. முதல் போர்த் தந்திரப்படை வரிசையை ஒருமுனைப் படுத்தி நிறுத்தக் குறைந்தபட்சம் 25 நாட்களாயின.

பாசிச ஜேர்மனி, சோவியத் யூனியனைத் தாக்கியபோது முதல் போர்த் தந்திரப் படை வரிசையின் சோவியத் துருப்புகள் நிரந்தர இருப்பிடங்களில் இருந் தன. ஒரு பகுதி முகாம்களிலும் புதிய பிரதேசங்களுக்குச் செல்லும் வழியிலும் இருந்தது. எல்லைப்புற இராணுவ வட்டாரங்களின் விமானப்படை, நிரந்தர விமானத் தளங்களில் இருந்தது. பல யூனிட்டுக்களின் பீரங்கிகளையும் விமான எதிர்ப்பு சாதானங்களையும் கடும் பயிற்சிகளுக்காக பயிற்சிக் களங்களுக்கு எடுத்துச் சென்றிருந்தனர். சாப்பர் படைப் பிரிவுகள் பொறியியல் முகாம்களுக்குச் சென்றிருந்தன. துணைப் படைகளைச் சேர்ந்த முதற்படை வரிசையின் துப்பாக்கிப்படை மற்றும் குதிரைப் படை டிவிசன்கள் மேற்கு எல்லையிலிருந்து 5-50 கி.மீ. தள்ளியும் இரண்டாவது படைவரிசையின் டிவிசன்கள் 50-100 கி.மீ தள்ளியும் இருந்தன. இரண்டாவது படைவரிசைகளும், இராணுவ வட்டாரங்களும், சேமப் படைகளும் மற்றும் பாதுகாப்பு மக்கள் கமிசாரகத்திற்கு நேரடியாக கட்டுப்பட்ட டிவிசன்களும் எல்லையிலிருந்து 100-420 கி.மீ. தள்ளியும் இருந்தன. பிரதான படைத்தலைமையின் சேமப் படைகள் இருப்புப் பாதைகளில் சென்று கொண்டிருந்தன. பாசிச ஜேர்மனியத் துருப்புகளோ 1941 ஜூன்22 வாக்கில் ஏற்கனவே அந் தந்தத் திசைகளில் இயங்குவதற்கு வசதியான படைத் திரட்டுகளாக ஒன்று சேர்க்கபட்டு தாக்குதல் தொடுப்பதற்கு தயாராக சோவியத் எல்லையின் மிக அருகே நிறுத்தப் பட்டிருந்தன.

இவ்வாறாக, 1941 கோடையில் சோவியத் யூனியனின் மீது பாசிச ஜேர்மனி தாக்குதலைத் தொடுக்கும் அபாயம் அதிகரித்தபோது மேற்கு எல்லையில், செஞ்சேனையை நிறுத்து வதற்கான தயாரிப்புக்கள் சம்பந்தமாக சோவியத் படைத் தலைமையால் பெரிய அளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டாலும் துருப்புகளைக் குவிப்பதையும் எல்லைப்புற வட்டாரங்களில் உடனடியாகச் செயற்படும் பாதுகாப்புப்படைத் திரட்டுக்களை தோற்றுவிப்பதையும் ஜூலை இறுதியில்தான் முடிக்க முடிந்தது. அதாவது மேற்கு எல்லைப்புற வட்டாரங்களின் துருப்புகள் முழு இராணுவ தயார் நிலையில் வைக்கப் படாததாலும் போர்த்தந்திர ரீதியாக அவற்றை நிறுத்துவதை முடிக்காததாலும் இவை பரந்த போர்முனையில் சிதறிக் கிடந்தன. மொத்தமாக சக்திகளின் சமன் நிலை பாசிசஜேர்மனியத் துருப்புகளுக்குச் சாதாகமாக- பொதுவாக 2 மடங்கும் முக்கிய திசைகளில் 3-4 மடங்கும் இருந்தது.

சோவியத்யூனியனின் நகர்ப்பகுதியில் ஏற்றப்பட்டிருந்த கொடியை ஆக்கிரமிப்பு படையாள் வீழ்த்துகிறான்



(தொடரும்)

# மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண இயன்றளவு முயற்சி செய்து வருகிறோம்

## சிறீதரன் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

எமது மக்களின் நிரந்தர பிரச்சினைக் கான தீர்வு நோக்கி நாம் செல்கின்ற அதே வேளை, எமது மக்களின் வாழ்வாதார பிரச்சி னைகளுக்கு தீர்வு காண்பதற்கும் எங்களால் முடிந்த அளவு முயற்சி செய்கின்றோம் என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரி வித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பிரதே சத்தின் வண்ணாங்கேணி கிராமத்தில் வாழும் போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நல ன்கருதி முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 10 பேருக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது. இதில் கலந்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கை யில், புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் உறவுகள் ஆற்றுகின்ற உதவிகளுடாகத்தான் நாங்கள் இதுபோன்ற உதவிகளை வழங்கி வருகின்றோம். இது மிகுந்த காலக்கடமை யாக அமைகின்றது.

ஏனெனில், தென்னிலங்கையில் எம்மை நோக்கி படையெடுக்கின்றவர்கள் எமது மக் களின் வறுமையை பயன்படுத்தி அவர்களை கலாசார சீரழிவுகளுக்குள் தள்ளவும் தேசிய சிந்தனையில் இருந்து புறந்தள்ளவும் முனை கின்றனர்.

எனவேதான் இந்த விடயங்களில் நாமெ ல்லாம் தெளிவானர்களாக இருக்க வேண் டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மீது மிகுந்த அக்கறை உடையவர்களாக இருக்க வேண்டிய காலமாக இது அமைகின்றது. இந்த விழிப்புணர்வின் வடிவமாகவும் இந்த உதவிகள் அமைகின்றது என தெரிவித்துள் ளார்.

ஐரோப்பாவில் புலம்பெயர்ந்து வாழும் கிளிநொச்சி மாவட்ட மக்களின் அமைப்பான கிளிநொச்சி மாவட்ட மக்கள் ஒன்றியம் கிளி நொச்சி மக்கள் மாணவர்களின் நலன்கருதி பல்வேறு வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(அ-2)

# முன்பள்ளி திறப்பு விழா

(குருநகர்)

யாழ். வெஸ்கி ஆரம்ப சிறுவர் முன்பள்ளி இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு 51 ஆவது பிரிவு விக்ரமரட்ன தலைமையில் குருநகர் சனசமூக நிலையத்தில் ஆரம்பிக்க ப்படவுள்ளது.

இப்பாடசாலையினை ஸ்ரீலங்கன் தேசிய பாதுகாப்பு படைப்பிரிவின் 9 ஆவது பற்றா லியன் பிரிவினர் ஆரம்பித்து வைக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-7)

# கைதிகளின் ஆவணங்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி.கோரிக்கை

(கொழும்பு)

சிறைச்சாலையில் எரிந்து போன தமிழ் அரசியல் கைதிகள் உள்ளிட்ட ஏனையோரின் தனிப்பட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொடு க்க சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர், சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் உள் ளிட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எம்.பி. சிவசக்தி ஆனந்தன் கோரியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக் கையில் கூறியிருப்பதாவது,

கடந்த 24 ஆம் திகதி இரவு கொழும்பு மகசின் சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவர த்தை தொடர்ந்து ஆவண அறையில் வைக் கப்பட்டிருந்த ஆவணங்கள் அனைத்தும் தீயில் கருகியுள்ளன. தமிழ் அரசியல் கைதி கள் உள்ளிட்டவர்களின் வழக்கு தொடர்பான ஆவணங்களை நீதிமன்றத்திலிருந்து பெற் றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்து ள்ளதாக தெரிவித்துள்ள சிறைச்சாலை ஆணை யாளர் நாயகம் தமிழ் அரசியல் கைதிகள் உள்ளிட்ட ஏனையோரின் தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், கடவுச்சீட்டு, அவர்களது உடுப்புகள், பணம் உள்ளிட்ட பொருட்களை மீட்டுக் கொடுப்பது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

இந்தச் சிறைச்சாலையில் வெளிநாட்டைச் சேர்ந்தவர்களும் இருந்துள்ளனர். அவர் களது கடவுச் சீட்டு மற்றும் ஏனைய ஆவ ணங்கள் தொடர்பில் எத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவிப்பது டன் சிறைக்குள் இருந்த அனைவரதும் தனி ப்பட்ட ஆவணங்கள் தொடர்பாகவும் சிறைச் சாலை மறுசீரமைப்பு அமைச்சும் சிறைச் சாலை ஆணையாளர் நாயகமும் நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(அ-2)

# வடக்கில் மீள்குடியேறியோருக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும்

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் போர் இடம்பெற்ற பிரதேசங்க ளில் மீள்குடியேறும் மக்க ளுக்கு இலவசமாக மின்சார விநியோகம் வழங்கப்படும் என அர சாங்கம் அறிவித்துள்ளது.

அதாவது சொந்தப் பிரதேசங்களில் மீள் குடியேறும் நபர்களுக்கே இலவச மின்சார இணைப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப் படும் என மின்வலு மற்றும் எரிசக்தி அமை ச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

வடக்கில் புதிதாக மின்சார இணைப்பைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் 4 ஆயிரம் பேர் விண்ணப்பம் செய்துள்ளதாகவும் நாட் டில் அதிகளவில் மின்சாரத்தை மோசடியாக பயன்படுத்தும் மாவட்டம் வவுனியா எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)


# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.
கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:2012.02.08-2012.02.17 பி.ப 2.00 மணிவரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி: 2012.02.21 நண்பகல் 12.00 மணிவரை

கேள்வி திறந்து பார்க்கும் திகதி: 2012.02.21 பி.ப 2.00 மணிக்கு
கேள்விப்பத்திரம் வழங்கப்படும் இடம்: தலைமை அலுவலகம்,சுன்னாகம்.

| இல | வேலையின் விபரம் | மீளளிக்கப் படும் கேள்விப் பணம் வைப்பு | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|---|
| 1. | உடுவில் நாகம்மாள் வீதி மீள் தாரிடல் | 7000.00 | 560.00 | M8/C9 |
| 2. | இணுவில் துரை வீதி திருத்தம் | 16000.00 | 560.00 | M8/C9 |
| 3. | சுன்னாகம் அம்மன் கோயில் வீதி திருத்தம், ஸ்ரீலங்கா வீதி குறுக்கு ஒழுங்கை திருத்தம் | 11500.00 | 560.00 | M8/C9 |
| 4. | சுன்னாகம் மீன் சந்தை திருத்தம் | 46500.00 | 560.00 | M7/C8 |
| 5. | ஏழாலை காசிவாசி செந் திநாதையர் வீதி திருத்தம் | 38500.00 | 560.00 | M8/C9 |
| 6. | சுன்னாகம் சூழானை வைரவர் வீதி (சப்பாபதி வீதி) | 18000.00 | 560.00 | M8/C9 |
| 7. | சுன்னாகம் பருத்தி யோலை வீதி | 15000.00 | 560.00 | M8/C9 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் குறிக்கப்பட்ட இக்ராட் தரத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

தேசத்தை கட்டியெழுப்பும் (NBT) வரியாக மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணத்துடன் மேலதிகமாக 3% அறவிடப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரத்தின் மூலப்பிரதியை தலைவர் வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் என்ற முகவரிக்கும் அதன் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விபரம் தேவைப்படுவோர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

திரு.தி.பிரகாஷ்
தலைவர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

2012.02.08 (சி-5812)



# பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

பின்வரும் இடங்களுக்கு பிரதேச செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். தகுதியும் ஆர்வமும் உள்ளவர்களிடம் இருந்து (ஆண்கள்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பளை
- சோரன் பற்று
- மாசார்
- பரந்தன்
- கிளிநொச்சி
- உருத்திரபுரம்
- உடையார்கட்டு
- விசுவமடு
- மாங்குளம்
- புதுக்குடியிருப்பு
- முல்லைத்தீவு
- முள்ளியவளை
- வவுனிக்குளம்
- நாகபடுவான்
- செம்மலை
- வற்றாப்பளை
- அளம்பில்
- முழங்காவில்
- ஒட்டுசுட்டான்

முழுப்பெயர், நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி (இருப்பின்), பிறந்த திகதி, தே.அ.அ.இல, கி.சே.பிரிவு, பிரதேச செயலர் பிரிவு , குடியியல் நிலை, கல்வித் தகைமை, வேறு தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்பன உள்ளிட்டதாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை


பிரதம ஆசிரியர்,
இல 3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும்.



# சிறுவர் அரங்கம்

04



## உயர்வு-தாழ்வு

பிரம்மதத்தன் காசியை ஆண்ட காலத்தில் போதிசத்வர் ஒரு சிங்கமாகப் பிறந்தார். அந்தச் சிங்கம் தன் மனைவியோடு ஒரு மலையின் குகையில் வாழ்ந்து வந்தது. ஒருநாள் வேட்டையாடப் போன அந்த சிங்கம் ஒரு குளத்தருகே பல முயல்களும் மான்களும் இருப்பது கண்டு பலமாகக் கர்ஜித்தவாறே பாய்ந்தது.

சிங்கத்தின் கர்ஜனை கேட்டு முயல்களும் மான்களும் ஓடி விட்டன. ஆனால் வேகமாய்ப் பாய்ந்து வந்த சிங்கம் குளக்கரையில் உள்ள பெரிய பள்ளத்து சேற்றில் போய் விழுந்து சிக்கிக் கொண்டது. அதிலிருந்து அது எழுந்து வர முடியாமல் தத்தளித்தது. அது மேலே வரத் தன் கால்களை அழுத்திய போது கீழே தான் போயிற்று தன்னை யாராவது காப்பாற்ற வருவார்களா என அது பார்க்கலாயிற்று. ஆனால் யாருமே வரவில்லை. ஒரு நாளல்ல இரண்டு நாள்களல்ல. இந்த நிலையில் அது ஏழு நாள்கள் இருந்தது. அதற்குப் பின்னர்தான் ஒரு நரி அவ்வழியே வந்ததை அது பார்த்தது.

நரி சிங்கத்தைப் பார்த்து பயந்து சற்று தூரத்திலேயே நின்று விட்டது. சிங்கமோ தம்பி! பயப்படாதே. உன்னை ஒன்றும் செய்யமாட்டேன். ஒரு வார காலமாக உணவின்றி இங்கே அகப்பட்டுத் தவிக்கின்றேன். என்னைக் காப்பாற்று என்றது.

நரியோ "ஐயோ! பசியாக இருக்கும் உங்களைக் காப்பாற்றினால் முதலில் என்னையே கொன்று சாப்பிட்டு விடுவீர்களே. உங்களை எப்படி நம்பு வது?" எனக் கேட்டது. சிங்கமும் நீ என் உயிரைக் காத்தவன் என்ற நன்றி விசுவாசம் எனக்கு இராதா?

'நீ மட்டும் இந்தச் சேற்றில் இருந்து வெளியே வர எனக்கு உதவினால் என் வாழ் நாள் முழுவதும் உனக்கு உதவி செய்து கொண்டே இருப்பேன். என்னை நம்பு" என்றது.

நரியும் சிங்கம் கூறியதை நம்பி உலர்ந்த நீண்ட கட்டைகளை இழுத்து வந்து அந்தப் பள்ளத்தில் போட்டது. சிங்கமும் அவற்றின் மீது காலை வைத்து அந்தப் பள்ளத்திலிருந்து வெளியே வந்தது. அதன் பின்னர் அந்த சிங்கமும் நரியும் சேர்ந்தே வேட்டையாடின. சிங்கம் கொன்ற மிருகத்தை இரண்டும் சமமாகப் பகிர்ந்து கொண்டன. பின்னர் சிங்கம் "இனி நீ உன் மனைவியோடு என் குகைக்கே வந்து விடு. நாம் எல்லாரும் ஒன்றாக வாழலாம்" என்றது. நரியும் அதற்கு இணங்கித் தன் மனைவியை சிங்கத்தின் குகைக்கு அழைத்து வந்தது.

ஆண் சிங்கம் தன் நண்பனான நரியை அக்கறையுடன் கவனித்துக் கொண்டாலும் பெண் சிங்கம் மட்டும் நரியின் மனைவியைத் தாழ்வாகவே எண்ணி நடந்து கொண்டது. நரியின் மனைவியும் சிங்கம் உயர்ந்தது என்று தானே எண்ணிப் பணிந்து போய் நடந்து வந்ததால் இரு குடும்பத்தினரிடையே எவ்விதச் சண்டையும் ஏற்படவில்லை.

சிறிது காலத்திற்குப் பின் சிங்கத்திற்குக் குட்டிகள் பிறந்தன. நரிக்கும் குட்டிகள் பிறந்தன. அந்தக் குட்டிகளும் ஒன்று சேர்ந்து விளையாடலாயின. அப்போது பெண் சிங்கத்திற்கு ஒரே எரிச்சலாக வந்தது. தன் குட்டிகள் நரிக்குட்டிகளோடு விளையாடுவது தன் அந்தஸ்திற்குக் குறைவு என எண்ணி அது பொறுமியது. ஆனால் சிங்கக்குட்டிகளும் நரிக்குட்டிகளும் எவ்வித வேற்றுமையும் பாராட்டாமல் ஒன்றாக விளையாடி வரலாயின.

இதைக் காணச் சகியாத பெண் சிங்கம் தன் குட்டிகளிடம் "நாம் உயர்குலத்தவர். நரிக்குட்டிகள் தாழ் குலத்தில் பிறந்தவை. எனவே நீங்களெல்லாம் அவற்றோடு சமமாக பழகக் கூடாது" என்று சொல்லி வரலாயிற்று. தாய் இவ்விதம் அடிக்கடி கூறியதால் சிங்கக் குட்டிகளும் நரிக்குட்டிகளைத் தாழ்வாகவே கருதலாயின. அது விளையாட்டில் அடாவடி செய்து தாம் சொன்னதைத்தான் ஏற்க வேண்டும் எனச் சிங்கக் குட்டிகள் கூறி தாம் உயர்ந்த ஜாதிக்காரர்கள் என அறிவித்துப் பெருமைப்பட்டன.

ஒருநாள் பெண் நரி தன் கணவனிடம் தன் மனத்தை திடப்படுத்திக் கொண்டு பெண் சிங்கமும் அதன் குட்டிகளும் நடந்து கொள்ளும் விதம் பற்றிக் கூறியது.


மறுநாள் வேட்டைக்குப் போன போது நரி சிங்கத்திடம் "நீங்கள் அரச குடும்பத்தவர். நாங்கள் சாதாரணக் குடிமக்கள். எனவே இனி நம் இரு குடும்பங்களும் சேர்ந்து வாழ்வது அவ்வளவு நன்றாக இருக்காது. ஆகையால் நான் என் குடும்பத்தவரை அழைத்துக் கொண்டு என் உறவினர்கள் இருக்கும் இடத்திற்கு போய் விடுகின்றேன்" என்றது.

சிங்கம் அது கேட்டுத் திடுக்கிட்டு நரி ஏன் இப்படிக் கூற வேண்டும் எனக் கேட்டது. நரியும் உள்ள நிலையை விளக்கிக் கூறியது. குகை திரும்பிய சிங்கம் அன்றிரவு தன் மனைவியிடம் "நீ ஏன் நரிக்குட்டிகளை இழிவு படுத்துகிறாய்?" என்று கேட்டது.

பெண் சிங்கமும் "ஆமாம் அப்படிச் செய்வதில் என்ன தவறு உள்ளது? தாழ் குலத்தில் பிறந்த அவை உயர் குலத்தில் பிறந்த நம் குட்டிகளுக்குச் சமமாக ஆகிவிட முடியுமா? நான் என் குட்டிகளை நரிக்குட்டிகளோடு சேரவிடமாட்டேன். ஆமாம்! உங்களுக்கு ஏன் இந்த நரிக் குடும்பத்திடம் இவ்வளவு பாசம்!" என்று கேட்டது. சிங்கமும் ஓகோ! இதுவா விஷயம்! நான் ஒருமுறை சேற்றில் அழுந்தி ஒருவாரம் உணவும் நீரும் இல்லாமல் தவித்தேன். அப்போது இந்த நரி தன் மூளையை உபயோகித்து என்னை அந்தப் பள்ளத்திலிருந்து வெளியே கொண்டு வந்தது.

அன்று மட்டும் இந்த நரி என்னைக் காப்பாற்றி இராவிட்டால் நானும் இப்போது உயிருடன் இருந்திருக்க மாட்டேன். இந்தக் குட்டிகளும் உனக்குப் பிறந்திருக்காது. உயிர் காத்தவரை உதறி தள்ளுவது மாபெரும் பாவம். நம்மை நாமே அவமதித்துக் கொள்வதாகும்" என்றது. அது கேட்டு பெண் சிங்கம் வெட்கித் தலை குனிந்தது. மறுநாளே அது பெண் நரியிடம் தன் நடத்தைக்கு மன்னிப்புக் கோரியது. அன்று முதல் அந்த இரு குடும்பங்களும் அன்னியோன்யமாக வாழ்ந்து வரலாயின.

## அம்புலி மாமா கதைகள்



# வாகன சுகம் யாருக்கு?

வா்கன சுகம் எல்லோருக்கும் அமைவதில்லை.பல இலட்சக்கணக்கான சொத்து பெற்றிருப்பவர்களுக்கும் வாகன சுகம் அமைவதில்லை.

அதே சமயம் மாதச்சம்பளத்தில் இருப்பவர்களுக்கும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் வாகன சுகம் கிடைத்து விடுகிறது.

வாகனம் என்றால் கார்தான் என்று பொருளல்ல.காரில் ஆரம்பித்து சைக்கிள் வரைக்கும் வந்து நிற்கும்.எந்த வாகனம் அமைய வேண்டுமானாலும் யோக காலமும் தெசா புத்தியும் அமையவேண்டும்.

சாதாரண குடும்பத்தில் ஒரு குழந்தைக்கு வாகன யோகம் இருந்து பெரியவனான பின் அந்த யோகமில்லை யென்றாலும் ஜாதகத்தில் வாகன யோகம் காட்டித்தான் இருக்கும்.

ஆனால்,குழந்தைப்பருவத்தில் தள்ளுவண்டி, மூன்று சக்கர சைக்கிள் இத்தோடு பூர்த்தியடைந்து விடும் வாகன யோகம்.

பின்னால்,கையில் பணமிருந்தும் பஸ்கூட கிடைக்காமல் நடக்கவேண்டிய சந்தர்ப்பமும் வரலாம்.அல்லது, பணமில்லாததால் பஸ்ஸில் கூட பிரயாணம் செய்ய முடியாமல் போகலாம்.




சிலருக்கு அடிக்கடி பிறருடைய வாகனத்தில் செல்லும் யோகமுண்டு. அது கூட சிலருக்கு கிடைப்பதில்லை.

ஒருவர் தொழிலே இல்லாமல் இருந்தும், குடும்பத்திற்கு போதிய வருமானம் இல்லாமல் இருந்தும் சுமார் 52 வயது வரை வாகன யோகம், மோட்டார்சைக்கிள் வைத்துக்கொண்டு இருந்தார்.

எவ்வளவோ கஷ்ட காலத்திலும் அதை விற்க வேண்டிய கட்டம் வரவில்லை. விற்க வேண்டிய கட்டம் வரவில்லை.விற்க முனைந்தால் சிக்கல் பல தோன்றின.

இன்னுமொருவருக்கு பல வசதி இருந்தும் ஒரு காரை வைத்துக் கொள்ள முடியவில்லை. ஆசை மட்டும் இருந்தது. கார் வாங்கினால் சில நாட்கள் கூட ஓடாது.பழுது அதிகம்!

சிலருடைய வாகனம் செட்டில் தான்இருக்கும் ஓடாது.

எனவே,வாகன யோகம் என்பது செல்வந்தர்களுக்கு மட்டும் அமையும் என்பதில்லை.யாருக்கும் அமையலாம்.

ஜாதகப்படி நான்காம் இடத்தைக் கொண்டுதான் வாகன யோகம் உண்டா? இல்லையா என்று ஜோதிடர்கள் பாக்கிறார்கள்.

அங்கே சுபகிரகம் இருந்தால் வாகனம் உண்டு, பாபக் கிரகம் இருந்தால் இல்லை.

இது சாதாரண ஜோதிடம்!

இதன்படி அமைவதில்லை வாகன யோகம்.

நான்காம் இடத்தில் சுபகிரகம் இருந்தும், வாகன யோகம் இருப்பதும் கண்கூடு. நான்காமிடத்தில் சுபகிரகம் இருந்தும் பாபகிரக சேர்க்கை-பார்வை இருக்குமானால் நான்காமிடத்ததிபதி வலுக்குன்றி காணப்பட்டாலும் வாகனயோகம் பிசுபிசுத்துப் போவதுண்டு.

நான்காமிடத்தில் பாபக்கிரகமிருந்தும் சுப பார்வை இருந்தால் வாகன யோகம் ஏற்படுவதுண்டு.

நான்காமிடத்தில் சூரியன்,புதன்,குரு இருந்து,இராகு-கேது,சனி பார்வை இல்லாதிருக்குமானால் வாகன சேர்க்கை உண்டு.

நான்காமிடத்தில் கிரகமில்லாதிருந்து,வளர்பிறைச் சந்திரன், குரு,சுக்கிரன் பார்வை நான்காமிடத்துக்கு இருந்தாலும் வாகன சேர்க்கை ஏற்படலாம்.

நான்காமிடத்ததிபதி சுப-பாப எந்த கிரகமானாலும் நான்காமிடத்திலேயே ஆட்சி பெற்றிருந்தால் சுகம் உண்டு.

நான்காமிடத்ததிபதி நான்காமிடத்திற்கு ஆறு, எட்டு,பன்னிரண்டில் மறைந்திருந்தால் வாகன சுகமிருக்க நியாய மில்லை.

இது ஜோதிடம்!

நாம் இதை ஒத்துக் கொள்வதில்லை. காரணம், இது உண்மையாக இருக்குமானால் தொழிலுக்கதிபதி தொழில் ஸ்தானத்திற்கு எட்டாமிடம் பெற்றுவிட்டால் தொழிலே இல்லை என்றா சொல்கிறோம்.

தொழில் ஸ்தானத்திற்கு எட்டாமிடம் ல்க்கினத்திலிருந்து ஐந்தாவது திரிகோணமாவதால் தொழில் விருத்தியைச் சொல்ல வேண்டும்.

அதுபோல,வாகன ஸ்தானாதிபதி,வாகன ஸ்தானத்திற்கு (நான்காமிடம்) ஆறாமிடம் போகும் கிரகம் லக்கினத்திற்கு ஒன்பதாவது திரிகோணம் என்பதால் வாகன சௌகரியம் ஏற்படலாம்.

மேடம்,கடகம்,துலாம்,மகரம் முதலிய சர லக்கினங்களில் பிறந்தவர்களுக்கு நான்காமிடத்ததிபதி நான்காமிடத்திற்கு எட்டாமிடத்தில் மறைந்தால் அது பாதக ஸ்தானமாவதால் வாகன சுகம் ஏற்படாது. உதாரணமாக கன்னியா லக்கினத்துக்கு நான்காமிடத்ததிபதி குரு,மீனத்தில்,ஆட்சி பெற்றிருப்பதாக வைத்துக்கொள்வோம்.

நான்காமிடத்துக்கு இங்கே மறைந்திருக்கவில்லை. இருந்தாலும்,வாகன யோகம் ஏற்படாது.ஏன்?

உப இராசியான கன்னி இலக்கினத்தில் பிறந்ததால் வாகனாதிபதியாக குரு பாதகாதிபதியாகி பாதக ஸ்தானமே பெற்று விட்டாள். எனவே இவர்களுக்கு கார் போன்ற வாகன வசதி ஏற்படுத்திக் கொள்ள ஆசையிருந்தாலும் சித்திக்காது.

இத்தகைய கிரக அமைப்புக் கொண்ட ஜாதகர்கள் கார் லொறி, பஸ், ஆட்டோ ரிக்ஷா முதலியவற்றை வைத்துக் கொண்டு ஜீவிக்க எண்ணுவதும் நட்டத்தை விலை கொடுத்து வாங்குவதாகவே இருக்கும்.பண வசதி நிறைய பெற்றவர்களானாலும் இவ்வித எண்ணமிருந்தால் மாற்றிக் கொள்ள வேண்டும்.

இனி வாகனங்களால் ஏற்படும் இடையூறுகள் எப்படி ஏற்படுகின்றன என பார்ப்போம்.

4 ஆம் இடத்ததிபதி 6,8,12 ஆம் இடங்களில் ஒன்றில் நின்றாலும் அவர்களோடு சேர்ந்து எங்கு நின்றாலும் வாகனத்தால் இடையூறுகள் ஏற்படலாம்.

அதாவது 12 ஆம் இடத்ததிபதியுடன் சேர்ந்திருந்தால் நட்டமும் 8 ஆம் இடத்ததிபதியுடன் சேர்ந்திருந்தால் சிறு விபத்துக்களும் 6 ஆம் இடத்ததிபதியுடன் சேர்ந்திருந்தால் அடிக்கடி பழுதடைவதுமாக இருக்கும். இந்தக் கட்டுரையில் தாம் உதாரணமாக ஜீவனாதிபதி 8 ஆம் இடம் இருந்தால் லக்கினத்தில் இருந்து 5 ஆவது திரிகோணமாகிறதே ஜீவனத்துக்கு 8 ஆம் இடம் என்பதால் தொழிலே இல்லை என்றுஎப்படிக்கூறுவதென்று விளக்கி வாகனத்திற்குச் சொன்னது போல் தான் ஜீவனமிருக்கும்.

ஆனால் நித்திய கண்டம், பூர்ணாயுசாகத் தள்ள வேண்டி இருக்கும் என்று கூறலாம். வாகன ஸ்தானாதிபதி என்று சொல்லப்படும் நான்காமிடத்ததிபதி வாகன ஸ்தானத்துக்குப் பாதக்ஸ்தானம் பெறாமலும் பாதகமாதிபதிகளைச் சேராமலும் 4 ஆம் இடத்தை ஸ்தானாதிபதியை இராகு, கேது, சனி, செவ்வாய், சூரியன் பாராமலிருந்தால் வாகனத்தால் இலாபமேற்படும். வாகன ஸ்தானமான 4 ஆம் இடத்தில் சனி, இராகு, கேது முதலியவர்களில் ஒருவர் இருந்தாலும் அல்லது நான்காமிடத்தை சனி பார்த்தாலும் புதிய வாகனம் பெறுவதரிதாகும்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கைதடி வடக்கு மூலிகைப்பரம்பலை பயன்படுத்தலும் பாதுகாத்தலும்

| வாத நோய் நிலைமை | கீரை வகைகள் | நீரிழிவு நோய் நிலைமைகள் |
|---|---|---|
| வாத நிவாரணி | அறக்கீரை | நாவற்பழத்தின் விதை |
| முடக்கொத்தான் | தொய்யில் கீரை | ஆலம்பட்டை |
| பேராமட்டி | வல்லாரை | பப்பாசிப் பிஞ்சு |
| முத்தாமணிக்குவேர், இலை | பொன்னாங்காணி | நிலப்பனங்கிழங்கு- வேர்க்கிழங்கு |
| எருக்கம் பழுத்த இலை | முசுட்டை | கறிவேப்பிலை |
| வாதமடக்கி | அகத்தி | ஆவரசம் பஞ்சாங்கம் (இலை, பூ, காய், விதை, வேர்) |
| பாவட்டை | கறிவேப்பிலை | சிறுகுறிஞ்சா |
| கடுணைப்பாவட்டை | பிரண்டை | |
| பெருங்குறிஞ்சா | தயிர்வேளை | |
| | முக்காட்டை | |
| | சாரணை | |
| | முருங்கை | |

தற்காலத்தில் மூலிகைகளின் பயன்பாடு அதிகரித்துக் செல்வதையும் ஆய்வாளர்கள் தமது ஆய்வுகளை மூலிகைகளின் பக்கம் மேற்கொள்வதையும் காணக்கூடியதாக உள்ளது. யாழ்ப்பாணம் ஆனது மூலிகைகளின் பரம்பலை அதிகளவு கொண்ட சிறந்த இடமாக காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் பல்வேறுபட்ட தரைத்தோற்றம் மண்வளத்தையும் காலநிலைகளையும் பல்வேறுபட்ட மூலிகைகள் வளர்வதற்கேற்ற இயல்பையும் கொண்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்தின் குணப்பாடப் பிரிவு மூலிகைகளின் பரம்பல் தொடர்பான ஆய்வுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது.

இதன் மூலம் பல பிரதேசங்களில் பல அரிதான மூலிகைகள் அருகி வரும் மூலிகைகள் மற்றும் மருத்துவ முக்கியத்துவம் உள்ள தூய இனங்கள் (Genune Species) அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஏற்கனவே பரம்பல்கள் பதிவு செய்த இடங்களில் மீளவும் பரம்பலை கணிப்பதற்காக பல்வேறு பருவ காலங்கள் மற்றும் ஏற்கனவே சென்ற காலங்களில் மீளவும் செல்லும் போது அந்தஅரியமூலிகைகள் அழிக்கப்பட்டும், அழிந்தும் அழுகியும் இருப்பதை காணக்கூடியதாக இருந்தது.



பற்றைகள், புதர்கள், கோயிலைச் சூழ்ந்த பிரதேசம், தரிசு நிலங்களில் இவ்வாறான அரிய மூலிகைகள் அதிகளவில் காணப்பட்டன. இவை மக்களின் மூலிகை பற்றிய விழிப்புணர்வின்மை, அடையாளப்படுத்த முடியாமை அவற்றின் மருத்துவப் பெறுமதி தெரியாமை ஆகியவற்றாலும் வேறு தேவைகளுக்காகவும் டெங்கு போன்ற நுளம்பு பெருக்கத்தை தடுப்பதற்காகவும் அழிக்கப்பட்டிருக்கலாம்.

மருந்தே உணவு உணவே மருந்து என்ற முதுமொழியின் படி இயற்கையாகவே சிறந்து மருத்துவப் பெறுமதி மட்டுமல்லாது போசாக்கு பெறுமானத்தையும் கொண்டு வளரும் இவ் மூலிகைகள் பூச்சி நாசினி உரமாக்கி போன்றவற்றின் பாதிப்பு இல்லாது இயல்பாகவே வளர்வதால் உடலுக்கு எந்த தீங்கையும் ஏற்படுத்தாது. உடலை பாதுகாத்து ஆரோக்கியத்தை வழங்கக் கூடியதும் ஆகும்.

இந்த வகையில் இம்மாதம் இறுதி வாரத்தில் மூலிகைப்பரம்பல் ஆய்விற்காக கைதடி வடக்கு பிரதேசம் சென்ற போது பல்வேறு வகை மூலிகைகளின் பரம்பல் அதிகமாக காணப்பட்டது.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

இதில் மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்த அதிகளவு வெண்கொடி வேலி மற்றும் கற்றாளை ஆகியன இணங்காணப்பட்டன. மூலிகைத் தோட்டங்களில் பயிரிட்டு எடுக்கும் மூலிகைகளிலும் பார்க்க இப்பிரதேசங்களில் வளரும் மூலிகைகளின் மருத்துவச் செய்கை நோய் தீர்க்கும் ஆற்றல் அதிகமாகும்.

ஆகவே இயற்கையான ஒரு மூலிகை ஒரு இடத்தில் தானாக வளரும் போது அதனை அவ்விடத்திலேயே வைத்துப் பாதுகாத்தலோடு அதில் மேலும் இம் மூலிகையை வளர இடம் அளித்தல் பிரதான ஒரு கடமையாகும்.

(தொடரும்)

# ஆணைக்குழுவின் அறிக்கையை அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தென்னாபிரிக்கா வலியுறுத்து

(தென்னாபிரிக்கா)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்த இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தென்னாபிரிக்கா கோரியுள்ளது.

பரிந்துரைகள் துரிதகதியில் அமுல்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டின் சகல அரசியல் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முனைப்புக்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசத்தை கட்டியெழுப்புவதற்கும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் மெய்யாகவே ஒத்துழைப்பு வழங்கத் தயார் என தென்னாபிரிக்க அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இடம்பெயர் மக்களை மீள்குடியேற்றல், மனித உரிமை பாதுகாப்பு, புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு போன்ற நடவடிக்கைகள் தொடர்பில் ஆணைக்குழு காத்திரமான பரிந்துரைகளை முன்வைத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறெனினும் மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து அறிக்கையில் போதியளவு தெளிவாக குறிப்பிடப்படவில்லை என தென்னாபிரிக்க அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# இராணுவ உயர் அதிகாரிகளுக்கு தண்டனை விதியுங்கள் !

## ஹிலாரி வலியுறுத்து

(கொழும்பு)

வன்னிப்போரில் கடமையாற்றிய உயர் இராணுவ அதிகாரிகளுக்குதண்டனைவிதிக்குமாறு அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளிண்டன் இலங்கை அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

வடக்கு, கிழக்கு இராணுவ முகாம்களை அகற்றுமாறும் படையினருக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தி ஹிலாரி கிளிண்டன் அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரியின் ஊடாக அனுப்பி வைக்கப்பட்ட விசேட கடிதத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பரிந்துரைகள் அமுல்படுத்தவில்லை என ஹிலாரி வருத்தும் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, ஹிலாரி கிளிண்டன் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளதாக சிரேஷ்ட படையதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இம்தியாஸ் பாக்கீர் தொடர்பான கருத்தை எதிர்க்கட்சி தலைவர் வாபஸ் பெறவேண்டும்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தொடர்பில் வெளியிட்ட கருத்தை பகிரங்கமாக வாபஸ் பெற வேண்டுமென அக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு குறிப்பிடுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய தலைமைவத்தின் பின்னடைவை இந்தக் கருத்தின் ஊடாக தெளிவாக புரிந்து கொள்ள கூடியதாக உள்ளதென அந்தக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறுகிய மனப்பான்மையுடன் செயற்படவில்லை என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் கீர்த்திமிக்க முஸ்லிம் பரம்பரையிலிருந்து வந்த உண்மையான ஒரு நபர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் என அக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் குழு குறிப்பிடுகின்றது.

அவர் தொடர்பில் தெரிவிக்கப்பட்ட கருத்து குறித்து ரணில் விக்ரமசிங்க தனது வருத்தத்தினை தெரிவிக்க வேண்டும் எனவும் பகிரங்கமாக அதனை வாபஸ் பெற வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ரணில் விக்ரமசிங்க தெரிவித்த கருத்து ஏற்றுக் கொள்ளத்தகாது என்பதனை உடனடியாக நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்துவது ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவின் பொறுப்பென அக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுவின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# நூல் வெளியீட்டு விழா

பூநகரி நற்குணம்- தயானின் வானொலி நாடகத்தின் நூல் வெளியீடுகள் தாயுள்ளம், பிரிவு என்பனவற்றை இணைத்து வெளிவருகின்றன.

இவ் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாபூசணம் பொன்.தில்லைநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பூநகரி பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார், பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.தர்மரத்தினம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக பூநகரி வைத்திய அதிகாரி எஸ்.மதிவனன், பூநகரி பிரதேசசபைத் தலைவர் பொ.சிறீஸ்கந்தராஜா, பூநகரி கலாசார உத்தியோகத்தர் திருமதி றஜனி நரேந்திரா, கிளி.பூநகரி மகா வித்தியாலய அதிபர் எஸ்.ஆர்.பாலச்சந்திரன், கிளி.ஞானிமடம் அ.த.க.பாடசாலை அதிபர் திருமதி த.கனகசபை, ஞானிமடம் கிராம அலுவலர் செல்வி என்.தமிழினி, கிளி.பூநகரி மகாவித்தியாலய ஆசிரியர் என்.ஜெயரூபன், பூநகரி ப.நோ.கூ.சங்கத் தலைவர் த.தயாரூபன், பூநகரி இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-7-84)

# 2012.02 08 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1587-இங்கிலாந்தின் முதலாம் எலிச பெத்தை கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றஞ்சாட் டப்பட்டு ஸ்கொட்லாந்து அரசி முதலாம் மேரி தூக்கிலிடப்பட் டாள்.

★1622-லண்டனில் நிலநடுக்கம் பதியப் பட்டது.

★1849-புதிய ரோமன் குடியரசு அமைக் கப்பட்டது.

★1900-போவர் போர் தென்னா பிரிக்காவில் லேடிஸ்மித் என்ற இடத்தில் பிரித்தானியப் படை கள் போவர்களினால் தோற் கடிக்கப்பட்டன.

★1904-சீனாவின் லூஷென்கோ (முன்னர் போர்ட் ஆர்தர்) நகரை ஜப்பான் தாக்கியது.

★1924-ஐக்கிய அமெரிக்காவின் மரண தண்டனைகளுக்கு முதற் தட வையாக நச்சு வாயுவை பயன் படுத்தும் முறை நெவாடாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

★1942-ஜேர்மன் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றில் நேதாஜி ஜேர்மனியை விட்டு தெற்காசியாவுக்குப் புறப்பட்டார்.

★1956-இலங்கையில் சிங்களம் மட்டும் சட்டம் களனி மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

★1963-கியூபாவுடனான போக்குவரத்து, பொளாதார மற்றும் வர்த்தக நடவடிக்ககள் ஐக்கிய அமெ ரிக்க மக்களுக்கு தடை செய் யப்பட்டதாக ஜனாதிபதி ஜோன் எஃப் கென்னடி அறிவித்தார்.

★1971-நாஸ்டாக் பங்குச் சந்தைக் குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டது.

★1974-84 நாட்கள் விண்ணில் சஞ்சரித்த பின்னர் முதலாவது அமெரிக்க விண்வெளி ஆய்வுகூட ஸ்கை லாப் 4 வீரர்கள் பூமி திரும் பினர்.

★1974-அப்பர் வோல்ட்டாவில் இராணு வப் புரட்சி இடம்பெற்றது.

★1989-போர்த்துக்கலில் போயிங் 707 விமானம் ஒன்று சாண்டா மரியா மலையில் மோதியதில் 144 பேர் உயிரிழந்தனர்.

★2005-இஸ்ரேலும் பாலஸ்தீனமும் போர் நிறுத்தத்திற்கு உடன்பட்டன.

### பிறப்புக்கள்

★1700-டானியல் பேர்னோலி, கணிதவியலாளர் (இ.1782)

★1828-ஜூல்ஸ் வேர்ன், பிரெஞ்சு எழுத்தாளர் (இ.1905)

★1834-திமித்ரி மெண்டெலீவ், இரகசிய வேதியியலாளர் (இ.1907)

★1897-ஜாகீர் உசேய்ன், இந்தியாவின் மூன்றாவது குடியரசுத் தலைவர் (இ.1969)

### இறப்புக்கள்

★1804-ஜோசப் பிரீஸ்ட்லி, ஆங்கிலேய வேதியியல் அறிஞர் (பி.1733)

★1889-சொலமன் ஜோன்பிள்ளை, எழுத்தாளர், சிலோன் பேட்ரியட் பத்திரிகையின் ஆசிரியர்


★1975-றொபர்ட் றொபின்சன், நோபல் ப்ரிசு பெற்ற பிரித்தானிய வேதியியலாளர் (பி.1886)

★1993-நா. சண்முகதாசன், ஈழத் தமிழ்த் தொழிற்சங்கவாதி, அரசியல்வாதி (பி.1920)

★2005-அரியநாயகம் சந்திரநேரு, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், மனித உரிமை ஆர்வலர்

### சிறப்பு நாள்


★பரிநிர்வாண நாள்- பௌத்த வழிபாட்டு தினம்



★1963-இந்திய முன்னாள் துடுப்பாட்ட வீரர் மொகமட் அசாருதீன் பிறந்த தினம்

# அதிசய உலகம்...

# துண்டுக் காகிதத்தில் மின்சார உற்பத்தி




ஒரு துண்டுக்காகிதம் ஒன்றில் இருந்து மின்சாரம் உருவாக்கும் தொழில்நுட்பத்தை உலகின் பிரபல மின் உபகரணங்களைத் தயாரிக்கும் நிறுவனமான சொனி கண்டுபிடித்துள்ளது. இந்தக் கண்டு பிடிப்பின் மூலம் சொனி நிறுவனம் தனது சுற்றுச் சூழல் தொடர்பான சமூக அக்கறையினையும் வெளியிட்டுள்ளது.

வீணாகப் போகும் துண்டு காகிதத்தில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் செயன்முறையினை சொனி நிறுவனம் அண்மையில் மாணவர்களுக்கு விளக்கியது. துண்டு துண்டாக வெட்டப்பட்ட காகித அட்டையை ஒரு போத்தலினுள் இட்டு அதனுள் தண்ணீரையும் சேர்த்து நன்றாக குலுக்கி சில நிமிடங்கள் வைக்கப்பட்டது. குறித்த சில நிமிடங்களின் பின்னர் கலவையிலிருந்து உருவாகிய மின்சாரத்தில் இருந்து சிறிய மின்விசிறி ஒன்று சுழல வைக்கப்பட்டது.

மரத் துண்டை அரித்து உண்ணும் கறையான் பெறும் சக்தியும் இதே தொழில்நுட்பத்தில் தான் இயற்கையால் செயற்படுத்தப்பட்டதாக சொனி நிறுவனத்தின் பொதுமக்கள் தொடர்பு முகாமையாளரான Chisato Kitsukawa தெரிவித்தார்.

இதற்கு முன்னரும் இந்த வகையில் மின்சாரம் தயாரிப்பது குறித்து கல்வி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வருங் காலத்தில் நீர்மின் சக்தி, நிலக்கரி மூலம் மின்சக்தி , அணு மின் நிலையம் போன்ற மின் உருவாகும் மூலகங்களுக்கு இப்படியான மாற்றுவழிகள் மூலம் மின்சாரம் கிடைத்தால் இயற்கையின் பாதுகாப்பும் அதிகரிக்கும்.


# முதலைத் தோலினால் தயாரிக்கப்பட்ட கிற்றார்



இங்கு காணப்படும் கிற்றாரின் சிறப்பம்சம் என்-வெனில், முதலை தோல் மற்றும் விலைமதிப்புள்ள கறுப்பு வைரக்கற்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் சந்தை மதிப்பு 85000 டொலர்களாகும்.

லூசியானாவில் உள்ள கறுப்புத்தோல் முதலையின் தோலிலேயே இந்த கிற்றார் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.


# 3 ஆயிரம் அடி உயரத்தில் கம்பியின்மேல் யோகாசனம்



சுமார் 3 ஆயிரம் அடி உயரமான இரண்டு மலைகளுக்கு குறுக்கே கட்டப்பட்ட கம்பியின் மேலாக நடந்து சென்று யோகாசனம் புரிகிறார் இந்த வாலிபர். சாதனை செய்ய ஆசைப்பட்டால் உயிர்ப்பயம் இருக்கக் கூடாது. இவர் விடயத்தில் அது எவ்வளவு உண்மை! இவர் கம்பி மேல் நடப்பதை பார்த்து ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

26 வயான மிச் ஏற்கனவே முன்னனுபவம் உள்ளவர். இதன் காரணமாகவே இவருக்கு அனுமதி வழங்கப்பட்டது. கால் தவறினால் மரணம்.

# உலகிலேயே மிகப்பெரிய தொங்குபாலம் மெக்ஸிக்கோவில்-கின்னஸில் பதிவு



உலகின் மிகப்பெரிய தொங்கு பாலத்தை நிர்மாணித்து மெக்ஸிக்கோ கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துக் கொண்டது.


1000 மீற்றர் நீளமானதும் 400 மீற்றருக்கும் அதிகமான உயரம் கொண்டதுமான இப்பாலம் பொதுமக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது. இதன் மையப் பரப்பு பாரீசிலுள்ள ஈபிள் கோபுரத்தின் பரப்புடன் பொருந்துகிறது.

பல மில்லியன் பவுண்ஸ் செலவில் உருவான இப்பாலம் மெக்ஸிகோவின் சியரா மத்ரே ஒக்ஸிடென்டல் மலையின் ஆழமான இடுக்குகளின் வழியாக ஊடறுத்துச் செல்கின்றது. இதை உருவாக்க 4 ஆண்டுகள் எடுத்துள்ளது.

1810 ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டிடமிருந்து மெக்ஸிக்கோ சுதந்திரம் பெற்ற இருநூறு ஆண்டுகளைக் குறிக்கும் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இப்பாலம் கட்டப்பட்டுள்ளது.

மெக்ஸிக்கோ ஜனாதிபதி பெலிப்பே கால்டெரொன் இது குறித்து தெரிவிக்கையில்,முன்னெடுப்போதும் இல்லாத வகையில் வடக்கு மெச்சிக்கோ மக்கள் இதன் மூலம் ஒன்றுபடப்போகின்றனர் என்றார்.

# மணிக்கு 500 கி.மீ வேகத்தில் அதிவேக ரயில் தயாரிப்பில் சீனா



வளர்ந்து வரும் தொழில்நுட்பவளர்ச்சியில் புதுப் புது கண்டுபிடிப்புக்கள் வந்து கொண்டே இருக்கின்றது. அந்த வகையில் 500kmph பயணிக்க கூடிய ரயில் சேவையின் சீன நிறுவனம் ஒன்று பரீட்சித்துப் பார்த்துள்ளது. சீனாவின் மிகப் பெரிய புகையிரத கட்டுமான நிறுவனமான CSR Corp Ltd இத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு சீனா ரயில்பாதை திணைக்களம் மறுப்பு தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.கடந்த ஜீலை மாதம் ஆரம்பிக்கப்பட்ட 300kmph வேகத்தில் பயணிக்கும் ரயில் சேவையினால் சுமார் 40 பேர் வரை மரணமடைந்துள்ளதால் அதிக வேக ரயில் சேவை தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாக அமைச்சர் Liu zhijnu தெரிவித்துள்ளார்.

# புலனாய்வுத்துறையின் புதுமை

ஊழல், இலஞ்ச லாவண்யங்களை வெளியே கொண்டு வர பேனாவில் கமரா ,பூச்செண்டில் கமரா போன்றவை புலனாய்வு பத்திரிகையாளர்களால் பயன்படுத்தப்படுகின்றன. இதில் மேலும் ஒரு சாதனையாக உலகிலேயே மிகச்சிறிய கமரா ஒன்றை அமெரிக்காவில் தயாரித்துள்ளனர்.

விரல் நுனியில் வைத்துக் கொள்ளலாம். கமரா இருப்பதுபோன்றே தெரியாது. எனினும் இதன்மூலம் எடுக்கப்படும் போட்டோக்கள் மற்றும் வீடியோக்கள் மிகவும் துல்லியமானவையாக உள்ளன. இதில் 32 ஜி.பி மெமரியை வைக்கலாம். இந்த கமரா விற்பனைக்கு வந்துவிட்டால் இலஞ்சம் வாங்கும் அரசியல்வாதிகளும் அலுவலர்களும் கூடுதல் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டி நேரிடலாம்.

# லொறிச் சாரதியின் அதீத துணிச்சல்



சில விடயங்களைச் செய்வதற்கு ஒரு தில் வேணும் என்று கூறுவார்கள். ஆனால் இந்த லொறிச் சாரதியின் ஓவர் தன்னம்பிக்கையைப் பார்த்து நீங்கள் கூட ஒரு கணம் திகைத்து தான் போவீர்கள்.

இந்த புகைப்படமானது இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் எடுக்கப்பட்டதாகும்.

அளவுக்கதிகமாக மரங்களை ஏற்றி வந்த லொறி ஒன்று பின்பக்கத்தில் பாரம் அதிகமாகியதால் முன்பக்கம் மேலே எழும்பி உள்ளது.

கிரேன் உதவிக்கு அழைத்துவிட்டு அது வரும் வரை லொறியின் சாரதி ஓய்வெடுக்கும் இடத்தைப் பார்த்தீர்களா?

ஆம், முன்பக்கம் எழும்பிய லொறியின் கீழ் எந்த வித சலனமும் இன்றி குட்டித் தூக்கம் போடுகின்றார் சாரதி. இவரை நீங்கள் எப்படி அழைப்பீர்கள். தில்லான சாரதி என்று தானே. பயமறியாத சாரதியும் கூட.

# ஆங்கிலமொழி வாய்மொழி பரீட்சைக்கு பத்துப்புள்ளிகள்

## அடுத்தவருடம் அமுல் என்கிறார் கல்வியமைச்சர்

(கொழும்பு)

அடுத்த வருடம் முதல் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில மொழிப்பாடத்துக்கான வாய்மொழிப் பரீட்சைக்கு 10 புள்ளிகள் வழங்கப்படுமென கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

நேற்றைய தினம் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை அவர் கூறினார். செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கத்திற்கு ஏற்ப மொழிக் கற்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் அடுத்த வருடம் முதல் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கில மொழிப் பாடத்துக்கான வாய்மொழிப் பரீட்சை அறிமுகப்படுத்தப்படுகின்றது. வாய்மொழிப் பரீட்சைக்கென 10 புள்ளிகளை மாணவர்கள் பெறுவர்.

மாணவர்களின் ஆங்கில மொழிப் பேச்சாற்றலை விருத்தி செய்யும் பொருட்டு இப்புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

ஒரு சில பாடசாலைகள் கொரிய மொழி மற்றும் பிரான்ஸ் மொழி என்பவற்றை தங்களது சொந்த செலவில் கல்வி அமைச்சின் அனுமதியை பெற்று நடத்தி வருகின்றன.

இந்நடவடிக்கைகள் அம்மொழிகளைக் கற்கும் மாணவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மொழியாற்றல் மூலம் முன்னேறுவதற்கு வழி அமைக்கின்றது என்றார். (அ-2)

# வடக்குக்கிழக்கில் போரை ஏற்படுத்த கூட்டமைப்பு முயற்சி

## பிரதியமைச்சர் முரளிதரன் கூறுகிறார்

(மட்டக்களப்பு)

வடக்கு, கிழக்கில் மீண்டும் போரை தொடங்குவதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் உள்ளிட்ட தரப்பினர் முயற்சித்து வருவதாக பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் கொள்கைகளையே தமிழ் தேசியக்கூட்டமைப்பினர் பின்பற்றுகின்றனர். தமிழ்தேசியக் கூட்டமைப்பின் இந்தத் திட்டத்திற்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது என தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு இளைஞர்களின் மத்தியில் மீண்டும் பிரிவினைவாத விஷத்தை விதைக்க முயற்சிக்கப்படுகின்றது எனவும் வெளிநாட்டு சக்திகளும் இந்த நடவடிக்கையின் பின்னணியில் இயங்கி வருகின்றன என குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# அரசியலில் ஈடுபடமாட்டேன்; பாரதவின் மகள் தெரிவிப்பு

(கொழும்பு)

ஊடகங்களில் சித்தரிக்கப்பட்டது போன்று தான் அரசியலில் மும்முரமாக ஈடுபடப்போவதில்லை என பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மகள் ஹிருணிக்கா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

நான் ஒரு அரசியல் கட்சியில் அங்கத்துவத்தை பெற்றது உண்மைதான். இது தீவிர அரசியலில் ஈடுபடுவதாகாது என அவர் கூறினார்.

எதிர்காலத்தில் தீவிர அரசியலில் ஈடுபடுவாரா என அவரிடம் கேட்கப்பட்டது. தீவிர அரசியலுக்கு எதிர்காலத்தில் வருவேன் என நான் பலதடவை கூறியுள்ளேன். ஆன்ாலும் அது இப்போது நடைபெறாது என அவர் கூறினார்.

எனது தந்தையின் மரணத்தின் பின் மக்கள் என்னை அதிகம் அறிந்து வருகின்றனர். எனது ஒவ்வொரு நடவடிக்கையும் கூர்ந்து அவதானிக்கப்படுகின்றது. சில சமயம் இது திரித்துக் கூறப்படுகின்றது என ஹிருணிக்கா தெரிவித்துள்ளார். (அ-2)

# அலுவலகத்தை திறந்து வைத்தார் நாமல்

(கொழும்பு)


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அமைப்பினுடைய யாழ். அலுவலகம் நேற்று முன்தினம் பகல் 12 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினரும் இளைஞர்களுக்கான நாளைய அமைப்பின் தலைவருமான நாமல் ராஜபக்ஷ இந்த அலுவலகத்தை திறந்து வைத்தார்.

யாழ். பருத்தித்துறை வீதியில் இலக்கம் 108 (ஆரியகுளச் சந்தி எனும் முகவரியில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட இளைஞர்களுக்குச் சேவை செய்வதையும் இளைஞர்களுடைய பிரச்சினைகளைத் தீர்வு காண்பதற்குமாகவே இவ் அலுவலகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இவ் அலுவலகம் திறந்து வைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)



முழங்காவில் ம.வித்தியாலயத்தில் பல வருடங்களாக ஆசிரியராகக் கடமையாற்றிய மூளாய் நகரைச் சேர்ந்த சி.மதனகுமாரின் இரண்டாம் ஆண்டு நினைவாக பாடசாலை முன்றலில் சரஸ்வதி சிலையொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அச்சிலையின் அருகே பாடசாலை அதிபர் சு.கணபதிப்பிள்ளையுடன் அமரருடன் ஒன்றாகக் கல்வி கற்பித்த ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

# சிராந்தி பயணம் செய்த வாகனம் விபத்தில் சிக்கியது

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி சிராந்தி ராஜபக்ச சென்ற வாகனம் பேராதனையில் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த பெண் அதிகாரி ஒருவர் காயமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணியளவில் வீதி போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்ட சற்று நேரத்தில் பேராதனை மேம்பாலத்தின் பின்னால் வந்த பாதுகாப்பு வாகனத்துடன் சிராந்தியின் வாகனம் மோதியே இந்த விபத்து இடம்பெற்றது.

இவ்விபத்தில் பாதுகாப்பு வாகனத்தில் வந்த இராணுவச் சிப்பாய் ஒருவரும் சிராந்தியின் வாகனத்தில் சென்ற பெண் அதிகாரி ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

கண்டியில் பாடசாலை ஒன்றில் நடந்த நிகழ்வில் பங்கேற்க சிராந்தி ராஜபக்ஷ சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றது. (அ-2)

# இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்ட பதினைந்து மீனவர்கள் விடுதலை

இந்தியாவில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்ட மூன்று படகுகளும் இவர்களுடன் விடுவிக்கப்பட்டுள்ளதாக கடற்தொழில் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தெய்வேந்திரமுனை மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் இருந்து மீன்பிடி நடவடிக்கைகளுக்காகச் சென்ற மீனவர்களே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மீனவர்கள் விரைவில் நாடு திரும்பவுள்ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இவர்கள் விடுதலை செய்யப்பட்டதையடுத்து இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் எண்ணிக்கை ஆறாக குறைந்துள்ளது. (அ-2)

# காட்டுப்பகுதியில் காணாமல்போன விமல் வீரவன்சவின் மனைவி மீட்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் யால தேசிய வனவிலங்குகள் சரணாலயத்திற்கு சென்ற அமைச்சர் விமல்வீரவன்சவின் மனைவி அங்குள்ள,அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் காணாமல்போய் நேற்று முன்தினம், கடுமையான தேடுதல் நடவடிக்கைக்குப் பின் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யால தேசிய வனவிலங்குகள் சரணாலயத்தின் மிகவும் ஆழமான பகுதியில் அமைந்துள்ள கெபிலித்த ஆலயத்துக்கு மூன்று வாகனங்களில் சென்ற சசி வீரவன்ச குழுவினர் நடுக்காட்டு சகதிக்குள் சிக்கிக் கொண்டனர்.

இதனால் சசி வீரவன்ச உள்ளிட்டோர் காட்டுக்குள் இருந்து வெளியேற வழி தெரியாமல் திணறினர். ஒருநாள் முழுவதும் அவர்கள் காட்டுக்குள் தவித்துக் கொண்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் காலை மூன்று பொலிஸ் குழுக்கள் காணாமல் போனவர்களை தேடும் பணியில் இறங்கியுள்ளன.

இதையடுத்து காணாமல் போன விமல் வீரவன்சவின் மனைவி உட்பட ஏனையோர் பத்திரமாக மீட்டு வரப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (அ-2)

# கெஹலிய ரம்புக்வெல படுகாயம்

(கொழும்பு)



அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற எதிர்பாராத விபத்து ஒன்றில் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த விபத்து குறித்த தகவல்கள் ஏதும் இதுவரையில் வெளியிடப்படவில்லை எனவும் விபத்தில் காயமடைந்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் சிறிலங்கா கார்டியன் செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

# சவாலுக்கு சவால்!

தமிழக அரசியல் வானில் பல புதிய பரிமாணங்களை உருவாக்கியுள்ளது, சட்டமன்றத்தில் நடந்த ஜெயா-விஜயகாந் மோதல். ஆனால், இந்த மோதல் திடீரென்று நிகழ்ந்த நிகழ்வல்ல. பின்னணியில் ஏகப்பட்ட அரசியல் நோக்கங்களும் உண்டு என்கிறார்கள். அ.தி.மு.க.வின் முன்னணி தலைவர்களும் தே.மு.தி.க.வின் இரண்டாம் கட்டத்தலைவர்களும்.

இந்நிலையில் இந்த மோதலுக்கு பிள்ளையார் சுழி போட்டுவிட்டதாக கருதப்படும் தே.மு.தி.க. எம்.எல்.ஏ. சந்திரகுமார் பேசிய போது,

"விலைவாசி உயர்வைக் கட்டுப் படுத்துவோம் என்று மக்களிடம் சொல்லித்தான் வாக்கு வாங்கினோம். மக்களும் உங்களை ஆட்சியில் அமர வைத்தார்கள். ஆனால், பால் மற்றும் பஸ் கட்டணங்களை உயர்த்தியிருக்கிறீர்கள். வாக்களித்த மக்களுக்கு செய்கின்ற நன்மை இதுதானா? தனியார் நிறுவனங்களின் வளர்ச்சிக் தூகத்தான் இந்தக் கட்டண உயர்வா? உள்ளாட்சித் தேர்தல் முடிந்ததும் இந்தக்கட்டணங்களை உயர்த் தியதைப் போல, இந்தக் கூட்டத்தொடர் முடிந்ததும் மின் கட்டணத்தையும் உயர்த்தப்போகிறார்கள் என்று மக்கள் சந்தேகிக்கிறார்கள். இதற்கு அரசு என்ன பதில் சொல்லப் போகிறது?" என்றெல்லாம் நான் பேச, இதனை அனுமதிக்கக் கூடாது என்கிற பாணியில் சில, பல அமைச்சர்களும், அ.தி.மு.க. எம்.எல்.ஏ.களும் எழுந்து நின்று கூச்சல் போட்டனர். நாங்களும் பதில் கொடுத்தோம்.

ஒரு கட்டத்தில், அவை முன்னவரான அமைச்சர் ஓ.பி.எஸ், "சட்டமன்றத் தேர்தலில் உள்ளே வரமுடியாதவர்களையெல்லாம் உள்ளேவர வைத்துள்ளோம். உள்ளாட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெற்றோம். சட்டமன்றத் தேர்தலில் ஜெயலலிதாவுக்குத்தான் மக்கள் வாக்களித்தார்கள் என்பதை தே.மு.தி.க. உணர்ந்து கொள்ள வேண்டும்" என்றார். அப்போ நான், "அப்படியானால் பால், 'பஸ் கட்டணங்களை உயர்த்திவிட்டு உள்ளாட்சித் தேர்தலை சந்தித்திருக்க வேண்டும்" என்றேன். அதற்கு அமைச்சர் செங்கோட்டையன் எழுந்து, "சங்கரன் கோவில் இடைத் தேர்தல் வருகிறது. அப்போ தெரியும் ஜெயலலிதாவின் செல்வாக்கு எப்படிப் பட்டது என்று" என்றார்.

**தனித்துப்போட்டியிட முடியுமா?**

இப்படியே அவர்களுக்கும் எங்களுக்கும் வாதம்-பிரதிவாதம் நடக்க, அப்போது குறுக்கிட்ட முதல்வர் ஜெலலிதா, "இடைத் தேர்தலில் தனத்துப் போட்டியிட திராணி உள்ளதா? தனித்துப் போட்டியிட உங்களால் முடியுமா?" என்றார்.

அதுவரை அமைதியாக சபையை கவனித்துக் கொண்டிருந்த எங்கள் தலைவர் விஜயகாந்த், அப்போது எழுந்து குறுக்கிட்டார், "2006-2011-ல்

## மோதலின் முழுப்பின்னணி!

நடந்த இடைத் தேர்தல்களில் உங்களால் ஒரு இடத்தில் கூட ஜெயிக்க முடியவில்லையே? இது ஏன்?. இப்போ நீங்கள் ஆளும்கட்சி. இடைத் தேர்தலில் ஆளும் கட்சிதான் ஜெயிக்கும்ங்கிறது எல்லோருக்கும் தெரியும்." என்றார். "தேர்தலுக்கு முன்பே தோல்வியை ஒப்புக் கொண்டுவிட்டார்" என்று ஜெயலலிதா சொல்ல, "தோல்வியை ஒப்புக் கொள்ளவில்லை நீங்க கேட்ட கேள்விக்கு பதில் சொன்னேன். அவ்வளவுதான்; பென்னாகரம் இடைத் தேர்தலில் ஏன் தோற்றீர்கள்? பதில் சொல்லுங்கள்; இடைத் தேர்தலிகளில் தி.மு.க என்ன செய்ததோ அதையே தான் நீங்களும் செய்யப்போகிறீர்கள்" என்று ஆத்திரப்படாமல் தெளிவாக அவர்களுக்குப் புரிகிறமாதிரி விளக்கம் சொன்னார் எங்க தலைவர் (கப்டன்).

இதை பொறுத்துக் கொள்ள முடியாத அ.தி.மு.க.வினர் ரகளையில் ஈடுபட்டனர். (விஜயகாந்தைப்) பார்த்து ஒருமையில் அசிங்கமாகவும் அருவருப்பாகவும் கையை நீட்டி கூச்சல் போடவும் தான்... அதைப் பொறுக்க முடியாத எங்கள் கப்டன் (விஜயகாந்த்) சட்டென்று எழுந்து அவர்களை எச்சரிக் கும்



தொனியில் "இது நல்லதுக் கில்லே... எதுவானாலும் வாங்க வெளியில் வைச்சுக்கலாம்" என்றார். ஆனால், அவைக்கு குந்தகம் விளைவிப்பதாக சொல்லி தலைவர் உட்பட எங்க எம்.எல்.ஏ.க்கள் அனைவரையும் வெளியேற்றிவிட்டார் சபாநாயகர் ஜெயக்குமார். அத்துடன் விஜயகாந்த் கையை நீட்டிப் பேசியதாக, அதனை உரிமை மீறல் குழுவுக்கு



அனுப்பி வைத்தார் சபாநாயகர். உரிமை மீறல் குழு பரிந்துன்ரயின்படி, தற்போது விஜயகாந்தை 10 நாட்கள் சஸ்பென்ட் செய்திருக்கிறார்கள்.


நான் ஒன்று கேட்கிறேன்... "முதலில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. க்கள் தானே விஜயகாந்தை அதுவும் பிரதான எதிர்க் கட்சித் தலைவரைப் பார்த்து கையை நீட்டி மிரட்டும் தொனியில் பேசினார்கள். அது உரிமைமீறல் இல்லையா? அதற்கு என்ன தண்டனை?" என்று நடந்தவைகளை விவரித்தபடியே சூடாக ஆவேசப்பட்டார் சந்திரகுமார்.

தொடர்ந்து நம்மிடம் பேசிய அவர், "எங்கள் தலைவர் சொல்கிற மாதிரி... கவர்னர் ஆட்சியைக் கொண்டு வாருங்கள். சங்கரன் கோவிலில் களம் இறங்குவோம். அப்போ தெரியும் யார் வெற்றி பெறுகிறார்கள் என்பது. அதற்கு அ.தி.மு.க. இற்கு திராணி இருக்கிறதா? தகுதியற்றவர்களோடு கூட்டணி வைத்ததற்காக வெட்கப்படுகிறேன்" என்றார் ஜெயலலிதா. அ.தி.மு.க.கூட்டணிக்காக எங்கள் தலைவர் ஒன்றும் தவம் இருக்கவில்லை. இன்றைக்கு இருக்கிற அமைச்சர்களின் மனச்சாட்சிக்குத் தெரியும்... கூட்டணிய்ய யார் விரும்பினார்கள் என்பது. இன்றைக்கு அமைச்சர்களாக இருக்கும் பலபேர் எங்கள் தலைவரைச்சந்தித்து காலில் விழாத குறையாக, "கருணாநிதியை வீழ்த்த நீங்ளும் நினைக்கிறீங்க ஜெயலலிதாவும் நினைக்கிறாங்க. அதனாலே நாம கூட்டணியாக இருந்ததாற்தான் அது நடக்கும்... நாம் பிரிந்து நின்னா, மீண்டும் கருணாநிதிதான் ஜெயிப்பாரு" என்று கெஞ்சனார்களே... அதெல்லாம் மறந்து போனதா? இதைத்தான் எங்கள் தலைவர் தன் பேட்டியில் கேட்டார்.

ஜெயலலிதாவின் பேட்டி எங்களுக்கு அதிர்ச்சியையோ, ஆச்சர்யத்தையோ கொடுக்கவில்லை. 1991 இல் ரஜீவ் காந்தியின் படுகொலை ஏற்படுத்திய அனுதாபத்தால் ஆட்சியைப் பிடித்தார் ஜெயலலிதா. "ரஜீவ்காந்தியின் தியாகத்தால் நான் ஜெயிக்கவில்லை. தனிப்பட்ட செல்வாக்கால் ஜெயித்தேன்" என்றார். இதனை ரஜீவ்காந்தியின் ஆன்மா மன்னித்திருக்குமா? அதே போல, ஒரு முறை பத்திரிகையாளர் கரன்



தாப்பருக்கு பேட்டியளித்த ஜெயலலிதா, "நான் ஒரு சுயம்பு. அரசியலில் நானாகவே வளர்ந்தேன்" என்றார். "அரசியலில் எம்.ஜி.ஆர். என்கிற மாமனிதரால்



எம்.எல்.ஏ. சந்திரகுமார்

கொண்டவரப்பட்ட ஜெயலலிதாவை எம்.ஜி.ஆர். ஆன்மா மன்னிக்குமா?" என்றார் சூடாக

**"பென்னாகரத்தில் என்னாச்சு?"**

நான் தே.மு.தி.க.வுடனான கூட்டணியை விரும்பவேயில்லை. கட்சித் தொண்டர்கள்வேண்டுமெனக் கேட் டுக் கொண்டதால்தான் ஏற்றுக்கொண்டேன் என ஜெயலலிதா சொல்வது நிஜமல்ல" என்கிறார்கள் அ.தி.மு.க. தலைவர்களே. சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக அ.தி.மு.க.வின் பொதுக்குழுக்கூட்டம் ஒன்று சென்னையில் நடந்தது. அதில் பேசிய ஜெயா, "வரும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வை வீழ்த்தும் கூட்டணியை அமைக்கும் பொறுப்பை என்னிடம் விட்டுவிடுங்கள் நான் வெற்றிக் கூட்டணியை அமைப்பேன்" என தொண்டர்களின் பலத்த கரகோஷத்திற்கிடையே அறிவித்தார். அப்பொழுது விஜயகாந்தின் மனைவி, மச்சானுடன் நடராஜனின் தம்பி எம்.ஆர்.கூட்டணி பேசிக் கொண் டிருந்தார். 71 எம்.எல்.ஏ. சீற், துணை முதல்வர் பதவி என எகிறிப் பேசிக் கொண்டிருந்த விஜயகாந்தை சமாதானப்படுத்த தனது நண்பரான பத்திரிகையாளரை ஜெயா அனுப்பி "விஜயகாந்தை அவரது பலத்தை உணர்ந்து சீற்கேட்கச் சொல்லுங்கள். 41 சீற்தான் தரமுடியும்" எனப்பேச வைத்தார் ஜெயா.

அத்துடன் சி.பி.ஐ. தா.பா., சி.பி.எம்., ஜி.ஆர். என அனைவரையும் பண்ருட்டியார், விஜயகாந் என அனைவரிடமும் ஒரு மாதகாலம் பேச்சுவார்த்தை நடத்தி சம்மதிக்க வைக்க முயற்சி எடுத்தார். இந்தக் கூட்டணி விவகாரத்தில் அரை மனதுடன் இருந்த விஜயகாந்தை பேசிப் பேசிப் பணியவைத்து அவர் ஷூ காலுடன் போயஸ் கார்டனுக்குள் வந்து நள்ளிரவு 11 மணிக்கு கையெழுத்தை காத்திருந்து பெற்றார் ஜெயா. என நினைவு கூருகிறார்கள்.

கூட்டணி வந்தபிறகு சீற் பிரச்சினையில் விஜயகாந் கட்சியினர் ஜெயலலிதாவின் கொடும்பாவியையே எரித்த போதும், அதைப் பொறுத்துக் கொண்டதோடு அவர் கேட்ட சீற்ரை 90 சதவிகிதம் கொடுத்தவர் ஜெயா என்கிறார்கள்.

"வெற்றி பெற்ற பிறகு ஜெயாவின் அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டது. தே.மு.தி.க. எம்.எல்.ஏ. க்களை பண ஆசை காட்டி கட்சியை உடைக்க தே.மு.தி.க. வின் பெரிய தலைவர் ஒருவர் மூலம் முயற்சி எடுக்கப்பட்டது. அதற்காக தே.மு.தி.க. எம்.எல்.ஏ.க்கள் சொல்லும் அனைத்துக் காரியங்களையும் செய்ய அமைச்சர்களுக்கு உத்தரவிடப்பட்டது. இதையறிந்த விஜயகாந்த் தனது எம்.எல்.ஏ.க்களை அழைத்துப்பேசி வழிக்குக் கொண்டு வந்தார். ஆனால், ஆச்சரியப்படும் விதமாக அதற்குப்பிறகும் விஜயகாந்தோடு நல்லபடியாகத்தான் நடந்து கொண்டார் ஜெயா. அரசுப் பேருந்து, பால்கட்டண உயர்வை உயர்த்த நினைத்தபோது ஒருமுறை விஜயகாந் கொடுத்த கடிதத்தால் அந்த முடிவு தள்ளிப் போனது உள்ளாட்சித் தேர்தலில் எனக்கு 40 சதவிகிதம் இடம்" என விஜயகாந் பேசிக் கொண்டேயிருந்தார். ஜெயா பேசவில்லை. இருவரும் தனித்துக் களம் கண்டனர். அதன்பிறகு மறுபடியும் பஸ் கட்டண உயர்வு வந்தது. விஜயகாந் மறுபடியும் கூடாது என கடிதம் கொடுத்தார். இதைச் சொல்ல இவர் யார் எனப் பதில் வந்தது. விஜயகாந் நொந்து போனார் என்கிறார்கள் தே.மு.தி.க. வட்டாரத்தினர்.

இந்தநிலையில் நடந்ததுதான் சட்டமன்ற மோதல். "இனி எந்தக் காலத்திலும் அ.தி.மு.க.வை ஆதிரிக்க மாட்டார்" என அடித்துச்சொல்கிறார் தே.மு.தி.க. மாநில நிர்வாகியான இளங்கோவன். "சபையில் நடந்த பிரச்சினையை அ.தி.மு.க. ஜனநாயக பூர்வமாக கையாளவில்லை. இது தவறு" என வெடிக்கிறார் தே.மு.தி.க. அவைத் தலைவர் பண்ருட்டியார். "இது ஜனநாயகப் படுகொலை" என்கிறார்கள் இடது சாரிக்கட்சியைச் சேர்ந்தவர்கள். சம்பவத்திற்குப்பிறகு, எம்.எல்.ஏ. க்களிடம் பேசிய விஜயகாந், "அந்த அம்மாவக்குத் தக்கபாடம் புகட்டுவோம்" என்றிருக்கிறார். "விஜயகாந் அ.தி.மு.காவை எதிர்ப்பதால், அ.தி.மு.க எதிர்ப்பு வோட்டுக்கள் சிதறும் அது எங்களுக்கு இலாபம்" என்கிறார்கள் அ.தி.மு.க.வினர்.

பெப்ரவரி 2ஆம் திகதியன்று அவை உரிமை மீறல் நடவடிக்கைக்காக பத்துநாள் சஸ்பென்ட் செய்யப்பட்டார் விஜயகாந். அவர் மீதான நடவடிக்கைகளைக் கண்டித்து ஸ்ராலின் தலைமையில் தி.மு.க.வினர் வெளியேற, இடதுசாரிகளும் வெளிநடப்பு செய்தது, புதிய அணிக்கான அஸ்திரம் என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள். பத்திரிகையாளர்களைச் சந்தித்த விஜகாந்தும் ஜெயலலிதாவைக் கடுமையாக விமர்சித்ததோடு, "புதிய கூட்டணி பற்றி அவசரப்பட வேண்டாம்" என்ற ரீதியில் சஸ்பென்ஸ் வைத்தார்.

"என்ன நடந்தாலும் இனி கப்டனின் அசைவுகள் அ.தி.மு.க.வை தோற்கடிக்கவும் தோலுரிக்கவும்தான் இருக்கும்" என சொல்கிறார்கள் தே.மு.தி.க. வினர்.

நன்றி: நக்கீரன்

# யுத்தம் முடிபுற்ற போதும் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன

## சுரேஸ் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் போது எமது மக்கள் மட்டுமல்ல எமது வளங்களும் சேர்த்தே அழிக்கப்பட்டுள்ளன என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

பசுமை அமைதி விருதும், நங்கூரம் சமூக நூல் அறிவியல் நூலின் வெளியீட்டு நிகழ்வும் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

யுத்தத்தில் இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். தற்போது எமது மக்களுக்கு தேவையான எமது வளங்கள் சூறையாடப்படுகின்றன.

யுத்தம் முடிபடைந்த பின்பும் இவ் வள அழிப்புக்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. முகமாலையில் பனை மரங்கள் வெட்டப்பட்டு தென்பகுதிக்கு இன்றும் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இவற்றுக்கெல்லாம் யாருடைய அனுமதியும் கேட்கப்படுவதில்லை. அவர்கள் நினைத்ததை செய்கிறார்கள். தட்டிக் கேட்பதற்கும் யாருமற்ற நிலையில் எமது வளங்கள் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன.

எமது வளங்கள் மட்டுமல்லாது வரலாற்று சின்னங்களும் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன.

கற்சிலைமடுவில் பண்டார வன்னியனின் சிலை உடைக்கப்பட்டு தொடர்ந்தும் இச்சிலை உடைப்புக்கள் நடைபெறுகின்றன.

சுற்று சூழலுக்காக எமது நாட்டிலும் ஒரு அமைச்சு உண்டு. இவ் அமைச்சு தமிழப் பிரதேசங்களில் உள்ள வளங்களை பாதுகாப்பதற்கான எவ்வித நடவடிக்கையையும் எடுப்பதில்லை.

சுனாமியின் போது ஏராளமான உயிர் குடித்த அழிவுகளை குறைத்த நாகர்கோவில் மண்பிட்டிகள் இன்று சில கட்சிகளின் தலையீட்டில் அகற்றப்பட்டுள்ளன.

சுற்றுச் சூழல் என்பது நாடு சம்பந்தமானது அல்ல. அது உலகம் தொடர்பானது. எனவே சுற்றுச்சூழலை பாதுகாப்பில் பாகுபாடு காட்டுவது அர்த்தமற்றதாகும்.

இன்று யாழ்ப்பாணத்தில் சுகாதாரமற்ற தனிமை பேணப்படுகின்றது. யாழில் இருந்து காக்கைதீவு பகுதிக்குச் சென்றால் பொலித்தீன்பைகளே அவ்விடத்தில் கண்களுக்கு காட்சியளிக்கின்றது.

யாழ்ப்பாணத்தை பொறுத்தவரையில் சூழல் பற்றியதான சந்திப்பு இன்று தான் ஆரம்பமாகி உள்ளன. இதனை முன்னெடுக்க ஆசிரியர், மாணவர்கள் பிரதேசமக்கள் என அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

எமது மண்ணை, பிரதேசத்தை, தாயகத்தை, சுற்றுச்சூழலை, கடல் வளத்தை, மக்களை அழிக்கப் பார்க்கின்றனர்.

எமது சுற்றாடலை நாமே பாதுகாக்க முடியும். அது எமது எதிர்காலம் என்பதை நாமே சிந்திக்க வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2-4)




# பந்தயத்திற்காக கண்ணாடி உடைத்தவரின் கையில் காயம்

பந்தயத்திற்காக கண்ணாடி ஒன்றினை உடைத்து சாதனை படைப்பதாக கூறி 6 பிள்ளைகளின் தந்தையொருவர் கையினால் கண்ணாடியை உடைத்ததில் கையில் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

இச்சம்பவம் தெல்லிப்பழையில் நேற்று முன்தினம் மதியம் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மதுபோதையில் நண்பர்களுடன் ஒரு கையினால் கண்ணாடியொன்றை உடைத்துக்காட்டினால் ஒரு தொகைப் பணம் என பந்தயம் கட்டியுள்ளனர்.

இதில் குறித்த குடும்பஸ்தர் குறித்த பந்தயத்தில் தான் வெற்றி பெறுவதாக கூறி கண்ணாடியினை உடைத்துள்ளார்.

இதில் கையில் ஏற்பட்ட படுகாயத்தினால் அதிக இரத்தப்போக்கு காரணமாக முதலில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-2-4)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதாலும், மின் விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டும் பின்வரும் பகுதிகளில் காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை மின்விநியோகம் தடைப்படும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று புதன்கிழமை, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை, எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, மூடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம்வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

நாளை வியாழக்கிழமை, 11ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய தினங்களில் சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி,மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கோண்டாவில் சிரிபி டிப்போ பிரதேசம், நீர்ப்பாசன வடிகாலமைப்பு திணைக்களப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமைஇணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி,கோண்டாவில், கோம்பயன்மணல் பிரதேசம், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல்,வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப்பிரதேசம், அராலிப்பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் அறிவித்துள்ளார். (அ-7)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கரவெட்டி)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் வித்தியாலய அதிபர் எஸ். சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் இரா.வரதீஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-24)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

யா/வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிக்நெல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். பிராந்திய மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையூாளர் எஸ்.பத்மநாதன், அவரது பாரியார் திருமதி கமலாவதி பத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-2)

* * * * * *

இமையாணன் அ.த.க. வித்தியாலயத்தின் இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் திருமதி நவமணி சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி சி.நற்குணலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி மனோகரி நற்குணலிங்கம் பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (அ-3-52)

# பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஐ.ஐ.எஸ் குழு கல்வி நிறுவனத்தின் 16 ஆவது நிறுவன தினமும், பட்டமளிப்பு விழாவும் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு சென்ஜோன்ஸ் கல்லூரி ஜூபிலி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்விற்கு கௌரவ விருந்தினர்களாக எடெக்ஷல் பிரதேச முகாமையாளர் திருமதி பிரேமிளா பவுல்ராஜ் கனிரியஸ், எடெக்ஷல் பிரதேச அபிவிருத்தி முகாமையாளர் சூர்யா விவிலி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7)

# வலி. கல்வி அலுவலகத்தில் அதிபர் பதவி வெற்றிடங்கள்

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட யாழ்.உடுவில் மல்வத்தை றோ.க.த.க வகை III பாடசாலை, யாழ்.கோட்டைக்காடு அ.த.க. வகை III பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கே அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளன என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.இப்பாடசாலைகளுக்கு அதிபர் சேவை தரம் 3 ஐச்சேர்ந்தவர்களிடமிருந்தும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1,2-I,2-IIஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ் அதிபர் பதவிகளுக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்க முடியும். இதற்கான விண்ணப்பப்படிவத்தை வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தெரிவித்துள்ளார். (அ-7)





வட இந்துமகளிர் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி தேவராணி நவரட்ணம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் இசை நிகழ்வினையும் விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி கல்வி வலய சைவசமய ஆசிரிய ஆலோசகர் எஸ். நவரட்ணம் வெற்றி பெற்ற வீரர்களுக்கு வெற்றிச் சான்றிதழ்களை வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ் செல்வதீபன்)

# அவுஸ்.குயின்ஸ்லான்ட் மாநிலத்தில் வெள்ளம்

## ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்வு

அவுஸ்திரேலியாவின் கிழக்கு குயின்ஸ்லான்ட் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக அப்பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சென்ஜோர் நகரப் பகுதியில் கடந்த இரண்டு வருடங்களின் பின்னர் ஏற்பட்டுள்ள பாரிய வெள்ள அனர்த்தம் இது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாலோன் ஆற்றின் நீர்மட்டம் நேற்று 1.48 மீற்றர் உயரத்துக்கு உயர்ந்துள்ளதாகவும் இன்று இதன் நீர்மட்டம் 14 தொடக்கம் 15 மீற்றர் வரை உயரும் என எதிர்ப் பார்க்கப்படுகின்றது.

மேலும் 2 ஆயிரத்து 200 பேர் தங்களது இருப்பிடத்தை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். இவர்களில் ஆயிரத்து 700 பேர் தங்களது சொந்த வாகனங்கள் மூலமாகவும் 500 பேர் பேருந்துகளிலும் சென்றனர்.

இப்பகுதியை விட்டு வெளியேறுமாறு அதிகாரிகள் கூறிய போதிலும் 400 குடும்பங்கள் இன்னமும் அங்கு தங்கியுள்ளனர். இவர்களை அழைத்து வருவதற்காக விமானங்கள் அங்கு சென்றுள்ளன. (அ-2)



மியன்மாரில் இடைத்தேர்தலில் போட்டியிடும் அந்நாட்டு முக்கிய எதிர்க்கட்சி தலைவர் ஆங் சாங் சூகி யோங்கோன் நகரில் தனது கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தியதைப் படத்தில் காணலாம்.

# ரோமில் கடும் பனிப்பொழிவு; 300 பேர் பலி



ஐரோப்பிய நாடுகளில் கடும் குளிரும் பனிப்பொழிவும் நிலவுவதால் இதுவரை 300 பேர் பலியாகியுள்ளனர். ரோம் நகரில் சுமார் 27 ஆண்டுகளுக்குப் பின்னர் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

இதுவரை இல்லாத அளவுக்கு பனிப்பொழிவு கடுமையாக உள்ளது. கடந்த வாரம் முழுவதும் ஆட்டிப்படைத்த பனிப்பொழிவு இந்த வாரமும் இருக்கும் என்று கூறப்படுகின்றது.

உக்ரைன், போலந்து, இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 297 பேர் பலியாகியிருந்தனர். இந்நிலையில் தற்போது பலி எண்ணிக்கை 300 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் ஆயிரத்து 800 பேர் வைத் திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேபோன்று போலந்திலும் குளிருக்கு 53 பேர் பலியாகியுள்ளனர்.

இது தவிர சேர்பியா மற்றும் ரோமானியாவிலும் நிலைமை மோசமாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தொழிற்சாலை கட்டடம் இடிந்ததில் 100பேர் பலி



(லாகூர்)

பாகிஸ்தானில் தொழிற்சாலை கட்டடம் இடிந்து விழுந்ததில் இடிபாடுகளுக்குள் குழந்தைகள், பெண்கள் உட்பட 100பேர் பலியாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

பாகிஸ்தானின் 2 ஆவது மிகப் பெரிய நகரமான லாகூருக்கு அருகே கால்நடைகளுக்கான ஊசி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று உள்ளது. இத் தொழிற்சாலையில் நேற்று முன்தினம் எதிர்பாராத விதமாக நடந்த விபத்தில் கட்டடம் இடிந்து தரைமட்டமானது.

இதையடுத்து அங்கு விரைந்து வந்த மீட்புப் படையினர் தீவிர மீட்புப் பணியில் ஈடுபட்டனர். அப்போது இடிபாடுகளுக்குள் சிக்கி பலியான 4 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் காயமடைந்த நிலையில் 15பேரையும் மீட்டதாகக் கூறப்படுகிறது. இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணி தீவிரமாக நடக்கிறது. விபத்தின் போது 100 இற்கும் மேற்பட்டோர் வேலை செய்து கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. எனவே இடிபாடுகளுக்குள் சிக்கி அவர்கள் பலியாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. (அ-2)

# மூங்கிலால் செல்போன் தயாரித்து சாதனை

மூங்கில் மூலம் ஒரு மாணவர் செல் போன் தயாரித்துள்ளார். இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள கெபரில் புஷ் பகுதியை சேர்ந்தவர் கிரான்ஸ்காட்வுட் ஹவுஸ் (வயது-23). இவர் மிடில் செக்ஸ் பல்கலைக்கழக மாணவர். இவர் செல்போன்கள் தயாரிக்கும் படிப்பு படித்து வந்தார்.

செல்போன்கள் தயாரிப்பில் அனைவரது ஒட்டுமொத்த கவனத்தையும் கவர விரும்பினார். அதற்காக மூங்கிலினால் ஆன செல்போனை தயாரித்து சாதனை படைத்துள்ளார். அதற்காக அவர் 4 வருடங்கள் வளர்ந்த இளம் மூங்கில் மரங்களை பயன்படுத்தினார். ஏனெனில் அது மிகவும் வளவளப்பு தன்மையுடன் உடையாத நிலையில் இருக்கும்.

இதில் மற்ற செல்போன் போன்று கமரா உள்ளிட்ட அனைத்து தொழில் நுட்பங்களும் இடம் பெற்றுள்ளன. இவற்றை இந்த ஆண்டு இறுதியில் மக்கள் பயன்பாட்டுக்காக அறிமுகப்படுத்தப்படுகின்றன,

உலகிலேயே முதன் முறையாக மூங்கில் மூலம் தயாரித்து சாதனை படைத்த வுட் ஹவுஸுக்கு பாராட்டுக்கள் குவிகின்றன. இது குறித்து அவர் கூறும் போது,

செல்போனை நூதன முறையில் தயாரிக்க விரும்பினேன். அதற்காகத் தான் மூங்கிலை பயன்படுத்தினேன் என்றார். (அ-2)

# ஈரான் வங்கி, அரசு சொத்துக்களை முடக்கியது அமெரிக்கா

(வோஷிங்டன்)

அமெரிக்காவிலிருந்து ஈரான் வங்கிகளுடனான பண பரிமாற்றம் மற்றும் ஈரான் அரசுக்கு சொந்தமான சொத்துக்களை அமெரிக்கா முடக்கியுள்ளது.


ஈரான் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டு ஐக்கிய நாடுகள் சபை அதன் மீது தடை விதித்துள்ளது.

மேலும் ஈரானுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் அமெரிக்கா இந்த புதிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (அ-2)

## உலக தரிசனம்

# பிலிப்பைன்ஸில் 6.8 ரிக்டர் அளவில் பாரிய நிலநடுக்கம்

## மக்கள் தப்பியோட்டம்



(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் 3ஆவது பெரிய தீவாக கருதப்படும் நிகரோஸ் தீவில் நேற்று முன்தினம் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 6.8 ஆகப் பதிவானது. கடலுக்கு அடியில் 46 கி.மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் தாக்கியது. இருப்பினும் சேதம் கடுமையாக இருந்தது.

ஏராளமான கட்டங்கள் இடிந்து விழுந்தன. பாலங்கள், வீதிகள் சேதமடைந்தன. வீடுகள் குலுங்கியதால் மக்கள் பீதியடைந்து வெளியே ஓடினர். யன்னல் கதவுகள் நொறுங்கி விழுந்தன. பல இடங்களில் மின் விநியோகம் சீர்குலைந்தது. வணிக நிறுவனங்களில் பொருட்கள் வாங்கிக் கொண்டிருந்த மக்கள் பீதியில் வெளியேறினர். உடனே அந்த நிறுவனங்கள் மூடப்பட்டன.

ஒரே நேரத்தில் மக்கள் வீதியில் குவிந்ததால் போக்குவரத்து ஸ்தம்பித்தது. நேற்று இரவு பலி எண்ணிக்கை 44 ஆக உயர்ந்தது. இத்தகவலை ஒரு இராணுவ அதிகாரி தெரிவித்தார். பலியானவர்களில் ஆரம்பப் பள்ளி மாணவிகள் 2 பேரும் அடங்குவர். நிலநடுக்கத்தால் அவர்களின் பாடசாலைக் கட்டடம் இடிந்து அவர்கள் மீது விழுந்ததால் அவர்கள் பலியானார்கள்.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து இரண்டாம் நிலை சுனாமி எச்சரிக்கை விடப்பட்டது. உடனே அப்பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர். இருப்பினும் எதிர்பார்க்கப்பட்ட நேரம் கடந்த பின்னரும் சுனாமி தாக்கவில்லை . (அ-2)

# தாருஸ்மான் அறிக்கையின் 90 வீதமான பகுதியை நல்லிணக்க ஆணைக்குழு ஏற்றுக்கொண்டுள்ளது

## லக்ஸ்மன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தாருஸ்மான் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 90 வீதமான விடயங்களை நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கைஒப்புக் கொண்டுள்ளது.

வெளிநாடுகளுடன் இராஜதந்திர உறவுகளைப் போணுவதில் இலங்கை அரசாங்கம் பாரிய பின்னடைவை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

யுத்தம் நிறைவடைந்தது முதல் அரசாங்கம் இராஜதந்திர உறவுகளைப் பேணுவதில் நாட்டம் காட்டவில்லை என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கையை அரசாங்கம் சமர்ப்பிக்க வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

தாருஸ்மான் அறிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளதாகவும் இதனால் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கையை மனித உரிமைப்பேரவை அமர்வுகளில் சமர்ப்பிப்பது அவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

தாருஸ்மான் அறிக்கை வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்தில், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் மூலம் உள்நாட்டு ரீதியான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும், அதுவரை பொறுத்துக்கொள்ளுமாறும் இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்திடம் கோரியிருந்தது என லக்ஸ்மன் கிரியல்ல சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்நாட்டு விசாரணைகளுக்காக கால அவகாசம் கோரிய அரசாங்கம், தற்போது ஆணைக்குழுவின் அறிக்கையை சமர்ப்பிக்க மறுப்பது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தாருஸ்மான் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 90 வீதமான விடயங்களை உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை ஒப்புக்கொண்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

சொந்த விசாரணைப் பொறிமுறைக்குள்ளேயே இந்த அரசாங்கம் சிக்கிக் கொண்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளினால் ஐக்கிய நாடுகள் அமைபையோ அல்லது சர்வதேச சமூகத்தையோ ஏமாற்ற முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு ஆண்டுக்கு முன்னதாக மனித உரிமை செயற்றிட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும் இதுவரையில் அறிக்கை பாராளுமன்றத்தால் சமர்ப்பிக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமைகளைப் பேண வேண்டுமாயின் மனித உரிமை ஆணைக்குழு சுயாதீனமாக செயற்பட அனுமதிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசியல் அழுத்தங்களை பிரயோகிப்பதன் மூலம் மனித உரிமை விவகாரங்களை பேண முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

17ஆம் திருத்தச் சட்ட மூலம் வலுவிழந்துள்ள நிலையில் ஆணைக்குழுக்களினால் சுயாதீனமாக இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# பூநகரி பிரதேச செயலகத்திற்கு புதிய கட்டடம் அமைப்பு

(கிளிநொச்சி)

கடந்த வன்னி யுத்தத்தில் பெரிதும் பாதிப்படைந்து காணப்படும் பூநகரி பிரதேச செயலகத்திற்கு 45 மில்லியன் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, பூநகரி அரசினர் கிராமிய பிரதேச வைத்தியசாலைக்கான கட்டட நிர்மாணப்பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது பூநகரி பிரதேச வைத்தியசாலை பிறிதொரு இடத்தில் தற்காலிகமாக செயற்பட்டு வருகிறது. இதுவரை காலமும் இவ் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவர் இல்லாத நிலை காணப்பட்டது. இதனை நிவர்த்திக்கும் வகையில் நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமிக்க கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பூநகரி நகரம் வாடியடியில் மீளவும் நிர்மாணிக்கப்பட்டு வரும் நிலையில் பிரதேச செயலகம், பிரதேச சபை, பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், பொதுச்சந்தை, வர்த்தக நிலையங்கள் முதலானவை இங்கு செயற்படுகின்றன.

இங்குள்ள கட்டடங்கள் யாவும் கடந்த யுத்தத்தின் போது முற்றாக அழிந்து போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)

# கட்டடத் திறப்புவிழா

(அல்லாறை)

அல்லாரை ஐங்கரன் சனசமூக நிலையம் புதிய கட்டடத் திறப்பு விழா எதிர்வரும்12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அல்லாரை ஐங்கரன் சனசமூக நிலைய தலைவர் க.தம்பு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ. பிரணவநாதன், சிறப்பு விருந்தினர்களாக கொடிகாமம் பொலிஸ் நிலைய அதிகாரி வை.எம். ஜெகத் பண்டார, சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் சி.துரைராசா, கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை ஓய்வு பெற்ற செயலாளர் வே.சிவராசலிங்கம், சாவகச்சேரி பிரதேச சபை சன சமூக நிலைய அதிகாரி திருமதி. செல்வராணி ஜெகதீசன், அல்லாரைக்கிராம உத்தியோகத்தர் இ.இராஜசுதாகர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அமரர் கிருஸ்ணபிள்ளை வீரசிங்கம்

(அரச ஒப்பந்தகாரர்)

வாதரவத்தை,

புத்தூர்.

மலர்வு 11 06 1938

உதிர்வு 10 01 2012

*எம் குடும்பத்தின் குலவிளக்கே!*
*எமை விட்டு எங்கு சென்றீர்*
*உமை நினைத்து ஏங்குகின்றோம்*
*மீண்டும் என்று உமைக் காண்போம்*
*விழிகளில் அருவி கொட்ட*
*வழியின்றி தவிக்கின்றோம்...*
*காலங்கள் மறைந்தாலும்*
*மறையாது உம் நினைவு ...*

**உங்கள் ஆத்மா சாந்தியடைய நரசிங்கரை பிரார்த்திக்கின்றோம்.**

கடந்த 10.01.2012 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 09.02.2012 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். தயது செய்து இதனையே தனிப்பட்ட அழைப்பாகக் கருதுமாறு தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(7457) குடும்பத்தினர்.

# வெள்ளைக்கொடி வழக்கு இன்று ஆரம்பம்;

# நீதிமன்றத்திற்கு அருகில் வெடிகுண்டுகள் மீட்பு

## பொதுமக்கள் அச்சத்தின் மத்தியில்

(கொழும்பு)

வெள்ளைக்கொடி வழக்கின் தீர்ப்புநாளைய தினம் விசாரணைக்கு வருகிறது. கொழும்பு நீதிமன்றத்தை அண்மித்த பகுதியில் வெடிகுண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

கொழும்பின் அதிஉயர் பாதுகாப்பு வலயமான குறித்த பகுதியில் வெடிகுண்டுகள் மீட்கப்பட்டுள்ளமையானது பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பு நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள டி.ஐ.ஜி காரியாலயத்திற்கு அருகில் இருந்து இரண்டு குண்டுகளும் வாழைத்தோட்டப்பகுதியில் இருந்து 8 கைக்குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் நிறைவையொட் டி இன்றைய தினம் நீதிமன்றத்துக்கு முன்னால் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்படவிருந்த நிலையில் நேற்று வெடிகுண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

இன்றைய ஆர்ப்பாட்டத்தை தடுத்து நிறுத்தும் நோக்கிலேயே வெடிகுண்டுகள் குறித்த பகுதியில் இலங்கை அரசாங்கத்தினால் வைக்கப்பட்டிருக்கலாம் என மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் தற்போது குறித்த பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளதாகவும் விசேட அதிரடிப்படையினரும் குண்டு செயலிழக்கும்பிரிவினரும் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் வெடிகுண்டுகள் இருக்கின்றனவா? என பொலிஸார் தேடுதல் நடத்திவருவதுடன் பலரிடமும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வெள்ளைக்கொடி வழக்கின் தீர்ப்பு இன்றைய தினம் விசாரணைக்கு வருகின்றது.

வெள்ளைக்கொடி வழக்கின் தீர்ப்பு எதிராக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவினால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேன்முறையீட்டு மனு இன்றைய தினம் நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க தலைமையில் 4 பேர் கொண்ட நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

நிமால் காமினி அமரதுங்க, ஏ.பி ரத்நாயக்க, பியசாத் டெப், சத்திய ஹெட்டிகே ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில் இந்த விசாரணை நடைபெறவுள்ளது.

சரத் பொன்சேகாவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற வெள்ளைக்கொடி வழக்கை விசாரித்த மூவர் அடங்கிய நீதிபதிகளில் இருவர் சரத் பொன்சேகா மீது சுமத்தப்பட்ட மூன்று குற்றச்சாட்டுக்களில் இரண்டு குற்றச்சாட்டுக்களுக்கு அவர் குற்றவாளி என தீர்ப்பளித்ததுடன் ஒரு நீதிபதி மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் அவர் குற்றவாளி அல்ல என தீர்ப்பளித்தார்.

இந்த நிலையில் இரண்டு நீதிபதிகளின் தீர்ப்புக்கு எதிராகவே சரத் பொன்சேகா இந்த மேன்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். (அ-2)

## சமூக, விஞ்ஞான போட்டியில் கறுக்காய்தீவு ம.வி முதலிடம்

வடமாகாண சமூக, விஞ்ஞான போட்டி அண்மையில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இப்போட்டியில் பூநகரி கறுக்காய் தீவு மகா வித்தியாலய தரம் 13 இல் கல்வி கற்கும் மாணவி சுப்பிரமணியம் பிரதீபா முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார் என பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

இவர் தேசிய மட்டப் போட்டியிலும் பங்குபற்றவுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார். (அ-7-84)

# போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவ மாணவ குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்

## ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் தெரிவிப்பு

பாடசாலை மட்டங்களில் மாணவர்கள் ஊடாக குழுக்கள் சிலவற்றினை ஏற்படுத்தி போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவ வேண்டும் என வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன் தெரிவித்தார்.

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் தேவராசா இல்லம் திறப்பு விழா நேற்று காலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் உரையாற்றுகையில்,

எமது சமூகத்தின் கல்வி நிலையை உயர்த்தும் அதேவேளை போரின் போது பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நிலையிலும் முன்னேற்றம் ஏற்பட வழிசெய்ய வேண்டும்.

இதற்கு பாடசாலை மாணவர்கள் ஊடாக உதவிகளை வழங்க முடியும். இவ்வாறானதொரு முயற்சியை யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி உயர்தர மாணவர்கள் ஆரம்பித்து அதனை செயற்படுத்தியும் வருகின்றனர்.

இம்முயற்சியானது அனைத்துப்பாடசாலைகளிலும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

புலம்பெயர்ந்தவர்களினாலும் சமூகத்தினாலும் வழங்கப்படும் நன்கொடைகளினை பெற்று அதனை சிறந்த முறையில் பயன்படுத்தி பாடசாலைகளின் கல்வியினையும் விளையாட்டுக் கழகங்களையும் மேம்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவர்களுக்கு தேவையான வளங்கள் எவ்வாறு கிடைக்கப் பெறுகின்றன அல்லது வழங்கப்படுகின்றன என்பதனை அதிபர், ஆசிரியர்கள் அறிந்து கொள்ளல் அவசியமானதாகும். இன்று கல்வியிலும் விளையாட்டிலும் மாகாணப் பாடசாலைகளிலும் சிறந்து விளங்கி முன்னுதாரணமாக யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி விளங்குகின்றது.

மாணவர் தொகை குறைவான சிறிய பாடசாலைகளின் கல்வியினையும் மேம்படுத்துவதற்கு பெரிய பாடசாலைகள், கல்லூரிகள் இவ்வாறான சிறிய பாடசாலைகளை தத்தெடுத்துக் கொள்ளல் வேண்டும்.


மேலும் இன்று மாணவர்களிடையே ஒரு பழக்கம் பரவி வருகின்றது. மேடையிலேயே பாராட்டப்படுபவர்களுக்கு கைதட்டுவதில்லை. இதற்கு தொலைக்காட்சி மோகம்தான் காரணமாகும். இது பாராட்டும் மனப்பான்மையை சிதைவடையச் செய்து விடுகின்றது.

எந்தவொரு முயற்சிக்கும் வரவேற்பு, பாராட்டு வழங்கப்படல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

## விசாரணைகள் ஒத்திவைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மத்தியஸ்தர் சபையினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த பிணக்கு விசாரணைகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என சாவகச்சேரி மத்தியஸ்தர் சபைத் தலைவர் பநடராஜா தெரிவித்துள்ளார். (அ-3-29)



பத்திரிகைகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்பாக வெளிவந்த கேலிச்சித்திரங்களை தொகுத்து **காரமானவரா மஹிந்த** என்ற புத்தகத்தினை ஊடக அமைச்சின் செயலாளர் கனேகல தயாரித்துள்ளார். இப்புத்தகத்தினை ஜனாதிபதியிடம் கையளிப்பதையும் தேசத்துக்கு மகுடம் கண்காட்சியில் ஊடக அமைச்சின் காட்சிக்கூடத்தில் வைக்கப்பட்டுள்ள ஜனாதிபதியின் கேலிச்சித்திரங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ரசித்து பார்ப்பதையும் படத்தில் காணலாம்.

# கிளி.மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவக்குழுக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை, பூநகரி பிரதேச செயலர் பிரிவுகளில் அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் அண்மையில் உருவாக்கப்பட்டுள்ளன.

மாவட்டச்செயலகத்திலுள்ள அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் சுகுணதாஸ் பிரதேச செயலர்களுடன் இணைந்து சமூகசேவை அதிகாரிகளையும் பிரதேசங்களுடன் தொடர்புடைய அதிகாரிகளையும் உள்ளடக்கியதாக இக் குழுக்களை அமைத்துள்ளார்.

மாவட்ட அரசாங்க அதிபர் இவ் அனர்த்த முகாமைத்துவ குழுக்களின் நடவடிக்கைகளுக்கான உதவி ஒத்தாசைகளை வழங்கி வருகின்றார்.

பிரதேச மட்டத்தில் அனர்த்தம் ஏற்படும் போது இக்குழுவானது துரிதமாக செயற்பட்டு அவற்றுக்கான தீர்வுகளை வழங்க முன்வரும்.அதுபோல அனர்த்தம் ஏற்படக்கூடிய பகுதிகளை இனங்கண்டு பாதிப்பு ஏற்படுத்தாதவாறு முன்னேற்பாட்டு திட்டங்களையும் தயாரிக்கவுள்ளது.

நாடெங்கும் இதுபோன்ற அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது: (அ-2)

# இடைநிலை வகுப்புக்களை ஆரம்பிக்க 135 பாடசாலைகளுக்கு அனுமதி

கிழக்கு மாகாண கிராமப்புற மாணவர்களுக்கு இடைநிலைக்கல்வியை வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் ஐந்து வருடங்களுக்குள் 135 பாடசாலைகளில் இடைநிலை வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கான அனுமதியை கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு வழங்கியுள்ளதாக மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

கிழக்கில் யுத்த சூழ்நிலை நீங்கி அமைதியேற்பட்டபின் கிராமப்புற மாணவர்களின் இடைநிலைக்கல்வியை மேம்படுத்த வேண்டிய அவசியத்தேவை உணரப்பட்டதாலே இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தரம் 6 முதல் 9 வரையான வகுப்புக்கள் 33 பாடசாலைகளிலும் தரம் 9 தொடக்கம் தரம் 11 வரையிலான வகுப்புக்கள் 51 பாடசாலைகளிலும் க.பொ.த உயர்தரவகுப்புக்கள் 51 பாடசாலைகளிலும் புதிதாக ஆரம்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

நான் அடிமையாக இருக்க மாட்டேன். ஆகவே நான் எஜமானாகவும் இருக்கமாட்டேன். இதுதான் ஜனநாயகத்தின் தத்துவம். – ஆபிரகாம் லிங்கன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சுவாமி! நான் இறக்கி விட்டேன் நீங்களோ சுமந்து வருகிறீர்கள்

இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிக் தமிழ் மக்கள் சிந்தித்த போதெல்லாம் ‘பிரிவினை வாதம்’ என்பதன் ஊடாக தமிழ் மக்களின் சிந்தனை நசுக்கப்பட்டது.

அகிம்சைப் போராட்டம் முதல் ஆயுதப் போராட்டம் வரை இதே நடை முறையை இந்நாட்டை ஆட்சி செய்த அத்தனை பேரின வாத ஆட்சியாளர்களும் தப்பாமல் பின்பற்றினர்.

தமிழ் மக்கள் தங்கள் விடுதலைக்காக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த போது ‘பயங்கரவாதம்’ என்பதன் ஊடாக அந்தப் போராட்டத்தை அரசு ஒரு மாதிரியாக நசிக்கிக் கொண்டது.

விடுதலைப் புலிகள் அமைப்பை போரில் வென்றதன் ஊடாக இலங்கை அரசு பயங்கரவாதம் ஒழிந்தது என்று கூறுவதுடன் மட்டும் நின்றுவிடவில்லை.

மாறாக விடுதலைப்புலிகளை தோற்கடித்த போர் இனப்பிரச்சினை இல்லை என்ற முடிபையும் நிரூபித்ததாக அரசு நினைத்துக்கொண்டது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போருக்கு முன்னர் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட பின்னரே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று முழங்கிய அரசு,

உலக நாடுகளின் உதவியுடன் போர் வெற்றியைப் பெற்றுக்கொண்டதும் இனப்பிரச்சினை பற்றி எதுவும் பேசாது ஒரே நாடு, ஒரே தேசம் என்றவாறு மொழியத்தலைப்பட்டது.

எனினும் இனப்பிரச்சினை உண்டு என்பதை ஏற்றுக்கொண்டுள்ள உலக நாடுகள், இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க விரும்பியோ விரும்பாமலோ தமிழ் அரசியல் தலைமைகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய கட்டாயத்திற்குட்பட்டது.

இனப்பிரச்சினை இல்லை என்று நினைக்கக் கூடிய ஓர் அரசிடம் தீர்வு ஏதேனும் இருக்கும் என்று நினைப்பது மகாதவறு.

இருந்தும்ஏதோஒருதீர்வைவைத்திருப்பதுபோன்ற நடிப்பு. அந்த நடிப்பை வெறும் நடிப்பென்று உணராத வகையில் கூடிய கவனம் செலுத்தப் படுகின்றது.

அதற்காக பேச்சு வார்த்தை, தெரிவுக்குழு, சர்வ கட்சி மாநாடு என்ற அரங்குகள் காட்டப்படு கின்றன.

இல்லாததை அரங்கேற்றுவதற்கு மேடைகள் தேவையில்லை. இருப்பதை அரங்கேற்றுவதற்கு ஒரு மேடை போதுமானது.

ஆக, இனப்பிரச்சினையே இல்லை என்று கூறும் அரசிடம் நாம் இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி பேசுகின்றோம்.

பரவாயில்லை, அரசியல் என்ற சாக்கடையில் இதெல்லாம் சகஜம் என்று பேசாமல் விட்டு விடலாம் என்றால்,

இந்த நாட்டின் ஜனாதிபதி இப்போதும் பிரிவினைவாதம் பற்றி பேசுவது தான் தாளா வேதனை.

‘.... சுவாமி அந்தப்பெண்ணை நான் ஆற்றங் கரையிலேயே விட்டு விட்டு வந்து விட்டேன். ஆனால் நீங்களோ! அந்தப் பெண்ணை உங்கள் மனதில் சுமந்து வருகிறீர்கள்’.

இவ்வாறு குருவிடம் கூறிய சிஷ்யனின் நிலையில் தான் தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

ஆம்! முள்ளிவாய்க்காலில் நடந்த இறுதிப் போரோடு எங்களுக்கான தேசத்தின் எல்லைக் கோடுகளை நாம் பேசுவதேயில்லை. இப்போது நாம் கேட்பதெல்லாம் எங்கள் தாயகத்தில் எங்களுக்கான உரிமை மட்டுமே. ஆனால் நீங்களோ இன்னமும் பிரிவினை பற்றியே சிந்திக்கின்றீர்கள். என்ன செய்ய முடியும்?

# வடமாகாண வைத்தியசாலைகளின் அபிவிருத்திக்கு ரூ.3600 மில்லியன் ஒதுக்கீடு

## வடமாகாண சுகாதார அமைச்சின் செயலர் தெரிவிப்பு

வடமாகாணத்திலுள்ள வைத்திய சாலைகளின் அபிவிருத்திக்கு இது வரை 3 ஆயிரத்து 600 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர். ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அமைக்கப்பட்ட வைத்தியர் விடுதி மற்றும் விடுதிக் கட்டிடத் தொகுதி என்பவற்றின் திறப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வடமாகாணமானது கடந்த 3 ஆண்டுகளில் பாரிய அபிவிருத்தியைக் கண்டுள்ளது.

குறிப்பாக சுகாதாரத் துறையில் பாரிய அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைத்தியர் விடுதி மற்றும் விடுதிக் கட்டிடத் தொகுதி என்பன சுமார் 120 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இந்த வைத்தியசாலைக்கு நவீன வைத்திய உபகரணக் கொள்வனவுக்கும் பல மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் ஒரு போதனா வைத்தியசாலை, நான்கு மாவட்ட பொது வைத்தியசாலைகள், பத்து ஆதார வைத்தியசாலைகள், 42 பிரதேச வைத்திய சாலைகள்,38 ஆரம்ப சுகாதார பராமரிப்பு வைத்திய நிலையங்கள் என்பன மக்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்றி வருகின்றன.

அரசாங்கத்தினால் வட மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளின் அபிவிருத்திக்கு கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 3 ஆயிரத்து 600 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் யாழ் போதனா வைத்தியசாலைக்கே அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

# ஜனவரி மாதத்தில் மட்டும் யாழில் 86 திருட்டுக்கள்

## யாழ் பொலிஸ் தலைமை அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் 86 திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக யாழ் பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித் துள்ளார்.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ் குடாநாட்டில் அதிகரித்துள்ள திருட்டுச் சம்பவங்கள் காரணமாக மக்கள் தினமும் அச்சத்துடன் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வீடுகளிலேயே அதிகமான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஆயுத முனையில் அச்சுறுத்தி திருட்டு இடம் பெற்றுள்ளமை தெரியவந்துள்ள தாகவும் யாழ் பொலிஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரி குறிப்பிட்டுள்ளார். (ந-8,11)

# மெனிக் பாமிலிருந்த 207 குடும்பங்கள் முல்லைத்தீவில் மீள்குடியேற்றம்

(முல்லைத்தீவு)

வவுனியா மெனிக் பாம் முகாமிலிருந்த 207 குடும்பங்கள், முல்லைத் தீவு புதுக்குடியிருப்பு கோம்பாவில் பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை மீள்குடியேற்றப்பட்டுள்ளன.

இம் மீள்குடியேற்ற நிகழ்வில் மீள் குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன், மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் என். வேதநாயகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள், நீர்ப்பம்பி, தென்னங் கன்று மற்றும் விவசாய உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இம்மக்கள் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் அப்பகுதியில் இராணுவ முகாம் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதால் அப்பிரதேசத்தை சேர்ந்த மக்கள் கோம்பாவில் பகுதியில் தற்காலிகமாக மீள்குடியேற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-1)

# போதைப்பொருளுடன் யாத்திரை! அட்டனில் வைத்து அறுவர் கைது

கஞ்சா போதைப்பொருளுடன் சிவனொளி பாதமலைக்கு யாத்திரை மேற்கொள்ளவிருந்த ஆறு பேரை அட்டன் ரயில் நிலையத்துக்கு அருகில் வைத்து அட்டன் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

பாணந்துறை, நாத்தாண்டிய, தெஹிவளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இளைஞர்கள் அட்டன் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ந-11)

# கொழும்புக்கும் மதுரைக்கும் இடையிலான விமான சேவைகளை ஆரம்பிக்க கோரிக்கை

கொழும்புக்கும் மதுரைக்கும் இடையிலான நேரடி சர்வதேச விமான சேவைகளை ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழக வணிக சம்மேளனத்தின் பிரதிநிதிகள், இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகரிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இரண்டு நகரங்களுக்கும் இடையில் நேரடிச் சேவைகள் அல்லது அதுவரையான காலப்பகுதியில் மாற்றுச் சேவையொன்றை ஒழுங்கு படுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள் ளது.

விரைவில் இந்தச் சேவைகளை ஒழுங்கு படுத்துமாறு வலியுறுத்தி, வணிக சம்மேளனம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தியாவின் தென்பகுதியில் இருந்து வாராந்தம் சுமார் 1200 பயணிகள் இலங்கைக்கு பயணிப்பதாக தமிழக வணிக சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# ஜேர்மன் சுற்றுலா பயணி மீது பாலியல் துஷ்பிரயோகம்

மாத்தறையில் மற்றுமொரு வெளிநாட்டு பெண் சுற்றுலாப் பயணி மீது நேற்று முன்தினம் அதி காலை 3 மணியளவில் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாத்தறை திக்வெல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பெண் சுற்றுலாப் பயணி ஒருவரே சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ளார்.

ஹோட்டல் அறையில் வைத்து இனந்தெரியாத நபர் ஒருவர் தன்னை பாலியல் ரீதியாக துன்புறுத்தினார் என குறித்த ஜேர்மன் பெண் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (ந-1)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## ஆன்மீக பலமே நாட்டின் பலம்



குழந்தை தன் தேவைக்கு தன் தாயை நம்பியிருக்கிறது. அதுபோல வளர்ந்த பின்னும் மனிதன் தன் தேவைகள் அனைத்திற்கும் உலக நாயகியான ஜகன் மாதாவையே நம்பி வாழ்கிறான்.

அனைத்து சக்தியும் கொண்ட அம்பாள் கருணை வடிவத்துடன் எங்கும் நிறைந்திருக்கிறாள். உலகின் இயக்கத்திற்கு ஆதாரமாக திகழ்கிறாள்.

இந்தியாவில் பெண்களுக்கு தரப்படும் மதிப்பு உயர்வானது. தெய்வத்தை அன்னையாக கருதி வழிபாடு செய்தால், ஆன்மீக வாழ்வில் அனைத்து நன்மைகளும் உண்டாகும்.

குழந்தைகள் தாயிடமே அதிக பாசத்தை காட்டுகின்றனர். இதனால் தான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்று தாய்க்கு முதலிடம் தரப்பட்டுள்ளது.

ஆன்மீக பலத்தால் மட்டுமே நாடு எழுச்சி அடையப்போகின்றது. கடவுளிடம் கொண்ட நம்பிக்கையால் இந்திய மக்கள் பலம் பெற்றிருக்கிறார்கள்.

மனிதன் நல்ல, தீய எண்ணங்களில் உரிமையாளனாக இருக்கிறான். அவனுக்கு தேவையான அனைத்து வலிமையும் உதவியும் அவனுக்குள்ளேயே இருக்கிறது.

# சோனியா காந்தியின் மருமகன் ராபர்ட் வதேரா அரசியலில்!

## ராகுலுக்கு உதவுவாராம்



(புதுடில்லி)

காங்கிரஸ் தலைவர் சோனியாவின் மருமகன் ராபர்ட் வதேரா அரசியலில் குதித்துள்ளார். காங்கிரஸைப் பலப்படுத்த ராகுலுக்கு உதவத் தயார் என்றும் அவர் அறிவித்துள்ளார். உத்தர பிரதேச மாநிலத்தில் இந்த மாதமும் அடுத்த மாதமும் ஏழு கட்டமாக சட்ட சபை தேர்தல் நடக்கிறது. இதில் முதற்கட்ட மாக 55 தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு இடம் பெறும். இதற்கான தேர்தல் பிரசாரம் நேற்று முன்தினம் மாலையுடன் முடிவடைந்தது. அதே நேரத்தில் ஆறு கட்டமாக தேர்தல் நடக்கவுள்ள ஏனைய தொகுதிகளில் மாயாவதி, முலாயம்சிங், ராகுல் மற்றும் பா.ஜ. மூத்த தலைவர்கள் தீவிர தேர்தல் பிரசாரம் செய்து வருகின்றனர்.

அமேதி தொகுதியில் சோனியாவின் மகளான பிரியங்காவும் கடந்த சில நாட்களாக தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். இந்நிலையில் காங்கிரஸ் தலைவர் சோனியாவின் மருமகனும், பிரியங்காவின் கணவருமான ராபர்ட் வதேராவும் தற்போது அரசியலில் குதித்துள்ளார். தான் தீவிர அரசியலில் சேர ஆர்வமாக இருப்பதாகவும் காங்கிரஸ் கட்சியை பலப்படுத்த ராகுலுக்கு உதவப்போவதாகவும் கூறியுள்ளார்.

நிருபர்களிடம் ராபர்ட் வதேரா கூறியதாவது, போட்டியிடுவேன் எனக்கு அரசியலில் சேர ஆர்வம் உள்ளது. ராகுல் மற்றும் பிரியங்காவிற்கு எந்த உதவியும் தேவை இல்லை என்றாலும் அவர்களின் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் ராகுல் தெரிவித்த கருத்துக்களை இந்த பகுதியில் உள்ள மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்காக வந்துள்ளேன். ராகுலின் செய்தியை மூலை முடுக்கிற்கு எல்லாம் கொண்டு செல்வதன் மூலம் மாற்றத்தை கொண்டு வர முடியும். பிரதமர் பதவி தொடர்பாக ராகுலை மையப்படுத்தி கூறும் விடயங்கள் பற்றி நான் எந்த கருத்தும் தெரிவிக்க விரும்பவில்லை. பிரதமராவது தொடர்பான கருத்துக்களுக்கு ராகுல் தான் பதிலளிக்க வேண்டும் என்றார்.

பிரதமர் பதவிக்கு நான் ஆசைப்படவில்லை. அது என் விருப்பமும் இல்லை. இந்தியாவில் உள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் பிரதமராக வேண்டும் என்ற ஆசை இருக்கும். ஆனால், எனக்கு உ.பி. மாநிலத்தின் மீது தான் விருப்பம் உள்ளது. இந்த நாட்டில் உள்ள குறிப்பிட்ட சில மக்கள் என் மீது நம்பிக்கை வைத்துள்ளனர்.

இந்த தேர்தலில் காங்கிரஸிற்கு மிகக் குறைந்த வாக்குகள் கிடைத்தாலும் மிகக் குறைந்த தொகுதிகள் கிடைத்தாலும் கூட ஏழை மக்களுக்காக போராடுவதை கைவிட மாட்டேன். எனக்கு எதிராக கறுப்புக் கொடி காட்டுவதற்கு நான்கு அல்லது ஐந்து பேரை அனுப்புவதால் நான் ஓடி விடுவேன் என நினைக்கின்றனர். அது நடக்காது. உ.பியில் தொங்கு சட்டசபை ஏற்பட்டாலும் நாங்கள் எந்த கட்சியுடனும் தேர்தலுக்கு பிந்தைய கூட்டணி அமைக்க மாட்டோம். ஏழைகளுடனும் சாதாரண மக்களுடனும் மட்டுமே கூட்டணி அமைப்போம் என ராகுல் உரையாற்றியுள்ளார். (அ-2)

# தமிழர்களுக்காக தி.மு.க. போராடும்

தஞ்சை மாவட்ட நகர ஒன்றிய தி.மு.க. சார்பில் பொதுக் குழு தீர்மான விளக்க பொதுக்கூட்டம் தஞ்சையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகன் உரையாற்றுகையில்,

தி.மு.க. தோல்வியை கண்டு வருத்தப்படவில்லை. தோல்வி ஒன்றும் நமக்கு புதிது அல்ல. தமிழ் நாட்டில் தமிழர்களுக்காக போராடுபவர்களுக்கு தொடர்ந்து வெற்றி கிடைக்காது. மன்னர்கள் காலத்திலும் அப்படித்தான். ஆனால், இன்றைக்கும் மக்கள் செல்வாக்கு பெற்ற கட்சி தி.மு.க. தான். விஜயகாந்த் நடிகர் என்பதால் சட்டமன்றத்தில் தன்னை மாற்றிக் கொள்ள முடியாது. நடிகர் நடிகராகத்தான் இருப்பார்.

ஜெயலலிதா, தனக்கு எதிராக விஜயகாந்த் பேசத் தொடங்கி விட்டார் என்பதால் சட்டமன்றத்தில் இருந்து வெளியேற்றினார். மகத்தான ஆட்சியை நடத்தியவர் கருணாநிதி. திராவிட இனத்தை காப்பாற்றும் இயக்கம் தி.மு.க. தமிழர்களுக்காக என்றைக்கும் போராடும் இயக்கம் தி.மு.க. மக்களை பற்றி ஜெயலலிதாவுக்கு அக்கறை இல்லை.

திராவிட இனத்தை உணர்வுபூர்வமாக வளர்த்த இயக்கம் தி.மு.க. இந்த இயக்கத்தை தவிர வேறு இயக்கம் கிடையாது என அவர் பேசினார். (அ-2)

# இந்தியாவுக்கான நிதியுதவி தொடந்து வழங்கப்படும்

(லண்டன்)

இந்தியாவுக்கான நிதி உதவித் திட்டங்கள் தொடர்ந்து வழங்கப்படும் என்று இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் உறுதிபட தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு வழங்கி வரும் உதவிகளை நிறுத்த வேண்டும் என்றும் வளர்ந்த நாடுகளின் நிதியுதவிகளை நம்பியிருக்க வேண்டிய நிலையில் இந்திய அரசு இல்லை என்றும் இங்கிலாந்தின் ஆளும் கட்சி எம்.பிக்கள் சிலர் வலியுறுத்தியிருந்தனர்.

இதனால் தற்போது பல்வேறு திட்டங்களுக்கான நிதியுதவியை இங்கிலாந்து நிறுத்தக் கூடும் என தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில் லண்டனில் நிருபர்களிடம் கூறிய இங்கிலாந்து பிரதமரின் செய்தித் தொடர்பாளர் இந்தியாவுக்கு உதவுவது பற்றி மறுபரிசீலனை செய்யப்பட்டது. ஏற்கனவே அறிவிக்கப்பட்ட உதவிகளைத் தொடர்வது என்று நாங்கள் முடிவு செய்துள்ளோம்.

இந்தியாவுக்கு தொடர்ந்து உதவிகள் வழங்கும் அதேவேளையில் ஏழ்மை நிலையில் உள்ள மூன்று மாநிலங்களில் மட்டும் கவனம் செலுத்துவது என்று முடிவு செய்துள்ளோம். உலக அளவில் மிகுந்த வறுமையில் வாடும் மக்களில் குறிப்பிட்ட அந்த மூன்று மாநிலங்களில் ஏராளமானோர் உள்ளனர். ஏழைகளுக்கு உதவுவது என்ற நிலைப்பாட்டில் மாற்றமில்லை. எனவே, இந்தியாவுக்கான உதவிகள் தொடரும் என்றார். (அ-2)




# காஷ்மீர் பிரச்சினைக்காக இந்தியாவுடன் போரிட முடியாது

## பாக். பிரதமர் தெரிவிப்பு

காஷ்மீர் பிரச்சினைக்காக இந்தியாவுடன் பாகிஸ்தான் போரிடமுடியாது என்று பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி தெரிவித்துள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இருநாடுகள் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இரு நாடுகளும் காஷ்மீர் பிரச்சினைக்காக போராடி வருகின்றன. காஷ்மீர் பிரச்சினையை மையமாக வைத்து இரு நாடுகளுக்கிடையே கார்கில் என்ற யுத்தமும் நடந்துள்ளது.

மேலும் காஷ்மீரை மீட்க வேண்டும் என்ற வெறியோடு ஏகப்பட்ட பயங்கரவாத அமைப்புக்களை பாகிஸ்தான் உருவாக்கி இந்தியாவிற்குள் அனுப்பி நாசவேலைகளில் ஈடுபடுவதும் அவ்வப்போது நடந்து வருகின்றது.

இந்நிலையில் காஷ்மீருக்காக இந்தியாவுடன் பாகிஸ்தான் போரிட முடியாது என்று பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி கூறியுள்ளது வரவேற்கத் தகுந்த விடயமாக அமைந்துள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி கூறியதாவது, காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காண்பதையே நான் விரும்புகின்றேன். ஆனால், இந்தியாவுடன் போரிடுவதற்கு பாகிஸ்தானால் முடியாது என்று தெரிவித்துள்ளார். (அ-2)

# பாக். பிரதமர் கிலானி கட்டாருக்கு விஜயம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் இனிமேல் போர் நடத்த முடியாது என்று அந்நாட்டு பிரதமர் யூசுப் ரஸா கிலானி கூறியுள்ளார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் பிரதமர் செயலகத்தில் அண்மையில் காஷ்மீர் ஒருமைப்பாடு தினம் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் அந்நாட்டு பிரதமர் யூசுப் ரஸா கிலானி கலந்து கொண்டு பேசுகையில்,

காஷ்மீர் மக்களுக்காக அரசியல் ரீதியாக ஆதரவு தெரிவிப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். அதே சமயத்தில் காஷ்மீர் பிரச்சினைகளுக்காக இனிமேல் போர் புரிய முடியாது. ஏற்கனவே 4 முறை போர் புரிந்து விட்டோம். ஆனால், 21 ஆம் நூற்றாண்டில் நாம் போர் நடத்த முடியாது. பேச்சுவார்த்தை மற்றும் தூதரக உறவுகளின் மூலமே காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்றார்.

பிரதமர் கிலானி 2 நாட்கள் பயணமாக கட்டாருக்கு நேற்று முன்தினம் புறப்பட்டு சென்றார். அவருடன் அந்நாட்டு வெளியறவு அமைச்சர் ஹினா ரப்பானிகர், தொழில்நுட்ப கல்வி அமைச்சர் ரியாஸ் ஹுசைன் ஆகியோரும் சென்றுள்ளனர். கட்டாரில் இரு நாட்டு வர்த்தகம் குறித்து விவாதிக்கவுள்ளனர்.

முன்னதாக கிலானி வெளியிட்ட அறிக்கையில் ஆப்கானிஸ்தானில் அமைதி ஏற்படுத்தவே விரும்புவதாகவும் இது தொடர்பான பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள போவதாகவும் குறிப்பிட்டார். (அ-2)

# இராமநாதபுரம் ஊடாக இலங்கைக்கு செம்மரக் கட்டைகள் கடத்தியோர் கைது

(மண்டபம்)

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம், காந்திநகர் கடல் பகுதியிலிருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 35 செம்மரக் கட்டைகளுடன் மூன்று பேர் கைதாகினர். சமீப காலமாக தமிழக கடல் வழியாக இலங்கைக்கு கடத்தல்கள் குறைந்திருந்தன.

இந்திய கப்பற்படை, கடலோர காவற்படை, விமானப்படை, சுங்கத்துறையினர், மன்னார் கடல் பகுதியில் தற்போது தீவிர ரோந்து மேற்கொள்வதில்லை. இதனால் இலங்கைக்கு மீண்டும் கடத்தல் ஆரம்பமாகியுள்ளது.

மண்டபத்தில் கியூ பிரிவு பொலிஸார் சமீபத்தில் ரோந்து சென்றனர். அப்போது அப்பகுதியை சேர்ந்த மூன்று பேர் மண்டபம் மீனவர் காலனியில் பதுங்கினர். அவர்களை பிடித்து விசாரித்தபோது இலங்கைக்கு கடத்துவதற்காக 35 செம்மரக் கட்டைகள் பதுக்கி வைத்திருப்பது தெரிய வந்தது. மரக்கட்டைகளுடன் மூவரையும் கியூ பிரிவு பொலிஸார் சுங்கத் துறையினரிடம் ஒப்படைத்தனர்.

அவர்களில் ஒருவர் கூறுகையில், சென்னையிலிருந்து இலங்கைக்கு கடத்தி செல்வதற்காக ஷேக் என்பவர் பஸ்சில் 35 கட்டைகளை அனுப்பினார் என அவர் கூறினார்.

இலங்கைக்கு தமிழக கடல்வழியாக மரக் கட்டைகள் கடத்தப்படுவது இதுவே முதன் முறை என வனத்துறையினர் கூறினர். (அ-2)

# வரலாற்றுச் சாதனை படைத்த பாகிஸ்தான்



இங்கிலாந்துக்கு எதிராக முதன் முறையாக பாகிஸ்தான் அணி 3:0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை கைப்பற்றி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

டுபாயில், பாகிஸ்தான்-இங்கிலாந்து அணிகள் மோதும் மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் நடந்தது. முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் 99, இங்கிலாந்து 141 ஓட்டங்களை எடுத்தன.

இரண்டாவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணி 365 ஓட்டங்களை எடுத்தது.

மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிபில் இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 36 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

நேற்று முன்தினம் நான்காவது நாள் ஆட்டம் நடந்தது. ஸ்டிராஸ் (26) முதலில் சரிவை தொடங்கி வைத்தார் அடுத்து வந்த டிராட், பீட்டர்சன் இருவரும் தலா 18 ஓட்டங்கள் எடுத்து சஜித் அஜ்மல் சுழலில் பெவிலியன் திரும்பினர்.

நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய அலெஸ்டர் குக் (49 ஓட்டங்கள், 187 பந்துகள்) அரைச் சதம் வாய்ப்பை இழந்தார்.

முன்னணி துடுப்பாட்ட வீரர்களை பாகிஸ்தானின் சுழற்பந்து வீச்சாளர்கள் கவனித்துக் கொள்ள, மிடில் ஓடரை, உமர் குல் வேகத்தில் சிதைத்தார். இவரது பந்து வீச்சில் முதலில் பெல் (10) சிக்கினார். அடுத்து மார்கன் 31 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

கடைசி நேரத்தில் சற்று அதிரடியாக ஓட்டங்கள் சேர்த்தார் பிரையர். சுவான் (01), அன்டர்சன் (09) விரைவில் ஆட்டமிழந்தனர். முடிபில் பனேசர் (08) அப்துல் ரஹ்மானிடம் சிக்க, இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 282 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 71ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

பிரையர் 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். பாகிஸ்தான் சார்பில் சஜித் அஜ்மல் , உமர் குல் தலா 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

முடிபில் 3:0 என டெஸ்ட் தொடரை முழுமையாக வென்று பாகிஸ்தான் அணி கிண்ணத்தை கைப்பற்றி அசத்தியது. சுழல் நாயகன் சஜித் அஜ்மல் தொடர் நாயகன் விருதை வென்றார்.

## இந்திய அணி பலவீனமானது அவுஸ். டீன் ஜோன்ஸ் கருத்து

வெளிநாட்டு மைதானங்களில் தொடர் தோல் விகளை இந்திய அணி சந்தித்துவருவது குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இது குறித்து அவுஸ்திரேலிய முன்னாள் வீரர் டீன் ஜோன்ஸ் கூறுகையில், பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டம் என அனைத்து அம்சங்களிலும் இந்திய அணி பலவீனமாகவுள்ளது.

முத்தரப்பு தொடரில் முதல் போட்டியில்



இந்திய அணி தோல்வி அடைந்ததற்கு பந்து வீச்சு தான் முக்கிய காரணம். எதிர்வரும் போட்டிகளில் இந்திய அணி பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டத்தில் சிறந்து விளங்கும் பட்சத்தில் இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு கடும் நெருக்கடி கொடுக்கலாம் என கூறியுள்ளார்.

கொமென்வெல்த் முத்தரப்பு கிரிக்கெட் தொடரில் இன்றைய இரண்டாம் ஆட்டத்தில் இந்தியாவும் இலங்கையும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

# இங்கிலாந்து வீரர்கள் பாடம் கற்க வேண்டும் அணித்தலைவர் ஸ்ரௌரஸ்

இங்கிலாந்து கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டிலும் தோற்று ஒயிட்வாஷ் ஆனது.

டுபாயில் நடந்த முதல் டெஸ்டில் அந்த அணி 10 விக்கெட் வித்தியாசத்திலும் அபுதாபியில் நடந்த 2ஆவது டெஸ்டில் 72 ஓட்டங்களிலும் இங்கிலாந்து அணி தோற்றது.

தற்போது டுபாயில் நடந்த மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட்டில் 71 ஓட்டங்களில் தோற்றது.



இந்தத் தோல்வி குறித்து இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்ரௌரஸ் கூறியதாவது,

இந்த முடிபு எங்களுக்கு மிகுந்த ஏமாற்றம் அளித்தது. ஆசிய துணைக்கண்டத்தில் விளையாடுவது எங்கள் அணி வீரர்களுக்கு சவாலானதுதான். இந்தத் தோல்வி மூலம் வீரர்கள் ஆசிய கண்டத்தில் எப்படி விளையாட வேண்டும் என்பது குறித்து பாடம் கற்க வேண்டிய அவசியமாகிறது. ஒருநாள் தொடரில் சிறப்பாக விளையாடுவோம் என்ற நம்பிக்கையுள்ளது.

துணைக்கண்டத்தில் இங்கிலாந்து அணி ஒயிட்வாஷ் ஆனது இது 2ஆவது முறையாகும்.

இதற்கு முன்பு இந்தியாவில் 1993ஆம் ஆண்டு 0:3 என்ற கணக்கில் ஒயிட்வாஷ் செய்யப்பட்டது.

பாகிஸ்தான்-இங்கிலாந்து அணிகள் இடையேயான 4 ஒருநாள் போட்டித் தொடரில் முதல் ஆட்டம் வருகின்ற 13ஆம் திகதி அபுதாபியில் நடக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## யுவராஜ் சிங் பூரண குணமடைய இலங்கையில் பிரார்த்தனை

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் யுவராஜ் சிங் கடந்த உலகக் கோப்பையை வெல்ல இவரது பங்களிப்பு முக்கியமாக இருந்தது.



கடந்த சில மாதங்களாக அணியின் இடம் பெறாமல் இருந்த யுவராஜ் சிங்குக்கு நுரையீரலில் கட்டி இருப்பதாக முதலில் தெரிவிக்கப்பட்டது.

தற்போது அது புற்றுநோய் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது. இதற்காக அமெரிக்காவில் கீமோ தெரப்பி சிகிச்சை பெற்று வருகிறார்.


இதற்கிடையே யுவராஜ் சிங் விரைவில் குணமடைய இலங்கை அணி வீரர்கள் பிரார்த்தனை செய்தனர்.

இது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

இலங்கை கிரிக்கெட் வாரியத் தலைவர், நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், கப்டன் ஜெயவர்த்தனே, வீரர்கள் மற்றும் ஊழியர்கள் யுவராஜ் சிங் விரைவில் குணமடைய பிரார்த்தனை செய்தனர்.

அவர் விரைவில் அணிக்கு திரும்பி சக வீரர்களுடன் இணைந்து விளையாட வேண்டும் என்பது எங்களது பிரார்த்தனையாக இருந்தது. விரைவில் குணமடைய வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம் என்றுள்ளது.

## இர்பான் பதானுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்-கங்குலி





முத்தரப்பு தொடரின் அடுத்த போட்டியில் இர்பான் பதானுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கங்குலி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது, இலங்கைக்கு எதிராக இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஒரு சுழற்பந்து வீச்சாளருக்குப் பதிலாக இர்பான் பதானுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

அவுஸ்திரேலியாவுடனான ஆட்டத்தில் வினேய் குமாரும், அவுஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளர்களும் சிறப்பாக செயல்பட்டதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேற்கு வங்காளத்தை சேர்ந்த மனோஜ் திவாரியை அணியில் சேர்க்காதது வியப்பளிக்கிறது. மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான ஆட்டதில் கடும் நெருக்கடியான சூழ்நிலையில் அவர் சதம் எடுத்தார்.

சேவாக்கையும் அணியில் சேர்த்தால் அது பயனுள்ளதாக அமையும். பௌன்சர் பந்துவீச்சை எதிர்கொள்ள சிரமப்படும் சுரேஷ் ரெய்னாவுக்கு ஓய்வு கொடுக்கலாம் என்று கங்குலி தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானால் இந்திய அணியை தோற்கடிக்க முடியும்

இந்தியா, பாகிஸ்தான் அணிகள் விளையாடாதது விரக்தி அளிப்பதாக உள்ளது என பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஷோயப் அக்தர் கூறியுள்ளார்.

இது குறித்து அக்தர் கூறியதாவது, ஏதோ ஒரு சில காரணங்களுக்காக இரு அணிகளும் விளையாடாமல் உள்ளன. இது விரக்தி அளிக்கிறது. இரு நாட்டு ரசிகர்களும் இதனால் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

பாகிஸ்தான் அணி வலுவாகவுள்ளதால் பாகிஸ்தானுடன் விளையாட இந்திய அணி தயங்குகிறது என கிரிக்கெட் வாரியத் தலைவர் ஜகா அஸ்ரப் கூறியுள்ளார். இப்போதைய பாகிஸ்தான் அணியால் எந்த அணியையும் வெல்ல முடியும் என்றார். மேலும் கிரிக்கெட் ஊழல் புகாரில் சிக்கி 5 ஆண்டுகள் தடைவிதிக்கப்பட்டுள்ள வேகப்பந்து வீச்சாளர் முகமது ஆமீருக்கு இன்னுமொரு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

அவர் வயதில் மிகவும் இளையவர் என்பதால் அவரை ஊழல் செய்வதில் சிக்கவைத்து விட்டனர். எல்லோருமே தவறு இழைக்கின்றோம் அவர் தமது தவறை உணர்ந்து கொள்ள வாய்ப்பு அளிக்கவேண்டும். விளையாட்டில் ஊழலைகளைய அவரை ஒரு முன்மாதிரியாகக் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தலைவரும் அமிருக்கு ஆதரவாக கருத்து தெரிவித்திருப்பது ஆறுதல் அளிக்கிறது என்றார்.

# 2012ஆம் ஆண்டின் இறுதிக்குள்...

மின்சாரம் வழங்கப்படுகின்றது.

எந்தவித மின்சார வசதிகளும் இல்லாத கிளிநொச்சியில் தற்போது 30 வீதம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

மின்சாரத்தை சீராக வழங்கப் பல திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். நான் கடந்த 2010ம் ஆண்டு செப்டம்பர் மாதம் யாழ்ப்பாணம் வந்த போது 32 மெகா வாட்ஸ் மின்சாரமே கோரிக்கையாக இருந்தது. ஆனால் தற்போது 44 மெகா வாட்ஸ் மின்சாரம் தேவைப்படுகிறது.

இந்த நாட்டில் பொருளாதாரம் 20வீதம் அதிகரித்துள்ளது. மின்சார சேவை 25 வீதம் அதிகரிக்கிறது.

1987ம் ஆண்டு இந்திய இராணுவம் இங்கு நிலை கொண்டிருந்த போது பயங்கரவாதிகளினால் மின்சார இணைப்புகள் முழுமையாக அழிக்கப்பட்டன.

இருப்பினும் தற்போது மின்சார இணைப்புகள் சரி செய்யப்பட்டுள்ளன. இத்தோடு நேற்று முன்தினம் தேசிய மின்சார இணைப்புடன் பளை வரையிலான மின்சார சேவை இணைக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் கிளிநொச்சி மின்சார நிலையத்தில் இருந்து வடபகுதி முழுவதும் மின்சாரம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது தவிர யாழ்ப்பாணத்தில் அடுத்தவருட முற்பகுதியில் புதிய மின்சார நிலையம் ஒன்றையும் அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் மின்சார பாவனையாளர்களின் தொகை தற்போது மிகவும் அதிகரித்துள்ளது. அத்தோடு சுன்னாகத்தில் உள்ள மின்பிறப்பாக்கி மிகவும் பழைமை வாய்ந்தது. அதனால் இயந்திரக் கோளாறு ஏற்பட்டு மின்சாரம்தடைப்படுவதும் தவிர்க்க முடியாதது.

இதனை நிவர்த்தி செய்ய யாழ்ப்பாணத்தில் 24 மெகா வாட்ஸ் மின்சாரத்தை வழங்கக் கூடியவாறு புதிய மின்சார நிலையத்தை அமைக்கத் தீர்மானித்துள்ளோம்.

இது தவிர தீவுப்பகுதிகளுக்கு சூரிய சக்தியின் ஊடாக மின்சாரம் வழங்கக் கூடிய மின் நிலையத்தை அமைக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

எனவே வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இந்த வருட இறுதிக்குள் யாழ்ப்பாணம் முழுவதும் 98 வீதம் தடையின்றி மின்சாரம் வழங்கப்படும்.

இதே வேளை மீள்குடியேற்றப்பட்டவர்களுக்கு மின்சார இணைப்புக்களை இலவசமாக வழங்க முடிபெடுத்துள்ளோம். மேலும் சட்ட விரோதமாக மின்சாரம் பெறுபவர்களினால் 6 ஆயிரம் மில்லியன் ரூபாய் மின்சார சபைக்கு நஷ்டம் ஏற்படுகிறது.

எனவே வேண்டுகோளாக விடுக்கின்றேன் சட்ட விரோத மின்பாவனையை கைவிடுங்கள் இல்லையேல் எதிர்காலத்தில் கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அத்தோடு இந்த பழைய பூங்கா வளாகத்தில் அலுவலகத்தை அமைப்பதற்கு இடம் ஒதுக்கித்தந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோருக்கு எனது நன்றியை தெரிவிக்கின்றேன்.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு அருகாமையிலுள்ள இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான காணிக்காக இந்த காணியை இவர்கள் ஒதுக்கித்தந்துள்ளார்கள்.

இந்த இடத்தில் அலுவலகத்தை அமைப்பதற்கு திட்டமிட்ட போது பலர் தமது கருத்துக்களைக் வெளிப்படுத்தியிருந்தனர்.

ஒரு கட்டத்தில் இந்த அலுவலகத்தை மாங்குளத்தில் அமைக்க நான் முடிபெடுத்தேன். இருப்பினும் பழைய பூங்கா வளாகத்தினுள் அமைக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தீர்மானித்தார். அதனைத் தொடர்ந்து அந்த முடிபை நான் கைவிட்டேன்.

150 மில்லியன் ரூபாய் செலவில்5 மாடிகளைக் கொண்டதாக இந்தக் கட்டிடம் அமைக்கப்படவுள்ளது. அதன் மூலம் யாழ்ப்பாணத்திற்கு சீரான மின்சாரத்தை வழங்கி யாழ்ப்பாணத்திற்கு வெளிச்சத்தை கொடுக்க முடியும்.

யாழ்ப்பாணத்திற்கு மட்டுமல்லாது வட பகுதி முழுவதும் இந்த அலுவலகத்தினால் பயன் பெற முடியுமென அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.சந்திரகுமார், சில்வஸ்திரி அலெஸ்ரின், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா எனப்பலரும் கலந்து கொண்டனர். (ந-6)

# இலங்கை வரும் அமெரிக்க...

அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கு பொறுப்பான பிரதி இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் மற்றும் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பொது மக்கள் பாதுகாப்பு ஜனநாயகம் மற்றும் மனிதவுரிமைகள் தொடர்பான இரண்டாம் நிலை செயலாளர் மரியா ஓட்டேரோ ஆகியோர் எதிர்வரும் 12ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர். இவ்விஜயத்தின் போது அமைதி, பொறுப்புகூறல் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக அரசாங்கத்துடன் இவர்கள் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் இவர்கள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக ஏ.எவ்.பி செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் தங்கியிருக்கவுள்ளவரை இவர்கள் அரசாங்கத் தரப்பு மற்றும் சமூகப் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடத்துவார்கள் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத்தொடர் ஜெனிவாவில் இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ளநிலையில் இவர்கள் இருவரின் இலங்கைக்கான விஜயம் அமைந்துள்ளது.

இலங்கையில் இடம் பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ள ஐக்கிய நாடுகள் சபை மனித வுரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும் தீர்மானம் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களை ஏற்படுத்தும் என வாஷிங்டன் நம்புகின்றது. அதேவேளை தம்மீது அமெரிக்காவின் அழுத்தங்கள் அதிகரித்துள்ள நிலையில் இந்தியாவின் ஆதரவு தமக்கு பலமாக வுள்ளதாக இலங்கை அரசாங்க வட்டாரம் ஏ.எவ்.பியிடம் கூறியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் இதற்கு முன்னரும் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்கள் ஏற்பட்ட போது சீனா, ரஷ்யா மற்றும் இந்தியாவின் ஆதரவுடன் இலங்கை அதிலிருந்து தப்பிக்கொண்டதாக ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் இலங்கை விஜயத்தை தொடர்ந்து மரியா ஓட்டேரோ இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கும் றொபேட் ஓ பிளேக் பங்களாதேஷிற்கும் செல்லவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-8,11)

# வடக்கில்...

அவசியமானது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இராணுவத்தினரின் பிரசன்னம் மக்களின் வாழ்க்கைத்தரத்தையும், அபிவிருத்தியையும் உறுதி செய்யும் என அரசாங்கம் கூறி வருகின்ற போதிலும் இராணுவத்தினரின் பிரசன்னம் மக்களின் இயல்பு வாழ்க்கைக்குத் தடையாக அமைந்துள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ந-8,11)

# படையினரின் இரகசிய...

குறித்து இவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்ட போரின் போது சரணடைந்த பாலகுமாரன், யோகி, லோரன்ஸ் திலகர், பாப்பா, புதுவை இரத்தினதுரை உட்பட்ட சுமார் 50 விடுதலைப் புலிகளின் போராளிகள் உடற் சோதனைகளின் பின்னர் பேருந்து ஒன்றில் ஏற்றிச்செல்லப் பட்டதை கண்டதாக அச்சம்பவத்தை நேரில் கண்டவர்கள் சாட்சியம் அளித்திருந்தனர்.

ஆயினும் இவர்களின் நிலைமை குறித்து அரசாங்கம் எவ்வித தகவல்களையும் வழங்க மறுத்து வருகின்றது.

இந்நிலையிலேயே வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப்போரின் போது பாலகுமாரன் மற்றும் யோகி ஆகியோர் கொல்லப்பட்டு விட்டதாக மூத்த அமைச்சர் டி.யூ.குணசேகர ஓராண்டுக்கு முன்னர் கூறியிருந்தார்.

பாலகுமாரன் மற்றும் யோகி ஆகியோர் கடுமையான விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக இலங்கை படைத்தரப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஆனால் இவர்கள் இருவரும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனரா என்பது குறித்தோ, அவர்கள் இருவரும் எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறித்தோ தகவல்களை வெளியிட இவ்வட்டாரங்கள் மறுத்துள்ளன. (ந-8)

# உண்மைகளை கண்...

ஏற்கெனவே நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பில் பக்கச்சார்பற்ற சுயாதீன விசாரணைகள் அவசியம் என்பதே பிரித்தானியாவின் நிலைப்பாடு அதில் மாற்றமில்லை யுத்தத்தின் போது கணிசமான அளவு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஆணைக் குழுவின் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய அவர்,

சில சம்பவங்கள் தொடர்பில் மேலதிக விசாரணை அவசியம் என்பதை உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவே வலியுறுத்தியுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் உரிய முறையில் அமுல் படுத்தவதே இலங்கை அரசாங்கம் எதிர்நோக்கி வரும் சவால் என அவர் மேலும்தெரிவித்துள்ளார். (ந-8,11)

# அமைச்சர் ஹெகலிய...

யிலிருந்து கீழே விழுந்து விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சரின் கால்களில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகவும், கால்களில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் மெல்பர்ன் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹோட்டல் அறை மூடப்பட்டிருந்த காரணத்தினால் பெல்கனி வழியாக அறைக்குள் பிரவேசிக்க முற்பட்ட போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. அமைச்சர் விபத்துக்குள்ளான விடயத்தை இலங்கை வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் தங்கியிருக்கும் தமது புதல்வர் சுகவீனமுற்றிருப்பதாகவும் அவரை பார்வையிடுவதற்காக அமைச்சர் அவுஸ்திரேலியாவிற்கு தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஏற்கெனவே வந்த செய்தி 15ம் பக்கத்தில்.) (ந-8,11)

அன்பான சிறுவர்களே!

உங்கள் வலம்புரியில் நாள்தோறும்

**சிறுவர் அரங்கம்**

அம்புலிமாமா கதைகளுடன் இன்னும் பல.

உங்கள் வாசிப்பை தூண்டவும் சிந்தனா சக்தியை வளர்க்கவும் வலம்புரியின் சிறுவர் அரங்கில் நீங்களும் பங்குபற்றுங்கள்.

**பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை**

தகைமையும் விருப்பமும் உடைய ஆண்கள் உடன் நேரில் வரவும்.

மனித வள முகாமையாளர்

**வலம்புரி**

இல.3, 2-ம் ஒழுங்கை,

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

JAFFNA COLLEGE

**JAFFNA COLLEGE**

**Inter-House Athletic Meet 2012**

Chief Guests:

**Mr. Sivaguru Pathmanathan**

Regional Manager, People's Bank, Jaffna Region

&

**Mrs. Kamalawathy Pathmanathan**

Venue : Bicknell Grounds

Date : Wednesday 8th February, 2012

Time : 2.00 pm

You and your friends are cordially invited.

Jaffna College
Vaddukoddai.

Principal

(C-5821)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.